www.padippakam.com

எழுச்சி

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
ஆகஸ்ட் 2001 ■ ரூ. 6

ஹென்றி டிபேன் பேட்டி




"தலித்துகளுக்கு எதிராக இந்திய அரசு"

## உறையாத ரத்தம்



சங்கனாங்குளம் கொடூரம்



# ஜாதி தடையில்லை

## [எஸ்.சி. / எஸ்.டி. நீங்கலாக]

படிப்பகம்

www.padippakam.com



# தொழில் நுட்பக் கல்வியே இன்றைய தேவை



உயர் கல்வியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பெற்றுள்ள வாய்ப்புகளை ஆராயும் போது, கலை மற்றும் சட்டம் போன்ற துறைகளில் போதுமான அளவிலும், அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் மிகக் குறைந்த அளவிலும், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பெறப்படும் உயர்கல்வி அறவே இல்லை என்று கூறும் அளவிற்கு - மிக மிகக் குறைந்த அளவிலுமே தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளனர்.

இதன் விளைவாக, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் பெறும் வேலை வாய்ப்பு மிகவும் குறைந்து காணப்படுகிறது. இத்தகைய கல்வியைப் பெறும் மாணவர்கள் வெறும் கடைநிலைப் பணியை மட்டுமே பெற முடியும். இவர்களின் எண்ணிக்கை அதிகமாக எதிர்காலத்தில் பெருகினாலும், அது தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்நிலையில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

> “இளங்கலைப் பட்டம் மற்றும் சட்டம் படிப்பதால், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கோ அவர்களின் குடும்பத்தாருக்கோ எந்தவிதப் பயனும் இல்லை.
>
> இத்தகைய கல்வியால் இந்துக்களுக்குக் கூட, குறிப்பிடத்தக்க பயன் ஏதுமில்லை என்ற நிலையில், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் உயர் நிலை பெற, அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வியைப் படிக்க வேண்டும்.”

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் வாழ்நிலையில் மாற்றம் பெற,அதிகாரமும் பொறுப்பும் மிகுந்த மேலாண்மைப் பதவிகளைக் கைப்பற்றவேண்டும். மேலாண்மைப் பதவிகள் தான் அரசின் திட்டங்களை வரையறுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் கொண்டவை. இத்தகைய பதவிகளைப் பெற உயர்கல்வி தேவை என்பது கண்கூடான ஒன்று. சராசரியான கல்வியைப் பெற்ற ஒருவர், இத்தகைய பதவிகளை அடைவது மிக மிக அரிது.

இளங்கலைப்பட்டம் மற்றும் சட்டம் படிப்பதால், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் எந்தவிதப் பயனும் இல்லை. இத்தகைய கல்வியால் இந்துக்களுக்குக் கூட, குறிப்பிடத்தக்க பயன் ஏதுமில்லை என்ற நிலையில், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் உயர் நிலை பெற, அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வியைப் படிக்க வேண்டும்.

ஆனால், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பாடங்களில் உயர் கல்வி பெறுவது, அம்மக்களின் பொருளாதார வாழ்வியல் சக்திக்கு அப்பாற்பட்டு விளங்குகிறது. இதன் காரணமாகத்தான், இம்மக்கள் தங்கள் குழந்தைகளை கலை மற்றும் சட்டப் பாடங்களைப் படிக்க அனுப்புகின்றனர். அரசின் போதிய ஆதரவு இல்லாமல், இச்சமூக மக்கள் தொழில் நுட்ப உயர் கல்வி பெறுவது என்பது இயலாத ஒன்றாகும். எனவே, மத்திய அரசு தன்னுடைய நேரடி உதவியை இந்த மக்கள் கல்வி பெறுவதற்கு அளிக்க வேண்டும். அதுதான் நீதியானதாகவும், சரியானதாகவும் இருக்கும்.

இதை மத்திய அரசு தன்னுடைய நிதி ஆதாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும். கல்வியை மத்திய அரசே தன்னுடைய நேரடிக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருவதை நமது சட்ட நெறிமுறைகள் எவ்விதத்திலும் தடுக்கவில்லை. கல்வி என்பது, மாநில அரசின் கட்டுப் பாட்டிற்குள் வரும் ஒரு துறை எனினும், மத்திய அரசு சிறப்புச் சலுகைகளை மாணவர்களுக்கு அளிப்பதை - நமது சட்டம் 150 (2) முழுமையாக அங்கீகரிக்கிறது. அந்தப் பிரிவைப் பயன்படுத்தி மத்திய அரசு, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சமூக முன்னேற்றம், கல்வி ஆகியவற்றைப் பெற வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

இந்தியாவில் மக்கள் முன்னேற்றம் என்ற அடிப்படையில் மத்திய அரசு, 14 நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும், மூன்று லட்சம் நிதி வழங்குகிறது. இந்த நிறுவனங்கள் பல்வேறு மாநிலங்களிலிலிருந்து இயங்கி வருகிறது. அந்தந்த மாநில அரசுகளின் உதவித் தொகையையும் பெற்று வருகிறது. இந்த நிறுவனங்களில் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவர் கூட இதுவரை கல்வி பெறவில்லை.

குறிப்பாக, விஷ்வ பாரதி, சாந்தினிகேசன், தேசிய புள்ளியியல் துறை, விஸ்வேஸ்வரய்யா வேத ஆய்வு மய்யம், இந்திய விஞ்ஞானக் கழகம், பண்டாரகர் ஆய்வு மையம் - பூனா, போஸ் ஆய்வு மய்யம் - கல்கத்தா போன்ற கல்வி நிறுவனங்கள் மாநில அரசுகளின் நிதியைப் பெற்றாலும் மத்திய அரசும் தன்பங்கிற்கு தாராளமாக நிதி உதவி செய்கிறது. இதைத் தவிர்த்து பல்வேறு அறக் கட்டளைகள், நிதி ஆதார நிறுவனங்கள், தொழில் மய்யங்கள் நிதியை வாரி வழங்குகின்றன.

ஆனால், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சிறப்புக் கல்வி பெற எந்த நிறுவனமும் உதவ முன்வருவதில்லை. இதில் மய்ய அரசு சிறப்பு கவனம் செலுத்தி இந்த மாணவர்கள் சிரமமின்றி கல்வி பெற, தன்னுடைய நேரடி உதவியை செய்ய முன்வரவேண்டும். ◇

*'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 10 பக்கம் : 426*

படிப்பகம்

www.padippakam.com

புகைப்படம் : மீனா மயில்



பரந்த வெளியில்
எனக்கான இடம்
தொலைந்து போனது.

உண்மை முகம் கண்டு
இரங்கவில்லை யாரும்
கற்கவும் விடாமல்
உழைக்கவும் விடாமல்
துரத்திய பசியை
பழிவாங்க
அரிதாரமிடுகிறேன்.

இனி
ஏமாற எல்லோரும்
தயாராய் இருங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## பொருளடக்கம்



33

8 கண்டனம்
சாதி தீண்டாமை பற்றி
விவாதிக்கத் தடை போடாதே

10 பூலான்தேவி
ரத்தத்தால் எழுதிய செய்தி
ஆதவன்

12 உறையாத ரத்தம்
சுடுகாடாய் சங்கனாங்குளம்
மீனா மயில்

16 இனம்
சாதி - தீண்டாமை உள்நாட்டுப் பிரச்சனையா...?
கவுதம சன்னா

20 சமூகம்
'நாடு' கட்டமைப்பும் ஜாதி ஆதிக்கமும்
விடியல்

22 தீண்டாமை
ஜாதி தடையில்லை (எஸ்.சி./எஸ்.டி நீங்களாக)
அழகிய பெரியவன்

26 பேட்டி
"தலித்துகளுக்கு எதிராக இந்திய அரசு"
ஹென்றி டிபேன் பேட்டி

30 போராளி
மால்கம் எக்ஸ் தொடர்
ரவிக்குமார்

33 கொடுமை
தீக்கிரையான திராசு சேரி
சுரேஷ்

19 அறிமுகம்
காலிகளுக்கு கவிஞர் பட்டமா?
ரா. குருநாதன்

29 நிகழ்வு
தலித் பெண்ணியமே
பெண்ணியம்

36 சாதனை
இசைஞானி பற்றிய
ஓர் இசை அலசல்
டாக்டர் கே.ஏ. குணசேகரன்

38 நம்மைச்சுற்றி
இனவெறியும் இனவெறிக்
கெதிரான எழுச்சியும்
மாயா

40 இரங்கல்
தமிழ் சினிமாவின் முகம்
வே. மதிமாறன்



16

■ அட்டை வடிவமைப்பு : ஆர்.ஆர். சீனிவாசன்
■ இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ்
■ முன் அட்டைப் புகைப்படம் : 'காஞ்சனை' மணி
■ பின் அட்டைப் புகைப்படம் : குட்டி ரேவதி



படிப்பகம்

www.padippakam.com

# டர்பன் மாநாடு : ஒரு திருப்புமுனை

தலித் மக்களின் வீரஞ்செறிந்த போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளாக தலித் மக்கள் மீது நடைபெறும் வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்த, நல்லதோர் வாய்ப்பு கிட்டியுள்ளது. ஆம். அய்க்கிய நாடுகள் அவை, ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 7 வரை, உலகெங்கும் நிலவும் இன வெறிக்கு எதிராக, மாபெரும் மாநாட்டை நடத்தவிருக்கிறது. தென்னாப்பிரிக்காவில் உள்ள டர்பன் நகரில் நடைபெறும் இம்மாநாட்டில், 'இந்தியாவில் நிலவும் சாதி - தீண்டாமைக் கொடுமைகள் பற்றி விவாதிக்க வேண்டும்' என தலித் இயக்கங்களும் மனித உரிமை அமைப்புகளும் குரலெழுப்பியுள்ளன.

ஆனால், சாதி - தீண்டாமை பற்றிய விவாதத்தைத் தடுக்க இந்திய அரசு முயலு கிறது. காரணம், சாதிப்பிரச்சினை, உலகளவில் விவாதிக்கப்படும்போது, சாதி அமைப்பின் மேல் அடுக்கில் உள்ள அதிகார வகுப்பினரின் ஆதிக்கம் தகர்ந்துவிடும். எனவேதான், விவாதத்திற்குத் தடைபோடும் முயற்சிகளை செய்து வருகிறது. இதற்கு ஆளும் வகுப்பும் 'இந்துத்துவ' அமைப்புகளும் மக்கள் தொடர்பு அமைப்புகளும் துணைபுரிகின்றன.

'சாதிப்பாகுபாடு இந்தியாவில் இல்லை' என்றும் அதை 'இனப்பாகுபாட்டுடன் ஒப்பிட முடியாது' என்றும் அது 'உள்நாட்டுப் பிரச்சினை' என்றும் கூறும் இந்தியா இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையில் மட்டும் - எந்த அடிப்படையில் தலையிடுகிறது? இந்த நாட்டின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்காக இருக்கக் கூடிய, 26 கோடி மக்கள் நாள்தோறும் சந்திக்கும் வன்கொடுமைகள் எப்படி உள்நாட்டுப் பிரச்சனையாகும்?

இலங்கை போன்ற பிற நாடுகளில் நடைபெறும் இனவெறி, உலக அரங்கில் எதிரொலிக்கின்றது. ஏனெனில், அங்கு தாக்குதலும் எதிர்த்தாக்குதலும் முழுவீச்சுடன் நடைபெறுகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை, சாதிப் படுகொலைகள் கூட 'அகிம்சா' வழியிலேயே நடைபெறுகின்றன. பாதிப்புக்கு உள்ளாகும் மக்களே அதை இயல்பான வாழ்வியல் முறையாக எடுத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், இப்பிரச்சினை உலக அரங்கில் இதுநாள் வரை எழுப்பப்படாததற்குக் காரணம், உலகில் எங்கும் இல்லாத கொடுமையாக, இங்குள்ள மதமே இன வெறிக்கு முழு அங்கீகாரம் கொடுக்கிறது. இந்து மதம் தன் மக்கள் மீதே இனவெறியை ஏவிவிடும் கொடுமையை உலகில் வேறு எங்கும் காண முடியாது. இக்கொடுமைகளுக்கு - இந்த அரசு பாதுகாப்பாக இருக்கிறது என்பதுதான் வேதனையான சூழல்.

எனவே, சாதி அமைப்பின் மூலம் ஆதிக்கம் செலுத்துகின்றவர்கள், இதை ஒழிக்க ஒருபோதும் முன்வர மாட்டார்கள். விழிப்புணர்வு பெற்றுள்ள தலித் மக்கள் - இன்றைக்கு இந்த அமைப்பை எதிர்த்துப் போரிடத் தொடங்கி விட்டனர். இந்தப் போராட்டம், எல்லா சவாலையும் சந்திக்கும். சாதி அமைப்புக்கு தலித்துகளே சமாதிகட்டுவர். இதற்கு டர்பன் மாநாடு பெருமளவில் உதவும். இந்த அரிய வாய்ப்பை நாம் தவறவிட்டு விடக் கூடாது.

டர்பன் மாநாடு, சாதி குறித்து சில முக்கிய செய்திகளை விவாதிக்க வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம் :

- **ஆப்பிரிக்காவில் நிலவும் இன வெறி, இருநூறு ஆண்டுகளுக்கு முந்தியது. ஆனால், இந்தியாவில் இன்றளவும் நிலவும் இன வெறி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முந்தியது - கொடியது. எனவே, அய்க்கிய நாடுகள் அவை இந்தியாவில் இனவெறியை ஒழிக்க முன்னுரிமை அளிக்க வேண்டும்.**
- **மனித இனத்துக்கு முற்றிலும் எதிராக உள்ள சாதியை - இனப்பாகுபாடே என்று அய்.நா. அவை அறிவிக்க வேண்டும்.**
- **அய்.நா. ஒரு குழுவை அமைத்து, இந்தியாவில் நடைபெறும் சாதிக் கொடுமைகள் பற்றி ஒவ்வொரு ஆண்டும் அறிக்கை வெளியிட வேண்டும்.**
- **தலித் மக்கள் மீதான இனப் படுகொலைகளுக்கு அய்.நா.அவை முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.**

எழுச்சி தலித் முரசு

Volume : 5 Issue : 2

ஆகஸ்ட், 2001

ஆண்டு : 5 - இதழ் : 7

ஆசிரியர், வெளியிடுபவர்

பெ. சந்திரசேகரன்

பொறுப்பாசிரியர்

புனித பாண்டியன்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100/-

நூலகக் கட்டணம் : ரூ. 200/-

வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

முகவரி

H-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை கே.கே. நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 371 66 88

தொலைநகல் : 474 11 88


E-mail : ambedkar@md4.vsnl.net.in



படிப்பகம்

www.padippakam.com






**சோ**திடத்தை பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் சேர்க்க மத்திய அரசு முயலுவது கண்டிக்கத்தக்கது. அய்ரோப்பாவின் 19 ஆம் நூற்றாண்டு மதவெறி, தற்போது இந்தியாவின் அறிவியலை அச்சுறுத்தி வருகிறது. உலக மக்களுக்கு அறிவியல், எல்லை இல்லாத செல்வத்தை வாரி வழங்கிவரும் வேளையில் - இந்தியாவில் மதமூட நம்பிக்கை மூலம் கறுமை படர்ந்துள்ளது.

**- புத்ததேவ் பட்டாச்சாரியா**,
மேற்கு வங்க முதல்வர், செய்தியாளர்களிடையே.

**இ**ந்தியாவின் மிகப்பெரிய நிதி முதலீட்டு நிறுவனமான 'யூனிட் டிரஸ்ட்'இல் பொது மக்களின் 40,000 கோடி ரூபாய் சேமிப்புப் பணத்தினைச் சிரழித்து மிகப்பெரிய நம்பிக்கை மோசடி நடந்துள்ளது. பொதுச் சொத்தைக் கொள்ளையிட்ட அதிகாரிகளுக்கும் மிகப் பெரிய பணக்காரர்களுக்கும், எவ்விதத் தண்டனையும் கிடையாது. இதுதான் வாஜ்பேயி தருவதாக வாக்களித்த 'ஊழலற்ற தேசபக்தர்களின்' ஆட்சியா?

**- பீட்டர் அல்போன்ஸ்,** தமிழ் மாநில காங்கிரசின் முன்னணித் தலைவர், 'தமிழன் எக்ஸ்பிரஸ்' இதழில்

**இ**ந்தியாவில் ஆண்டுதோறும் 6.44 கோடி பெண் குழந்தைகள் பாலியல் கொடுமைக்கு ஆளாகிறார்கள். இதில், 20 சதவிகிதம் பேர் 15 வயதுக்குக் குறைவானவர்கள் என்பது வேதனைக்குரியது.

- அய்தராபாத்தில் உள்ள பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரம்.

**பூ**லான் தேவியின் வாழ்க்கை, இந்தியப் பெண்கள் சந்திக்கும் இரண்டு வகை வன்முறைக்கும் ஒரு உதாரணம். அவை, குடும்ப வன்முறை, சாதி வன்முறை. பூலான் தேவியை காலம் மறக்காது. ஏனென்றால், ஒவ்வொரு பெண்ணிலும் அவரது பிம்பம் ஏதோ ஒரு மூலையில் எதிரொலிக்கிறது. இதயத்தின் ஆழத்தில் எடுக்க முடியாத முள்ளின் உறுத்தலாய் அவர் நினைவு அருவிக் கொண்டிருக்கிறது.

- வழக்குரைஞர் **அருள் மொழி,** 'தினமணி' கட்டுரை ஒன்றில்.

**ம**தச்சார்பற்ற நாடான இந்தியாவில், விரும்புகிற மதத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை அனைவருக்கும் உண்டு. மத மாற்றத் தடை சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கூறுவது, தனி மனித உரிமைகளைப் பறிக்கும் செயலாகும்.

**- ஏ.கே. தாஜுதீன்,**
முஸ்லிம் மக்கள் கழகம், அறிக்கை ஒன்றில்.



படிப்பகம்

www.padippakam.com




சிவகாமி, கண்ணகி, இந்திரன், பேரவைத் தலைவர் காளிமுத்து, ரஷ்ய பண்பாட்டு மய்ய இயக்குனர், சந்தான ராஜ்

'விடுதலையின் வண்ணங்கள்' - தலித் ஓவியர்களின் நூல் வெளியீட்டு விழா

# "ஜாதி சங்கத்தை உருவாக்க அல்ல..."

விடுதலையை நோக்கிப் பயணப்படும் சமூகத்தின் அனைத்துக் கூறுகளும் அனைத்துத் தளங்களிலும் கிளர்ந்தெழ வேண்டும்' என்கிறார் புரட்சியாளர் அம்பேத்கர். கடந்த பத்தாண்டு காலமாக தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் தலித் எழுச்சியில் - மறு உருவாக்கமும் உத்வேகமும் அடைந்த தலித் கலைகள், தமிழ்ச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

இதன் தொடர்ச்சியாக, 1997இல் அறிவு ஜீவிகளின் மொழி என்றறியப்பட்டிருக்கும் ஓவியக் கலையிலும் பல சகாப்தங்களை உருவாக்கிய தலித் ஓவியர்களைத் தமிழக அளவில் ஒன்று திரட்டியது, மதுரை 'தலித் ஆதார மய்யம்'. அங்கு படைக்கப்பட்ட தலித் ஓவியங்களையும், அதைப் படைத்த ஓவியர்களையும் பதிவு செய்து வெளிவந்திருக்கும் - 'விடுதலையின் வண்ணங்கள்' நூல் வெளியீட்டு விழா, சூலை 27 அன்று சென்னை - ரஷ்ய பண்பாட்டு மய்யத்தில் நடைபெற்றது.




"தலித் மக்களின் உணர்வுகளை ஓவியக்கலையின் மூலம் வெளிக்கொணர எண்ணினோம். தமிழக அளவில் ஓவியர்களை ஒருங்கிணைத்து நடத்திய பட்டறையில் உருவாகிய படைப்புகளையே - இந்தப் புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறோம். 1998இல் தென் மாவட்டங்களில் நடந்த சாதிய வன்கொடுமையால் கடுமையாக பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு நேரில் சென்று, நம் ஓவியர்கள் தங்களின் மனக் குமுறலை ஓவியமாக வடித்தனர். அந்தப் படைப்புகளும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன" என்றார், தலித் ஆதார மய்யத்தின் இயக்குனர் மோகன் லார்பீர்.

நூலை வாழ்த்திப் பேசிய கலைவிமர்சகரும் எழுத்தாளருமான இந்திரன், "இப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஓவியங்களைப் படைத்தளித்தவர்கள், சர்வதேச அளவில் சிறந்த ஓவியர்கள். இவர்களெல்லாம் 'தலித்' என்ற அடையாளத்தின் கீழ் வந்து நிற்பது தலித் மக்களுக்குக் கிடைத்த பெருமை. இந்நூல், இன்னொரு ஜாதி சங்கத்தை உருவாக்குவதற்காக அல்ல. சாதிகளற்ற சமூகத்தைப் படைப்பதற்காக - தமிழ்ப் பண்பாட்டைக் காப்பதற்காக" என்றார்.

இந்திய ஓவிய வரலாற்றில் மாபெரும் ஓவியமேதையாக அறியப்பட்டுள்ள ஓவியர் சந்தானராஜ், எழுத்தாளர் சிவகாமி, கண்ணகி அய்.ஏ.எஸ்., ரஷ்ய பண்பாட்டு மய்யத்தின் இயக்குநர் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு பேசினர்.

தலித் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கிய கலை ஆவணமாக வெளிவந்திருக்கும் இந்நூல், விடுதலைக் கருத்தியலோடு கலகம் செய்யும் வண்ணங்களின் தொகுப்பு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இவ்வளவு முக்கியமான நூலை, தலித் மக்களுக்கோ, தலித் கலைகளுக்கோ, சிறிதும் தொடர்பற்ற பேரவைத் தலைவர் வெளியிட்டது வருத்தமளித்தது. தமிழக நூலகங்களில் இந்நூல் வாங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இது நடந்திருக்குமானால், நிச்சயம் இந்தக் கலை முயற்சிக்கு இது ஒரு பின்னடைவுதான்.

- நம் செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com






சாதி, தீண்டாமை பற்றி

விவாதிக்கத் தடை போடாதே

# ஆர்ப்பாட்டம்

தென்னாப்பிரிக்காவில் நடைபெற இருக்கும் அய்க்கிய நாடுகள் அவையின் இனவாதத்திற்கு எதிரான மாநாட்டில் சாதி, தீண்டாமைக் கொடுமைகளையும் விவாதிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், தொடர் முழக்கப் போராட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடைபெறத் துவங்கியுள்ளன. அதன் முதல் கட்டமாக சென்னை மற்றும் சேலத்தில், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னையில் - தெற்கு ரயில்வே தலைமை அலுவலகத்திற்கு அருகில் உள்ள அஞ்சல் நிலையத்தின் முன்பு, த.பெ.தி.க.வின் சென்னை மாவட்ட கழகத் தலைவர் எ. கேசவன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. "அய்.நா. மன்றமே அய்.நா. மன்றமே! டர்பன் மாநாட்டில் தீண்டாமை பற்றி விவாதம் நடத்து" / தடுக்காதே தடுக்காதே! அய்.நா. கூட்டத்தில் தீண்டாமையை விவாதிக்க மத்திய அரசே தடுக்காதே! / மனித உரிமைகளுக்கு எதிரான மநுநீதிக்குத் தடைபோடு; மத நூல்களுக்குத் தடை போடு" என்ற முழக்கங்கள் விண்ணைப்பிளக்க, 2 மணி நேரம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இருநூறுக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், இயக்கத்தின் முன்னணித் தலைவர்களான ஆனூர் ஜெகதீசன், மு. பாலகுரு, பேரா. சரசுவதி, பத்ரி நாராயணன், எஸ். நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். மற்றும் பல இயக்கங்களைச் சார்ந்தவர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் நிறைவுரையாற்றிய 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பாளர் திருமாவளவன், "கறுப்பின மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி, அவமானத்தைக் காட்டிலும் கீழ்சாதி என்ற பெயரால் இந்தியாவில் தலித் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி கொடியது. எனவே, சாதி தீண்டாமை குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும்" என்றார்.

இப்பிரச்சனையை வலியுறுத்தி சேலத்தில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்தில் த.பெ.தி.க.வின் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட முன்னணி பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். இறுதியில், ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை வகித்த த.பெ.தி.க.வின் பொதுச் செயலாளர் 'விடுதலை' க. ராசேந்திரன் தமது உரையில்,

'சாதி, தீண்டாமை உள்நாட்டுப் பிரச்சனை அல்ல. இலங்கை, நேபாளம், வங்கதேசம், ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளில் இப்பிரச்சனை வெவ்வேறு வடிவங்களில் உள்ளது. வெளிநாடுகளில் இந்தியர்கள் குடியேறியுள்ள பகுதிகளிலும் இப்பிரச்சனை உள்ளது. டர்பன் மாநாட்டு விவாதப் பொருள்களை தீர்மானிக்கும் ஆய்வுக்குழு கூட, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது தவறில்லை என்று கூறியுள்ளது. இருப்பினும், மத்திய அரசு அனுமதிக்க மறுக்கிறது. எனவே, சாதி, தீண்டாமைக்கு எதிரான இயக்கத்தை உலகளாவிய இயக்கமாக மாற்றுவோம்" என்றார்.

இதுபோன்ற தொடர் ஆர்ப்பாட்டங்களின் மூலமே, மத்திய பா.ஜ.க. அரசு சாதியை ஒழிக்க முட்டுக்கட்டை போடுவதை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்த முடியும். ●

- நம் செய்தியாளர்




சாதி, தீண்டாமை பற்றி

விவாதிக்கத் தடை போடாதே

# தொடர் முழக்கம்

இனவெறி மற்றும் இனப்பாகுபாட்டுக்கு எதிராக உலக அளவிலான மாநாட்டை அய்க்கிய நாடுகள் அவை, தென் ஆப்பிரிக்காவில் உள்ள டர்பனில் ஆகஸ்டு 31 முதல் செப்டம்பர் 7 வரை நடத்துவது அனைவரும் அறிந்ததே.

இனவெறி பற்றி பேசவிருக்கும் இம்மாநாட்டில், இனவெறியை விட கொடூரமான சாதிவெறி, தீண்டாமைக் கொடுமைகள் பற்றி விவாதிக்க வேண்டும் என்று அய்.நா. அவையை கேட்டுக் கொள்வதோடு இம்மாநாட்டில் சாதியம் பற்றிப் பேசுவதைத் தடை செய்யும் இந்திய அரசை, தமிழ் நாடு தலித் பெண்கள் இயக்கம் வன்மையாகக் கண்டித்தது.

தமிழ் நாடு தலித் பெண்கள் இயக்கம், தமிழகப் பெண்கள் எழுச்சி அமைப்பு - மக்கள் இயக்கங்கள், மனித உரிமை இயக்கங்கள் அனைத்தும் இணைந்து தொடர் முழக்கப் போராட்டம் ஒன்றை சென்னை அரசு விருந்தினர் மாளிகை எதிரில், சூலை 20 அன்று நடத்தின. இத்தொடர் முழக்கப் போராட்டத்தில், பர்னாட் பாத்திமா, பேரா. சரஸ்வதி, வழக்கறிஞர் எப்சிபா, எஸ். நடராஜன், டி.எஸ்.எஸ். மணி மற்றும் பலர் பங்கேற்று உரை நிகழ்த்தினர். ●

- குட்டி



படிப்பகம்

www.padippakam.com





சாதி, தீண்டாமை பற்றி

விவாதிக்கத் தடை போடாதே

# கருத்தரங்கம்

இந்திய அரசே, நிறவெறியை விவாதிக்கலாம் - சாதிய வெறியை விவாதிக்கக்கூடாதா?' என்ற தலைப்பில் மனித உரிமைக் கருத்தரங்கம் ஒன்றை ஜூலை 19அன்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு சென்னையில் நடத்தியது.

தென்னாப்பிரிக்காவின் டர்பன் மாநகரில் ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 7வரை நடைபெறவுள்ள அய்.நா. அவையின் நிறவெறிக்கெதிரான உலக மாநாட்டில், சாதி - வன்கொடுமைகள் பற்றிப் பேசுவதற்கு இந்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் உரை நிகழ்த்திய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா. திருமாவளவன், ''சர்வதேச விவாதப் பொருளாக சாதிய வன்கொடுமைகளை விவாதிக்கக் கூடாது என இந்திய அரசு கருதுவது, இந்துத்துவ சாதிய கட்டமைப்பைப் பாதுகாப்பதில், இந்திய அரசு உறுதியாக இருப்பதைக் காட்டுகிறது'' என்றார்.

கருத்தரங்கில் தமிழர் தேசியக் கழக அமைப்பாளர், சுப. வீரபாண்டியன் மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை க. ராசேந்திரன் ஆகியோர் - 'சாதிய வெறியும் இனவெறியே' என்பதற்கு ஆதரவுக் குரல்எழுப்பினர். மேலும், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற அமைப்புகள் இப்பிரச்சனை தொடர்பாக நடத்தும் போராட்டத்தில் தங்கள் ஆதரவு என்றென்றும் இருக்கும் என்றும் உறுதியளித்தனர்.

அடுத்து பேசிய தமிழக - புதுவை பி.யு.சி.எல். தலைவர் ரவிக்குமார், ''இனி தலித் மக்களை யாரும் பிரதிநிதித்துவப் படுத்தத் தேவையில்லை. அவர்களை அவர்களே பிரதிநிதித்துவப் படுத்திக் கொள்வார்கள்'' என்று முழங்கினார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய 'மக்கள் கண்காணிப்புக் குழு'வின் என்றி டிபேன், சாதிய வன்கொடுமைகளை மனித உரிமை மீறலாகக் கூட கருதாத மனோநிலை - இங்குள்ள அரசியல் கட்சிகளிடம் உள்ளது என்றும் சாதிய வன்கொடுமைகளை சர்வதேச விவாதப் பொருளாக மாற்றக் கூடாது என்பதில் அரசு உறுதியாக இருப்பதாகவும் ஆதாரத்துடன் எடுத்துரைத்தார்.

> **❝ தலித் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டப் பேரவை உறுப்பினர்களும் இதர ஜனநாயக முற்போக்கு அமைப்புகளைச் சார்ந்த சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் சாதிப் பிரச்சனை குறித்து, டர்பன் மாநாட்டில் விவாதிக்கும்படி இந்திய அரசை வலியுறுத்தி மக்களுக்கான அவைகளில் குரல் எழுப்ப வேண்டுகிறோம். ❞**

சாதி வேறு; இனம் வேறு. எனவே சாதியைப் பற்றிப் பேசத் தேவையில்லை எனக் கூறும் இந்திய அரசு, 1969இல் நிறவெறிக்கெதிரான அய்.நா.வின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதைச் சுட்டிக் காட்டிய அவர், ''பிறப்பின் அடிப்படையிலோ, வேறு எந்த அடிப்படையிலேயோ யாரையும் இழிவுபடுத்தக்கூடாது'' என்ற அய்.நா.வின் பிரகடனத்தை இந்திய அரசு ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டுள்ள நிலையில், சாதியப் பாகுபாட்டை இனப்பாகுபாடாக ஏற்க மறுப்பது ஏன்? என்ற கேள்வியை எழுப்பினார்.

அது மட்டுமின்றி, சாதியப் பாகுபாடு அய்.நா.வின் நிறவெறிக்கெதிரான மாநாட்டில் விவாதிக்கப்படாமல் இருப்பதற்காக இந்திய அரசு மேற்கொண்ட பல்வேறு நிகழ்வுகளை விளக்கிப் பேசிய என்றி, இந்தியாவில் நிலவும் சாதிவெறி, இனவெறிக்கும் முந்தையது - கொடியது. அதனை அய்.நா. அவையில் விவாதிக்க வைக்கும் முயற்சியாக ஒன்றாக சட்டப் பேரையில், நாடாளுமன்றத்திலும் இதற்கு ஆதரவு குரலெழுப்பும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதன் துவக்கமாக, வரும் சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் திருமாவளவன், தங்கள் ஆதரவு எம்.எல்.ஏ. வுடன் இதனை எழுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கருத்தரங்கின் முடிவில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- ***'தேசிய மனித உரிமைகள் ஆணையம்', 'தேசிய எஸ்.சி./எஸ்.டி. ஆணையம்', 'தேசிய பெண்கள் ஆணையம்' போன்ற அமைப்புகள் டர்பன் மாநாட்டில் - சாதிப் பிரச்சினையை பேச இந்திய அரசை வலியுறுத்த முன்வர வேண்டும்.***
- ***டர்பன் மாநாட்டுக்கு இந்திய அரசின் சார்பில் அழைத்துச் செல்லப்படும் தலித் பிரதிநிதிகள், இந்தியாவில் 'தீண்டாமை இல்லை' என்றும் 'சாதியவாதம் இனவாதமல்ல', என்றும் இந்திய அரசால், இத்தகு மாநாடுகளில் பேச வைக்கப்படுகிறார்கள். அத்தகைய பிழைப்புவாத கைக்கூலிகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். எச்சரிக்கிறோம்!***

**- விடியல்**



படிப்பகம்

www.padippakam.com

■ ஆதவன்

# ரத்தத்தால் எழுதிய செய்தி



பூலான்தேவி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். 'இருபது ஆண்டுகளுக்கு முன் பெமாய் என்ற ஊரில் இருபத்திரண்டு தாக்கூர் ஜாதி ஆண்களை பூலான்தேவி சுட்டுக் கொன்றதற்குப் பழிவாங்கவே அவரைக் கொன்றேன்' என கொலையாளி ராணா கூறியிருக்கிறான். அவன் சொல்வது உண்மையா? இந்தக் கொலையில் இன்னும் யார் யாருக்குத் தொடர்பிருக்கிறது என்பதை போலிஸ் தேடிக்கொண்டிருக்கிறது. அந்த உண்மைகள் வெளிவராமலேயேகூட போய்விடக்கூடும்.

டெல்லியில் நடக்கிற எண்ணற்ற கொலைகளில் இதுவும் ஒன்று என சில நாட்களில் பத்திரிகைகளில் இதுவும் கவர்ச்சியிழந்து போய்விடும். ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இப்படி மறந்துபோகிற விஷயமல்ல இந்தக் கொலை. பூலான்தேவியின் ரத்தம் எழுதிய செய்தியை, நாம் மனதில் ஏந்திக்கொள்ள வேண்டும். அந்தச் செய்தி என்ன?

1963இல் உத்திரப்பிரதேசத்தில் சட்டென்று நினைவுக்கு வராத பெயர் கொண்ட ஒரு கிராமத்தில் பிறந்தவர் பூலான்தேவி. 11ஆவது வயதில் அவரை விட மூன்று மடங்கு மூத்தவரான ஒருவருக்குத் திருமணம் செய்து தரப்பட்டு அந்த நபரால் சித்ரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டவர். அவரிடமிருந்து தப்பி வந்த பூலான்தேவியை அரவணைக்க யாருமில்லை. கணவனுக்கு அடங்கி நடக்காத அடங்காப் பிடாரியாகக் கருதப்பட்டு நிந்திக்கப்பட்டார்.

> **பூலான்தேவியின் துணிச்சல், பெண்களுக்குப் பெருமை பொங்கும் பேச்சாக மாறியபோது, ஆதிக்க சாதி ஆண்களுக்கு அது சவாலாகத் தென்பட்டது. அவரது வாழ்க்கை கலகக் குறியீடாக கருதப்பட்டது.**

மீண்டும் பூலான்தேவிக்குதிருமணம்செய்து வைக்க ஊர் பஞ்சாயத்து முடிவு செய்து, ஒரு முதியவரை மணமகனாகக் காட்டியது. அதை ஏற்க பூலான்தேவி மறுத்துவிட்டார். ஊர்க்கட்டுப்பாட்டை மீறிய பூலான்தேவி அங்கிருந்து தப்பி ஓட வேண்டியதானது. அவரை போலிஸ் பிடித்து வந்து திருட்டு வழக்கு போட்டது. வழக்கு போட்டது மட்டுமின்றி அவரை சின்னாபின்னப்படுத்தினார்கள் போலிஸ்காரர்கள்.

அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படாததால், விடுதலை செய்யப்பட்ட பூலான்தேவி தனது தந்தையோடு கூலி வேலைக்குப்போனார். அங்கு அவருக்கு கூலி மறுக்கப்பட்டது. அவரது உடல் உழைப்பு மட்டும் போதாது, உடலும் வேண்டும் என்று கேட்டார்கள். இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என முடிவெடுத்தார் பூலான்தேவி. தன்னிடம் அத்துமீறி நடந்துகொள்ள முயற்சித்தவர்களை அடித்து விரட்டினார்.

அந்த சமயத்தில்தான் ஒரு இரவில் கொள்ளைக்காரனான பாபா குஜ்ஜார்சிங் என்பவன் பூலான்தேவியை கடத்திச் சென்றான். தனது சாதியைச் சேர்ந்த பூலான்தேவியை தாக்கூரான குஜ்ஜார்சிங் கடத்தி வந்ததை, குஜ்ஜார்சிங்கின் கூட்டத்தில் இருந்த விக்ரம் மல்லாவால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. குஜ்ஜார்சிங்கை கொன்றது மட்டுமின்றி அந்தக் கூட்டத்தின் தலைவனாகத் தன்னையும் தலைவியாக பூலான்தேவியையும் அறிவித்துக் கொண்டான்.

தாக்கூர்ஒருவனைக் கொன்றுவிட்டு மல்லா சாதியைச் சேர்ந்தவன் தலைவன் ஆனதை அந்தக் கூட்டத்தில் இருந்த சிறீராம், லாலாராம் என்ற இரு தாக்கூர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. நேரம் பார்த்திருந்த அவர்கள் விக்ரமைக் கொன்று பூலான்தேவியை சிறைப்பிடித்தனர். மிர்சாபூரிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பெமாய் கிராமத்துக்கு இழுத்துச் செல்லப்பட்ட பூலான்தேவி, அங்கிருந்த தாக்கூர்கள் அனைவராலும் ஒரு மாதம்வரைகற்பழிக்கப்பட்டார். நிர்வாணமாக ஊர்வலம் விடப்பட்டார். முதியவர் ஒருவரின் உதவியால் அங்கிருந்து பூலான்தேவி தப்பித்தார்.

மான்சிங் என்பவரோடு சேர்ந்து பூலான்தேவி தனியே ஒரு கூட்டத்தை உருவாக்கினார். தனது வாழ்க்கையை இப்படி ஆக்கியவர்களைப் பழிதீர்க்கும் வெறியோடு பெமாய் கிராமத்துக்குச் சென்றார். 1981 பிப்ரவரி 14 அன்று அந்த கிராமத்தில் 22 தாக்கூர் ஆண்களை சுட்டுக்கொன்றது பூலான்தேவியின் கூட்டம்.

அதன் பிறகுதான் 1983இல் மத்தியப் பிரதேசத்தில் தனது கூட்டத்தினரோடு அர்ஜுன்சிங் முன்னிலையில் காந்தி, துர்கா படங்களை வணங்கி பூலான்தேவி சரணடைந்தார். பதினோரு ஆண்டுகள் எவ்வித விசாரணையுமின்றி சிறையிலடைக்கப்பட்டிருந்த பூலான்தேவி, 1994இல் ஜாமீனில் வெளியே வந்து 'ஏகலைவன் சேனை' என்ற அமைப்பை உருவாக்கி அரசியலில் நுழைந்தார். பிறகு முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடி கட்சியில் இணைந்தார்.

1996 நாடாளுமன்றத் தேர்தலில் உத்திரப்பிரதேசத்தின் மிர்சாபூர் தொகுதியில் போட்டியிட்டபோது, அவர்வெற்றி பெறுவார் என எவரும் நினைக்கவில்லை. அந்தத் தொகுதியின் 13 லட்



படிப்பகம்

www.padippakam.com

சம் வாக்காளர்களில் ஒன்றரை லட்சம் வாக்குகள் மட்டும்தான் மல்லாக்களுடையவை. அந்த வாக்குகள், வெற்றி பெறுவதற்கு போதுமானவையல்ல. ஆனால், முஸ்லிம் தலைவர்களோடு பூலான்தேவிக்கு இருந்த நெருக்கம், அவர் 27 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற உதவியது.

அவர் பதவியேற்றபோது, பதவியேற்பு உறுதிமொழியைக்கூட சரிவர சொல்லமுடியவில்லை. கையெழுத்துப் போடுவதற்கும் தடுமாறினார். அவரது வெற்றி ஒரு குறியீடாக இருந்ததே தவிர வேறு எதையும் அது சாதிக்கவில்லை. அதனால்தான் 1999 தேர்தலில் அவர் தோற்க நேரிட்டது. ஆனால் அவரை வென்ற வீரேந்திராவும் தொகுதிக்கு எதையும் செய்யமுடியவில்லை. அதனால் மீண்டும் தொண்ணூறாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் கடந்த தேர்தலில் பூலான்தேவி வென்றார்.

தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து வெற்றிகொண்ட பூலான்தேவியின் வாழ்க்கை, கலகக் குறியீடாகக் கருதப்பட்டது. ஏராளமான நூல்கள், திரைப்படம், டாக்குமெண்டரிகள் என உலகெங்கும் அந்தக் குறியீடு விநியோகமானது. அய்.நா. அவையின் கூட்டத்துக்குப் போனார், நோபல் பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்டார். வாழ்வின் இரண்டு துருவங்களையும் அவர் பார்த்துவிட்டாரென்றே சொல்ல வேண்டும்.

இன்றைய உலகில் எந்தவொரு குறியீடும் எளிதில் விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டுவிடும். அதிலும் தமது உள்ளீடு எதுவென உணராத பூலான்தேவி போன்றவர்களை, அவர்களது வாழ்வை பண்டமாக மாற்றுவது, இன்றைய நுகர்வுப் பண்பாட்டில் எளிதாக நடந்துவிடுகிறது. அந்தப் பண்பாட்டின் அத்தனைக் கூறுகளையும் உள்வாங்கியுள்ள அரசியல் உலகமும் அதைத்தான் செய்கிறது.



**"இன்றைய உலகில் எந்தவொரு குறியீடும் எளிதில் விற்பனைப் பொருளாக மாற்றப் பட்டுவிடும். அதிலும் தமது உள்ளீடு எதுவென உணராத பூலான்தேவி போன்றவர்களை, அவர்களது வாழ்வை பண்டமாக மாற்றுவது, இன்றைய நுகர்வுப் பண்பாட்டில் எளிதாக நடந்து விடுகிறது."**

பூலான்தேவியின் அரசியல் பிரவேசம், மல்லா சாதி மக்களுக்கு எதைத் தந்தது? மிர்சாபூர் தொகுதியின் குழந்தைத் தொழிலாளர்களைக் காப்பதற்குக் கூட பூலான்தேவி முன்வரவில்லை. குழந்தைத் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சும் முதலாளிகளில் ஒருவன் தந்த வீட்டில்தான் பூலான்தேவி குடியிருந்தார். 1999 தேர்தலில் பூலான்தேவியை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யக்கூட முலாயம்சிங் யாதவ் வரவில்லை. தொடர்பு சாதனங்களும், வாய் வழிக் கதைகளும் கட்டமைத்திருந்த பூலான்தேவியின் பிம்பம், அரசியலில் லாபம் தரக்கூடியது என்பதை அறிந்திருந்ததால்தான் முலாயம்சிங் அவரை தனது கட்சியில் சேர்த்துக் கொண்டார்.

தனது பிம்பம் திரைப்படத்தில் முன்வைக்கப்பட்டபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் படத்தைத் தடை செய்யக் கோரினார் பூலான்தேவி. "உங்கள் வீட்டுப் பெண்களுக்கு இப்படி நடந்திருந்தால் இப்படி அதைப் படம்பிடித்துக் காட்டுவீர்களா?" எனக் கேட்டார். ஆனால் அரசியல் தளத்திலும் அதே காரியம்தான் நடந்தது என்பதை அவர் உணரவில்லை. அவரது பிம்பம் அவருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளால் வரையப்பட்டது. அதிலிருந்து அவரால் விடுபட முடியவில்லை.

மேற்குலக மீடியாக்களில் அவர் ஒரு 'தலித்' என அடிக்கடி குறிக்கப்பட்டார். 'தலித்' என்ற சொல்லோடு 'கலகம்' என்பதை இணைத்துக் கட்டமைக்கப்பட்டுள்ள - கற்பனைக்கு பூலான்தேவியின் பிம்பம் அனுசரணையாக இருந்ததால், அப்படி அவரை அழைப்பது சுலபமாக இருந்திருக்கலாம். மற்றபடி அவரை தலித் என அழைக்க எந்த நியாயமும் இருக்கவில்லை.

உத்திரப்பிரதேசத்தில் தேர்தல் நெருங்கிக் கொண்டுள்ள நிலையில் பூலான்தேவியின் சாவும் லாபம் தருகிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்து உத்திரப்பிரதேச பா.ஜ.க. அரசு அண்மையில் ஆணை பிறப்பித்தது. அதனால் தங்களது தேர்தல் ஆதாயம் பாதிக்கப்படுமெனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த முலாயம்சிங் கட்சிக்கு, பூலான்தேவியின் படுகொலை நல்வாய்ப்பாக அமைந்து விட்டது.

அடுத்து நடக்கப்போகும் அரசியல் சூதாட்டத்தில், பூலான்தேவியின் படுகொலைக்குக் காரணமானவர்கள் யாரென்பது முக்கியமற்றுப்போய் விடும். ரத்தம் அப்பிய அவரது படம் மட்டும்தான் அங்கு முக்கியம். ஆனால் அந்த ரத்தம் எழுதிய செய்தி - குறியீடுகள் விற்பனைப் பொருட்களாக மாற்றப்படுவது பற்றிய எச்சரிக்கை - அது நமக்கு முக்கியம். அந்த செய்தியை புரிந்துகொள்ளும்போது, பூலான்தேவியை நமது இதயத் துடிப்புக்குள் நினைவுகளின் அடியாழத்துக்குள் நாம் எப்போதும் உணரமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com

'உறையாத ரத்தம்'

# சுடுகாடாய் சங்கனாங்குளம்

## முகம் தொலைத்த பெண்கள்



காலம் மிக மோசமானது. எப்பொழுதும் மிக சாமர்த்தியமாக அது அநீதிகளை மறைத்து விடுகிறது. குறிப்பாக, தலித் மக்கள் அதிலும் பெண்கள் மீது மிக அழுத்தமாகத் தொடரப்படும் வன்கொடுமைகள், சமூக எதார்த்தங்களாகவே பார்க்கப்படுகின்றன. அதோடு சக பெண்ணின் வலியைப் பெண்களே புரிந்து கொள்வதில்லை. பெண்கள் அனைவரும் சாதி, மத எல்லைகளைக் கடந்து ஒன்றிணைய வேண்டிய தேவை அதிகரித்து வருகிறது. அதற்கான முயற்சிகள் அவசரப்படுத்தப்படவில்லை என்றால், விளைவுகள் மோசமாக இருக்கும் என்பது மட்டும் இங்கே வலியுறுத்தப்படுகிறது.

■ மீனா மயில்

வீட்டில் அனைவரும் வேலைக்குப் போயிருந்த ஒரு மதிய நேரம். 16 வயதே நிரம்பிய மஞ்சுளா, தன் வீட்டில் தன் தம்பிகள் முன் வைத்தே துடிக்கத் துடிக்க - பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார்.

கணவர் மணிக்கு மதிய உணவு எடுத்துக் கொண்டுபோன ராஜ செல்வம், தோட்டத்தின் பம்புசெட் அறையில் வைத்து அதே கொடுமைக்கு ஆளானார். எதிர்த்துக் கேட்கப் போன மணியும் அன்று இரவே கொலை செய்யப்பட்டார்.

ஜெபமணி, பிரேமா, வசந்தா, புஷ்பம், கிரேஸ், சொர்ணம், அந்தோணியம்மாள், வசந்தி, சாந்தா உள்ளிட்ட 17 பெண்கள் தாங்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆட்பட்டதாக பகிரங்கமாக அம்பலப்படுத்தினர்.

''மனசுக்குள்ள குழி தோண்டி புதைச்சு வச்சிருக்கேன், தயவுசெஞ்சு அந்த சம்பவத்தை ஞாபகப்படுத்தாதீங்க...'' நினைவுகளில் கீறலைப் பதித்த கடந்த காலத்தை நினைவுபடுத்தத் திராணியற்று கதறி அழுகிறார் மஞ்சுளா.

இருபது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், இந்தத் தலைமுறையினருக்கு, மறைக்கப்பட்ட அநீதிகளை ஞாபகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து - 1980களில் மத்திய அரசின் கவனத்தைத் திருப்பிய சங்கனாங்குளம் என்ற அந்த சிறிய கிராமமும், அங்கு வசித்த தலித் பெண்கள் சந்தித்த பிரச்சினைகளும் இப்பொழுது நினைவுபடுத்தப்படுகின்றன.

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் அருகேயுள்ள சங்கனாங்குளம், தற்பொழுது வசிக்க யாருமற்ற நிலையில் சிதிலமடைந்து கிடக்கிறது. முன்பு 200 தேவர் குடும்பமும், 40 தலித் குடும்பமும் வசித்த ஊர் அது. நிலவுடைமையாளர்கள் எல்லோரும் தேவர்களாக இருப்பதும் - தலித் மக்கள் அவர்கள் நிலங்களில் கூலி வேலை பார்ப்பதும் புதிய விஷயமல்ல. அதனால் தேவர்கள் தங்களால் இயன்ற ஆதிக்கம் அனைத்தையும் தலித் மக்கள் மீது ஏவினர் என்பதையும் சொல்லித் தெரிய வைக்க வேண்டியதில்லை.

> தலித் மக்களின் சேரி மாடசாமித் தேவரின் தோட்டத்தை ஒட்டி இருந்ததால், நினைத்த நேரம் சேரிக்குள் புகுந்து தலித் பெண்களை பாலியல் வல்லுறவு செய்வது அவர்களுக்குப் பொழுதுபோக்காகவே ஆகிவிட்டது.

சங்கனாங்குளத்தில் தேவர்களுக்கு மத்தியில் பிளவு இருந்தது. அப்போதைய பஞ்சாயத்துத் தலைவராக இருந்த வாலிபால் மாடசாமித் தேவர், தம்பி சங்கரத்தேவர் ஆகியோர் ஒரு பிரிவாகவும், டி.ஏ.கே. லட்சுமணத் தேவர், செல்லதுரைத் தேவர் ஆகியோர் இன்னொரு பிரிவாகவும் இருந்து வந்தனர்.

லட்சுமணத் தேவரின் தோட்டம் அனைத்தும் தலித் மக்களின் கவனிப்பிலேயே இருந்தது. லட்சுமணத் தேவரால் தலித் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாத காரணத்தாலும், வேலை செய்வதற்கு சுதந்திரமும், அதற்கேற்ற கூலியும் நியாயமாகக் கிடைத்ததாலும் - பெரும்பாலும் லட்சுமணத்தேவரிடம் வேலை செய்யவே பல தலித் குடும்பங்கள் விரும்பின.



படிப்பகம்

www.padippakam.com

வாலிபால் மாடசாமித் தேவர் வகையறாவினர், சாராயம் காய்ச்சுவதையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்ததால், தலித் மக்கள் அவரிடம் வேலை செய்ய முன்வரவில்லை. ஏற்கனவே சாதி வெறியில் தலித் மக்களை சித்ரவதை செய்த வாலிபால் மாடசாமித் தேவர் குடும்பத்திற்கு இது பெரும் எரிச்சலைக் கிளப்பியது. இரண்டு தேவர் குடும்பங்களுக்கு இருந்த பகை நாளுக்கு நாள் அதிகரிக்க, பாதிப்பு தலித் மக்களை வந்தடைந்தது.



அப்போதைய பிரதமராக இருந்த இந்திரா காந்தியிடம் மனு கொடுக்கும் பாதிக்கப்பட்ட சங்கனாங்குளம் பெண்கள்

தலித் மக்களின் காலனி, மாடசாமித் தேவரின் தோட்டத்தை ஒட்டி இருந்ததால், நினைத்த நேரம் காலனிக்குள் புகுந்து தலித் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுத்துவது, அவர்களுக்குப் பொழுதுபோக்காகவே ஆகி விட்டது. எல்லாம் தங்கள் விதி என்று ஏற்றுக் கொண்டு விட்டதைப் போல், தலித் மக்கள் தேவர் சமூகத்தினரின் ஆதிக்கத்திற்கும் அயோக்கியத்தனத்திற்கும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை; தெரிவிக்க முடியவில்லை.

பிரச்சனை, ராஜசெல்வம் விஷயத்தில்தான் தீவிரமடைந்தது. ராஜசெல்வத்தின் கணவர் மணி சங்கரத் தேவரின் தோட்டத்தில் கூலி வேலை செய்து வந்தார். ஒருநாள், கணவருக்கு சோறு எடுத்துக் கொண்டுபோன ராஜசெல்வத்தைக் கண்டவுடன் சங்கரத் தேவர், மணியை சிகரெட் வாங்கி வர அனுப்பி விட்டு, ராஜசெல்வத்தை பம்புசெட் அறைக்கு இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கி இருக்கிறார். கூடவே, நடந்ததை வெளியில் சொன்னால் உன் குடும்பம் மொத்தத்தையும் அழித்து விடுவேன் என்று மிரட்டியுமிருக்கிறார்.

இதனால், வீடு வந்து சேரும் வரை ராஜசெல்வம் மணியிடம் நடந்ததை சொல்லவில்லை. வீட்டிற்கு வந்த பின் தாயிடமும், மணியிடமும் விஷயத்தைச் சொல்ல ஆத்திரமடைந்த மணி, சங்கரத் தேவரை நேரில் சந்தித்து நியாயம் கேட்க தோட்டத்திற்குச் சென்றிருக்கிறார். இரவு வெகு நேரமாகியும் மணி வரவில்லை. திரும்பி கொண்டு வரும் போது அவருக்கு உயிருமில்லை.

சங்கரத் தேவரும் அவரின் ஆட்களும் மணியின் பிரேதத்தை வீட்டில் போட்டுவிட்டு, தவறி கிணற்றில் விழுந்து விட்டதாக சொல்லியிருக்கின்றனர். மணியின் உடம்பில் பல இடங்களில் அடிபட்டதற்கான காயங்கள் இருந்ததால், பிரேதத்தைப் பெற்றுக் கொள்ள ராஜசெல்வம் மறுத்துவிட்டார். பின் சங்கரத் தேவரும் அவரின் ஆட்களுமே பிணத்தை எரித்திருக்கின்றனர். கிராம அதிகாரியின் உதவியுடன் இந்தக் கொலை மறைக்கப்பட்டதோடு, அது விபத்தாகவும் சித்தரிக்கப்பட்டது.

தான் மட்டும்தான் பாலியல் வல்லுறவுக்கு ஆட்பட்டிருக்கிறோம் என்ற அச்சத்தில் பிரச்சனையை யாரும் பகிர்ந்து கொள்ளவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்க, விஷயம் மெதுவாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டது. 'நானும், நானும்' என்று கணக்கிட்ட போது வயது வித்தியாசம் இல்லாமல், பாட்டிகள் முதல் எல்லா வயது பெண்களும் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாகியிருப்பது தெரிய வந்தது.

**“முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவசரப் பயணமாக சங்கனாங் குளம் வந்து சேர்ந்தார். அதே கோயிலில் வைத்து பெண்கள் நடந்ததை சொல்லியழ, எம்.ஜி.ஆரும் அழுதிருக்கிறார்.”**

அதன்பிறகு இவ்விஷயம் பரவலாகப் பேசப்பட்டது. இதை கேள்விப்பட்ட அப்போதைய எம்.எல்.ஏ. ஜான்வின்சென்ட், சங்கனாங்குளத்திற்கு நேரில் சென்று பார்வையிட, 17 பெண்கள் அவரை கோயிலுக்குள் அழைத்துச் சென்று நடந்த கொடுமைகளைச் சொல்லி அழுதிருக்கின்றனர்.

பிரச்சனையின் தீவிரத்தை முழுமையாகப் புரிந்து கொண்ட ஜான் வின்சென்ட், திருநெல்வேலியில் நடந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சங்கனாங்குளத்தில் பெண்கள் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அதை கவனிக்காமல் எப்படி மாவட்டத்தை வளர்க்கப் போகிறீர்கள் என்று கோபமாக பேசிவிட, மறுநாள் பத்திரிகைகளில் விஷயம் தலைப்புச் செய்தியானது.

அதற்கப்புறம் யார் யாரோ சங்கனாங்குளத்திற்குப் படையெடுத்தார்கள். பல அரசியல் கட்சிகள், அமைப்புகள் கண்டன அறிக்கைகளும், ஆர்ப்பாட்டங்களும் நடக்கத் தொடங்கின. 'தலித் காலனிக்கு பாதுகாப்பிற்கு போடப்பட்ட போலிசும் தேவர்களும் இணைந்து கொண்டு - தலித் மக்களைத் தொடர்ச்சியாகத் தாக்குகின்றனர்.

கிராம அதிகாரி உள்பட எல்லோருமே தேவர்களாகவும், தேவர்களுக்கு ஆதரவாளர்களாகவும் இருந்ததால் - தலித் மக்களுக்குப் பிரச்சனை அதிகரித்ததே தவிர குறைந்த பாடில்லை. வேலை எதுவும் இல்லாததால் பத்து நாட்களுக்கும் மேல் சோறு தண்ணி இல்லாமல் பட்டினியாகக் கிடந்து தவித்திருக்கிறார்கள்.

தாங்கள் இனி உயிர் பிழைப்பதே கடினம் என்று தலித் மக்கள் முடிவுக்கு வந்த போது, அதுவரை தங்களுக்கு உழைத்துக் கொட்டிய மக்களுக்காக - லட்சுமணத் தேவரும், செல்லதுரைத் தேவரும் இந்த நேரத்தில் களமிறங்குகிறார்கள். அப்போதைய கலெக்டராக இருந்த ஆறுமுகத்தை சந்தித்து தங்கள் ஊர் நிலைமையை விளக்கி முதலில் தலித் மக்களுக்கு அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.



படிப்பகம்




லட்சுமணத் தேவர் தி.மு.க. மாவட்டச் செயலாளராக இருந்ததால், பிரதமர் இந்திரா காந்திக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்கள் பிரதமரை நேரில் சந்தித்து மனு கொடுத்தனர். உடனடியாக ஒரு உண்மையறியும் குழுவை, இன்றைய மத்திய அமைச்சராக இருக்கும் ராம்விலாஸ் பாஸ்வான் தலைமையில் சங்கனாங்குளத்திற்கு அனுப்பி வைத்தது மத்திய அரசு. சங்கனாங்குளத்தில் பெண்களுக்கு நேர்ந்ததை அப்படியே விளக்கி அறிக்கையை தாக்கல் செய்தது அந்தக் குழு.

தேவர் சமூகத்திற்கு அவப்பெயர் வந்து விடுமோ என்று அலறியடித்து ஓடி வந்த இந்திரா காங்கிரஸ் அமைச்சர் ஆர்.வி. சாமிநாதன், "ஊருக்கு ரெண்டு முக்கந்தன் இருந்தால் இதுபோன்ற தவறுகள் நடப்பது இயல்பு. இதைப்போய் பெரிது படுத்தலாமா? எந்த ஊரில் இது நடக்கவில்லை" என்று பேசியதோடு, எம்.எல்.ஏ. ஜான் வின்செண்ட் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அறிக்கையும் விடுத்தார்.

அந்த நாட்களில் வறட்சி தலைவிரித்தாடியதால், தென் மாவட்டத்திற்கு சுற்றுப் பயணம் வருவதாக இருந்த இந்திரா காந்தி, அப்படியே சங்கனாங்குளத்திற்கு வரப்போவதாக அறிவிக்கப்பட, மாநில அரசு சுதாரித்துக் கொண்டது. முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவசரப் பயணமாக சங்கனாங்குளம் வந்து சேர்ந்தார். அதே கோயிலில் வைத்து பெண்கள் நடந்ததை சொல்லியழ, எம்.ஜி. ஆரும் அழுதிருக்கிறார். சங்கனாங்குளத்தை விட்டு வெளியே வந்த முதல் வேலையாக, கலெக்டர் ஆறுமுகத்தை இடமாற்றம் செய்கிறார். அதோடு நிலைமையை இந்த அளவிற்கு வளரவிட்டு வேடிக்கை பார்த்த அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள்.

அவசரமாகக் கூடிய சட்டசபைக் கூட்டத்தில், நடந்த எல்லா குற்றத்திற்கும் கிராம அதிகாரிகள் துணை போனதால், 'தமிழகத்திற்கு கிராம அதிகாரிகளே வேண்டாம்' என்ற மிக முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தமிழகம் முழுவதும் கிராம அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள். இதற்கிடையில், அமைச்சர் ஆர்.வி. சாமிநாதனை இந்திரா காந்தி காங்கிரஸ் கட்சியை விட்டு நீக்குகிறார். இவ்வளவும் நடந்த பிறகு, உயர்நீதி மன்ற நீதிபதி ராமமூர்த்தி தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்படுகிறது.

திருநெல்வேலியில் முதல் சுற்று விசாரணையை முடித்து சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கத்தில் இரண்டாம் கட்ட விசாரணை நடந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் (கருணாநிதி கைது செய்யப்பட்டபோது பரபரப்பாக பேசப்பட்ட) இப்போதைய நீதிபதி அசோக்குமார் வாதாடினார். எத்தனையோ சாட்சிகள், எத்தனையோ உண்மைகள், பொய்கள், குமுறல்கள் முடிந்து தீர்ப்பும் வெளியானது.

மணியை சங்கரத் தேவர் அவர் தோட்டத்தில் அடித்துக் கொன்றதை நேரில் பார்த்ததாக சாட்சிகள் இருந்தும், நாங்கள் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டோம் என்று அத்தனைப் பெண்களும் கதறி அழுதும்கூட, குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லி குற்றவாளிகள் நிரபராதிகளாக்கப்படுகின்றனர். குற்றத்திற்குத் துணைபோன அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் இனிமேல் தேவர்களிடம் வேலை பார்க்க முடியாது என்பதால், அவர்கள் சுயதொழில் புரிவதற்கென்று ஒரு கூட்டுறவுப் பண்ணையை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது. இப்பொழுது அந்தப் பண்ணையின் கட்டிடமும் அதற்குள் நாலைந்து ராட்டைகளும் உபயோகிப்பவர் யாருமற்று சும்மா கிடக்கிறது.

> "பொம்பளையா பிறந்தாலே கஷ்டம்; அதிலும் தாழ்த்தப்பட்ட சாதியில் பொறந்துட்டா உசிரோடவே இருக்கக் கூடாது"

இவை அனைத்தும் பத்திரிகைகளில் வெளிவந்த புளித்துப் போன செய்திகள். அதன்பின் சங்கனாங்குளம் தலித் மக்கள் என்ன ஆனார்கள் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்கக் கூட ஆளில்லை.

இத்தனைப் பிரச்சனைகளுக்கப்புறம் சங்கனாங்குளத்தில் தொடர்ந்து வசிக்க முடியாது என்பதால், பெரும்பாலான தலித் மக்கள் ஊரை காலி செய்து கொண்டு வேறு ஊர்களுக்குப் போய் விட்டார்கள். தாங்கள் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டோம் என்று ஒத்துக் கொண்டதால், திருமண வாழ்க்கை அந்த 17 பெண்களுக்கும் பெரிய கேள்வியானது. சொந்தத்திலேயே இரண்டாம் தாரமாக பெரும்பாலானோர் மணமுடித்தாக வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர்.



www.padippakam.com

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான மஞ்சுளா, தன் அக்கா கணவர் காசியை திருமணம் செய்து கொண்டார். ''பொம்பளையா பிறந்தாலே கஷ்டம்; அதிலும் தாழ்த்தப்பட்ட சாதியில் பொறந்துட்டா உசிரோடவே இருக்கக் கூடாது'' என்று இன்னும் விரக்தி மீளாமல் பேசுகிறார்.

மணியை சங்கரத் தேவர் அடித்துக் கொன்றதை நேரில் பார்த்த சாட்சியான மஞ்சுளாவின் கணவர் காசிக்கு பழைய கோபம் இன்னும் தீயாகவே இருக்கிறது. ''இந்த சாதியில பொறந்த எல்லா பெண்களுக்குமே மத்த சாதிக் காரங்க கிட்ட இருந்து பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அன்னைக்கு நமக்கேன் வம்புன்னு எல்லோரும் ஒதுங்கிப் போனாங்க்ளே தவிர யாரும் உதவலை. இதனாலதான் நாங்க தோத்துட்டோம். எங்க நிம்மதியே போய் இப்ப எங்க ஊரே சுடுகாடாய் கிடக்கு'' என்று பாதிப்பு துளியும் மாறாமல் பேசுகிறார்.

ஆனால், வெளிவந்தபோதெல்லாம் பெண்களை வேட்டையாடிய சங்கரத்தேவர், தற்பொழுது இரண்டாம் திருமணம் செய்து கொண்டு நாகர் கோயிலில் நிம்மதியாக வாழ்ந்து வருவதாகத் தகவல்.

உண்மையை மறுதலிக்கும் நிராதரவு கணங்களையே தலித் பெண்களுக்கு இந்த சாதிச் சமூகம் சொந்தமாக்கியிருக்கிறது. எத்தனையோ அவமானங்களை அள்ளித் தெளித்தும் சங்கனாங்குளம் தலித் பெண்களுக்கு இன்று வரை தீர்வு கிடைக்கவில்லை. குற்றவாளிகள் தப்பித்து விட்டார்களே என்ற கோபத்தை விட - 'தான் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டவள்' என்ற குற்றவுணர்ச்சி இன்றும் அவர்களை நொடிக்கு நொடி கொன்று போடுகிறது. இந்த சமூகத்தின் ஆண்கள் மிக சாமர்த்தியமாக பெண்கள் மீது திணித்துவிட்ட சாபக்கேடு இது. ஆண்கள் செய்யும் தவறுகளுக்கெல்லாம் பலியாவதும், புழுங்கிச் சாவதும் பெண்கள்தான்.

சாதாரணமாகவே பெண்கள் அனைவரும் வீட்டில், உறவில், நாட்டில், வெளியில், வேலையில் என எல்லா வகையிலும் ஒடுக்கப்படுகிறார்கள். தலித் பெண்கள் என்று வரும்போது, இந்த ஒடுக்குமுறை நூறுமடங்கு அதிகரிக்கிறது என்பதை எத்தனை பேரால் ஏற்றுக்கொள்ள முடியும் என்பது தெரியவில்லை. வர்க்கம், சாதி, பாலினம் என்று மூன்றுமே மும்முனை ஆயுதங்களாக தலித் பெண்களைத் தாக்குகிறது.

**“ பெண்களை வெறும் உடலாகப் பார்க்காதீர்கள் என்கிற வாதங்கள் தீவிரமடைந்து வருகின்றன. தலித் பெண்கள் வெறும் 'பெண் உறுப்பாக' மட்டுமே பார்க்கப்படுகின்றனர்.**



சுடுகாடாய் கிடக்கும் சங்கனாங்குளம் சேரி

**எப்பொழுதும் கட்டிக்காக்கப்படும் தீண்டாமை, பாலியல் வல்லுறவின்போது மட்டும் எங்கே போகிறது என்று தெரியவில்லை. ”**

எப்பொழுதும் கட்டிக்காக்கப்படும் தீண்டாமை, பாலியல் வல்லுறவின் போது மட்டும் எங்கே போகிறது என்று தெரியவில்லை.

இதனாலேயே இந்தியாவில் ஒரு நாளில் சராசரியாக மூன்று தலித் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகின்றனர். சிசு கொலையாகட்டும், பாலியல் வல்லுறவாகட்டும், வரதட்சனைக் கொடுமையாகட்டும், குடும்ப வன்முறையாகட்டும்... எல்லா பெண்களுமே பாதிப்படைகிறார்கள் என்றால் கூட, எண்ணிக்கையில் தலித் பெண்களே அதிகம் இருப்பது கவனத்திற்குரியது.

தலித்தியம் - பெண்ணியம் ஓரளவிற்கு வளர்ந்து விட்ட நிலையில், தலித் பெண்ணியத்திற்கான அடித்தளமே வலிமையாக இடப்படவில்லை என்பது வேதனை.

சங்கனாங்குளம் போல் இன்னும் எத்தனையோ ஊர்களில் தலித் பெண்கள், ஆதிக்க ஆண்களின் அக்கிரம வெறிக்கு பலியாகிக் கொண்டிருக்கின்றனர். அவை யாருமே கவனிப்பாரற்ற நிலையில் கிடப்பதைப் பார்த்தால், 'உண்மையிலேயே தலித் பெண்கள் மீதான தாக்குதல் என்பது காற்றடிப்பது போல், மழை பெய்வது போல் இயற்கையான ஒன்று தான்' என்ற வாதத்தை வலுப்படுத்தவே செய்கிறது.

நாங்களும்தான் தினந்தோறும் கஷ்டப்படுகிறோம். கணவரிடம் அடிபடுகிறோம், பணியிடங்களில் சீண்டப்படுகிறோம் என்று நினைக்கும் பெண்களுக்கு - ஒன்றேயொன்றை தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. சாதி ஒன்றையே காரணமாக்கி பாலியல் வல்லுறவு செய்யப்படும் கொடுமை, தலித் பெண்களுக்கு மட்டுமே நிகழ்கிறது. அழைத்தவுடன் ஆண்களின் ஆசைக்கு இணங்க மிக வன்மையாக அவர்கள் மட்டுமே கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்; மீறுபவர்கள் கொலை செய்யப்படுகின்றனர்.

பெண்களை வெறும் உடலாகப் பார்க்காதீர்கள் என்கிற வாதங்கள் தீவிரமடைந்து வருகின்றன. தலித் பெண்கள் வெறும் 'பெண் உறுப்பாக' மட்டுமே பார்க்கப்படுகின்றனர். அதனாலேயே, கம்யூனிஸ்டுகள் எதிர்பார்க்கிற - வர்க்க வேறுபாடுகள் அழிந்த பின்னும், தலித் மக்கள் எதிர்க்கிற சாதி ஒழிந்த பின்னும் கூட பெண்கள், குறிப்பாக தலித் பெண்கள் விடுதலை வேண்டி இன்னொரு நூற்றாண்டுப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டியிருக்கும் என்றே நினைக்கத் தோன்றுகிறது. ●



படிப்பகம்



19ஆம் நூற்றாண்டு கறுப்பின துப்புரவுத் தொழிலாளி



21ஆம் நூற்றாண்டு தலித் துப்புரவுத் தொழிலாளி

# சாதி - தீண்டாமை
# உள்நாட்டுப் பிரச்சினையா...?

■ **கவுதம சன்னா**

ஆகஸ்ட் மாதத்தை இனி 'இனவெறி எதிர்ப்பு மாதமாக' வரலாறு வரித்துக் கொள்ளும். நிறவெறி தலைவிரித்தாடிய தென்னாப்பிரிக்கா - தகுதிவாய்ந்த இடமாக, குற்றவுணர்வு கொண்டவர்களால் தேர்வு செய்யப்பட்டிருக்கலாம். ஆனால், இனவெறிக்கு எதிராக உலகம் களமிறங்க வேண்டிய இடம் இந்தியா என்பது, எப்படி தங்களது பார்வையிலிருந்து மறைந்து போனதோ?

இன ஒதுக்கலை விட கொடூரமான முறையில் இயங்கும் சாதியும், தீண்டாமையும் - 30 கோடி தலித் மக்களை நாள்தோறும் கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறது. அமெரிக்க மக்கள் தொகைக்கு ஈடான மக்கள் - ஜப்பானியர்களைப் போல ஒன்றரை மடங்கு அதிகமான மக்கள் தொகையுள்ள தலித் மக்கள், இன ஒதுக்கலுக்கு ஆளாவது உலக அரங்கில் இப்போதுதான் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

வெள்ளைத் தோல்காரர்கள் கூட வெளிப்படையாக சாதி குறித்து இம்மாநாட்டில் பேசுவார்களா என்று தெரியவில்லை. அவர்களது பார்வை முழுவதும் கறுப்பு x வெள்ளை என்றே இருக்கிறது. அதே பார்வைதான் சாதி மீதும் முன்பிருந்தது, பிறகு மாறிப்போனது. டர்பன் மாநாடு சாதியை விவாதித்தால் என்ன நடக்கும்.....?

இந்த எதிர்பார்ப்பே இந்துத்துவ சக்திகளை ஆட்டம் காண வைத்துவிட்டது. 'சாதி உள்நாட்டு விவகாரம். அது, இன ஒதுக்கலைப்போல சர்வதேச பிரச்சினையல்ல' என்று ஆளும் கும்பல் கூக்குரலிட ஆரம்பித்துள்ளது. மேலைநாட்டவருக்கும் இந்துக்களுக்கும் - சாதியும் தீண்டாமையும் இன ஒதுக்கல் தான் என்பது மறைக்கக் கூடிய உண்மையல்ல. எப்படி?

● *1984*இல் லண்டனில் வெளியிடப்பட்ட 'Dictionary of race and ethnic relations' by Ellis Cashmore அகராதி, சாதியைக் குறித்து கூறுவதன் சாரம்: "சாதி இந்தியாவிற்கு மட்டுமான பிரச்சினையல்ல. அது உலகத்தின் காலனியப் பிரச்சினை. ஸ்பானிஷ், போர்ச்சுகிஸ், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் இது பொருந்தும். குறிப்பாக சாதி இனக்குழு பிரிவுகளுடன் பொருந்தும்."

எதற்கெடுத்தாலும், வெள்ளையனின் ஆய்வுக்கூட கழிவுகளைக் கேட்கும் பார்ப்பனர்கள், வெள்ளையர்களே "சாதி என்பது இன வேறுபாட்டின் முக்கிய அம்சம்" என நிறுவும் இந் நூல் ஒன்றே போதும். சாதி, இனி சர்வதேசப் பிரச்சினைதான்.

சாதி, இனக் காழ்ப்போடு பொருந்துவது குறித்து டாக்டர் அம்பேத்கர் நிறைய விவாதித்துள்ளார்:

● சாதி என்பது தன்னைத்தானே அடைத்துக் கொள்ளும் தீவிர இயல்புடையது. ● அது ஏற்றத்தாழ்வை மய்யமாகக் கொண்டிருக்கிறது. ● உயர் சாதி நிறுவனங்கள் இந்த ஏற்றத்தாழ்வை பேணிப் பாதுகாக்கின்றன.

இவை, *1945*ஆம் ஆண்டுக்கு முன்பு எழுதியவை. இதை ஒத்துக் கொள்வது போல, *1950-51*இல் இனக்காழ்ப்பு பற்றி ஓர் அறிக்கை உலக அறிஞர்களால் தயாரிக்கப்பட்டு 1964இல் மாஸ்கோவிலும் இறுதியாக்கப்பட்டு, *26.9.1967* அன்று பாரீசில் 'யுனெஸ்கோ' ஏற்பாடு செய்த இனக்காழ்ப்பு பற்றிய மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த அறிக்கை இன்று இனங்களையும், இனக்காழ்ப்பையும் பற்றிய அறிக்கை எனப்படுகிறது. இதில்,

பிரிவு 11 இனக் காழ்ப்புகளின் சமுதாய காரணங்கள் குறித்து நிபுணர்கள் குழு பின்வரும் முடிவுகளுக்கு வந்திருக்கிறது.

1. இனக் கொள்கையின் சமுதாய, பொருளாதாரக் காரணங்கள் - ஆட்சி அதிகாரத்திலும் சொத்து நிலைமையிலும் பெருத்த ஏற்றத் தாழ்வுகளை உருவாகும் காலனியாளர் சமூகங்களில் அடிக்கடித் தோன்றுகின்றன. 'கெட்டோ'க்கள் (Ghetto) எனும் ஒதுக்கிடங்கள் அமைந்துள்ள சில நகர, வட்டாரங்களிலும், இந்தக் காரணங்கள் தோன்றுகின்றன.

இம்மாதிரி ஒதுக்கிடங்களில் வசிப்பவர்களுக்கு வேலை வாய்ப்புகளிலும், கல்வியிலும், நீதி மன்றத்திலும் சம உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பல சமூகங்களில், ஒழுக்க முறைக்குப் புறம்பானது என்றோ, சமூகத்தினரின் மதிப்புக்கு குறைந்தது என்றோ கருதப்படும் ஏதேனும் ஒரு வகை சமூக அல்லது பொருளாதாரச் செயல், புற இனக் குழுக்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. இந்தப் புற இனக் குழுக்களோ, இவ்வகை செயலில் ஈடுபட்டிருக்கும் ஒரே காரணத்தால் எள்ளி நகையாடவும், நிந்திக்கவும் தொந்தரவுக்கு உள்ளாக்கவும் படுகின்றனர்.

2. .....குறித்த பண்புகளைக் கொண்ட சிறு குழுக்களும், கழகங்களும் சமூக இயக்கங்களும் சில வேளைகளில் இனக் காழ்ப்புகளைப் பேணி பரப்புகின்றன.

3. இனக் கொள்கை தன்னைத்தானே

www.padippakam.com


தீவிரப்படுத்திக் கொள்ளும் இயல்புடையது. இன பேதம், ஒரு குழுவை சம உரிமை அற்றதாக்கி, அதனாலேயே அந்தக் குழுவைச் சுற்றி பிரச்சினையை எழுப்புகிறது. பிறகு, அதே குழு ஏற்பட்ட நிலைமைக்குப் பொறுப்பாளி என்று குற்றம் சாட்டப்படுகிறது. இதன் விளைவாக புதிய இனக் கொள்கை உருவாகிறது.

இந்த அறிக்கையில் இந்தியாவும் கையெழுத்திட்டிருக்கிறது. இப்பிரிவுகள் எப்படி சாதியோடு பொருந்துகிறது என்பதை அம்பேத்கரின் வார்த்தையில் பார்ப்போம்:

• தீண்டத்தகாதோர் வழக்கமாக இரக்கத்துக்குரியவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆயினும் எந்த ஒரு அரசியல் திட்டத்திலும் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, பாதுகாக்கப்பட வேண்டிய நலன்கள் என்று ஏதும் இல்லை என்று இதற்குக் காரணம் கூறப்படுகிறது. ஆனால், அவர்களுக்குத்தான் மிக அதிகமான நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. இதனால், அவர்களுக்குப் பெரும் சொத்துகள் இருப்பதாகவோ, அவை பறிமுதலாகி விடாமல் பாதுகாக்க வேண்டியுள்ளதாகவோ பொருள் அல்ல.

அவர்கள் தங்களையே பறிகொடுத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சமூக, மதக் கொடுமைகள் அவர்களின் மனிதத் தன்மையையே அழித்து விட்டன. எனவே, இடருக்குள்ளாகியுள்ள அவர்களது நலன்கள் மனித குலத்தின் நலன்களாகும். இவ்வளவு மாபெரும் முக்கியத்துவம் உள்ள நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டியிருக்கும் போது, சொத்து நலன் என்பது பொருளற்றதாகி விடுகிறது. (டாக்டர் அம்பேத்கர் தமிழ் தொகுதி 2, பக்கம் 19)

• பார்ப்பனர்கள் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் என்றால் மற்றவர்களை ஒடுக்குவதற்கும், மிருகத்தனமாக இரக்கமற்று கொடுமையாக நடத்திக் கொள்வதற்கும்தான் சுதந்திரம் கேட்கிறார்கள். இவர்களுடைய மாற்ற முடியாத உரிமை என்பது, தீண்டத்தகாத மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில்தான் தழைக்க முடியும்? அவர்களுடைய நாசூக்கான உயர்குடி பெருமை - ஆங்கிலேயரைத் தங்களைவிட உயர்ந்தவர்களாகவோ, தீண்டத்தகாதவரைச் சமமானவர்களாகவோ ஏற்காது. (தொகுதி 2 பக்கம் 36)


DICTIONARY OF RACE AND ETHNIC RELATIONS
...ndia and related so...
...indigenous to India at all; it is a...
...se word (casta), first applied to racial
...y in the Spanish American colonies. Th...
...of the Spanish colonies, however, was not
...m in either the Indian or the extended sense
...s little group endogamy, and extensive racial
...ave rise to a proliferation of 'half-caste' categ...
...mestizos, mulatos and zambos. As a result, casta...
...became rather flexible, negotiable and subject...
...redefinitions based on wealth and prestig...
Second, the term 'caste', far from b...
Indian situation, actually...
...often indiscrimin...

• இந்தியாவில் அறிவுத்திறன் வகுப்பு என்பது, பார்ப்பன சாதிக்கு மற்றொரு பெயராகவே இருப்பது வருந்தத்தக்கது என்று நீங்கள் நினைக்கலாம். இரண்டும் ஒன்றாக இருப்பது பற்றியும், அறிவுத்திறனும் வகுப்பு இருப்பது ஒரு குறிப்பிட்ட சாதி இருப்பதுடன் பிணைந்திருப்பது பற்றியும் நீங்கள் வருத்தப்படலாம். இந்த அறிவுத்திறன் வகுப்பின் நலன்களும் ஆசைகளும் பார்ப்பன சாதியின் நலன்களும் ஆசைகளுமாகவே இருப்பதையும், அறிவுத்திறன் வகுப்பு நாட்டின் நலனைப் பாதுகாப்பதைவிட, இந்தச் சாதியின் நலனைப் பாதுகாப்பதே தன் பணியெனக் கருதுவது. (தொகுதி 1 பக்கம் 104)

• ஒருகூட்டத்தார்மற்றவர்களோடுகலவாமல் தனித்தும் ஒதுங்கியும் வாழ்கிறார்கள் என்றும், அந்தக் கூட்டத்தாரிடம் சமூக நேச உணர்வு இல்லை என்றும் இந்துக்கள் அடிக்கடி குறைபட்டுக் கொள்கின்றனர். ஆனால், இந்த சமூக நேச உணர்வின்மை அவர்களுடைய சாதிமுறையின் இழிவான தன்மை என்பதை வசதியாக மறந்து விடுகின்றனர். (தொகுதி 1 பக்கம் 74)

இதன் பொருத்தப்பாடுகளை டர்பன்காரர்களும் இந்து பார்ப்பனர்களும் பார்த்துக் கொள்ளவும். விடாப்பிடியாக ஒரு பொய்யை உண்மையாக்குவதில் பார்ப்பனர்களும், இந்துக்களும் கெட்டிக்காரர்கள். ஆனால், ஒரு நபரை திட்டும் போது கீழ்சாதிப் பெயரைச் சொல்லித் திட்டுவது அவர்களின் வழக்கம்.

இது இந்திய அளவில் மட்டுமல்ல; உலக அளவில் கூடத்தான். ஈராக் போரின்போது ஜான்மேஜர், சதாம் உசேனை 'பறையா' என்று தான் திட்டினார். அதன் விவரம் (1.3.1991 நாளிட்ட 'இந்து')

*Q : Asked if the coalition task could be considered complete while Mr. Saddam Hussain is still in power?*

**Mr. Major Said** : We very much hope that his own people will deal with him in the way he deserves and that the world will continue to treat Iraq as 'INTERNATIONAL PARIAH' as long as Saddam remain in power.

கேள்வி: சதாம் உசேன் அதிகாரத்தில் நீடித்திருக்கும் வரை பன்னாட்டினரின் பணி முடிந்துவிட்டதாகக் கருத முடியுமா?

பதில் - ஜான்மேஜர் : அவரது சொந்த மக்களே நியாயமாக அவருக்கு எது உரியதோ அதனை உரிய வழியில் அவருடன் தீர்த்துக்கொள்வார்கள் என்று நாங்கள் முழுமையாக நம்புவதுடன், சதாம் உசேன் அதிகாரத்தில் நீடித்திருக்கும் வரை உலகம் ஈராக்கை - "ஒரு சர்வதேசப் பறையனாகவே தொடர்ந்து நடத்தும்"

2.3.1991 அன்று 'இந்து'வில் Boasting Saddam's image through songs என்ற தலைப்பில்,

Some western leaders are now saying that Iraq will be treated like a *pariah* as long as Saddam is in power ..........

19ஆம் நூற்றாண்டில் பள்ளியில் இருந்து வெளியேற்றப்படும் கறுப்பினக் குழந்தைகள்




20ஆம் நூற்றாண்டில் பள்ளியில் தீண்டாமையால் கண்ணிழந்த தலித் குழந்தை தனம்





படிப்பகம்

www.padippakam.com



1835இல கறுப்பின அடிமைத் தனத்தை விளக்கும் ஓவியம்



21ஆம் நூற்றாண்டில் தலித் அடிமைத் தொழிலாளி - நிஜம்

(சதாம் உசேன் அதிகாரத்திலிருக்கும் வரை ஈராக் ஒரு பறையனைப் போன்று நடத்தப்படும் என்றும், யுத்தத்தைத் தொடர்ந்து புனரமைப்புப் பணிகள் நிறுத்தி வைக்கப்படலாம் என்றும் சில மேற்கத்திய தலைவர்கள் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள்.)

இதையும் தூக்கி சாப்பிடும் விதத்தில் ஒரு நாட்டையே திட்டுவதற்கு சாதிப் பெயரை பயன்டுத்திய பெருமை, பார்ப்பனர்களையே சாரும்.

சூலை 23-2001 'இந்தியா டுடே'யில் பாகிஸ்தானைக் குறித்து ராஜ் செங்கப்பா கட்டுரை எழுதுகிறார்:

IT'S BEEN BRANDED A 'PARIAH STATE' AND DENOUNCED A "CRIMINAL ENTERPRISE" இப்படியாக இந்தியர்களின் 'சாதிய பிரஸ்தாபம்' புகழ் பெற்று விளங்குகிறது.

இவர்கள், உள்நாட்டுக் காரனை கீழ் சாதிப் பெயரைச் சொல்லித் திட்டுவார்கள்; வெளிநாட்டுக் காரனையும் இப்படியே திட்டுவார்கள். திட்டுக்கு உரிய சாதிக்காரனான தலித் - வார்த்தையிலேயே கேவலப்படுத்தும் போது, செய்கையில் எப்படி கேவலப்படுத்தப்படுவார்கள் என்பதை விளக்கத் தேவையில்லை.

இனியும் சாதி, உள்நாட்டுப் பிரச்சினை என்போருக்கு... டர்பன் மாநாட்டுக்காரர்கள் இதையே ஆதாரமாகக்கூட காட்டலாம்.

• *Ref : Pictorial History of Black Americans by Longston Hughes, Milton Meltzer & C. Eric Lincoln.*


இந்திய அரசின் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின்
உதவியோடு - 'தலித் விடுதலைக் கல்வி அறக்கட்டளை' நடத்தும்

# டெல்டா கணினி பயிற்சிப் பள்ளி

தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் (SC, ST & OBC) சேர்ந்த பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு.

இந்திய அரசின் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் வழங்கும், அரசு ஒப்புதல் பெற்ற ஓராண்டு கணினி பயிற்சி, தலித் விடுதலைக் கல்வி அறக்கட்டளையின் - டெல்டா கணினி பயிற்சிப் பள்ளியில் அளிக்கப்படும்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெற்று முன்னேற்றம் அடைய நல்ல வாய்ப்பு. இந்தக் கணினிப் பயிற்சி 'O' LEVEL தகுதிபெற்றதால் இதற்கு வேலை வாய்ப்பு அதிகம் உள்ளது. மாத கட்டணம் ரூ.300/ மட்டும்தான்.

(வி.ம)

விவரங்களுக்கு உடனே அணுகவும் : • டெல்டா கணினி பயிற்சிப் பள்ளி (DELTA SCHOOL OF COMPUTERS)
67, துரைராஜ் தெரு, பழவந்தாங்கல், சென்னை - 600 114 • தொலைபேசி : 234 11 46
(பழவந்தாங்கல் ரயில் நிலையம் அருகில்)




படிப்பகம்

# காலிகளுக்கு கவிஞர் பட்டமா?

• நூல் : வாலி + வைரமுத்து = ஆபாசம் • ஆசிரியர் : பாமரன் • பக்கம் : 80 • விலை ரூ. 25
• வெளியீடு : சேகுவாரா பதிப்பகம், 586 திவான் பகதூர் சாலை, கோவை - 641 002

தனக்காக ஒதுக்கப்பட்ட ஓர் அறையில் 'டிஜிட்டல் ஸ்டீரியோ' வைத்துக்கொண்டோ - ஒழுகும் குடிசைக்குள் ஒழுகாத இடமாகப் பார்த்து ஒரு மட்டரகமான 'டேப் ரெக்கார்டரை' வைத்தபடியோ, ஒவ்வொரு விடலைப்பையனும் திரைப்படப் பாடலில் கிறங்கிக் கொண்டிருக்கிறான். பெயர் சூட்டும் விழாவோ, கருமாதியோ எதுவாயினும் தெருவெங்கும் பாடல்களின் அலறல். தேநீர்க்கடை, சலூன்கடை, டவுன் பஸ், கோயில், என நீக்கமற நிறைந்திருக்கின்றன திரைப்படப் பாடல்கள்.




இவை என்ன சொல்லித் தருகின்றன மக்களுக்கு? அலசுகிறது இந்தப் புத்தகம். இதைப் படிக்கப் படிக்க, விஷத்தை நாம் செவிவழியே இத்தனைக் காலமாய் வாங்கிக் கொண்டிருந்தோமே என்றுணர முடிகிறது.

அது என்ன, வாலியும் வைரமுத்தும் மட்டும்தானா? - முன்னும் பின்னும் ஆட்களே இல்லையா? இவர்கள் நல்ல பாடல்கள் எழுதியபோதெல்லாம் பாராட்டிப் புத்தகம் போட்டிருக்கிறீர்களா? எவர் வந்தாலும் சினிமாவில் அப்படித்தான் எழுதியாக வேண்டும்; வேறு வழியில்லை. அழகு ஆபாசமெல்லாம் அவரவர் மனசில் இருக்கிறது, என்று விவரிக்கின்றனர். அறிவு ஜீவிகளுக்கு இந்நூல் ஒரு செருப்படி. ஆபாசத்திற்குத் தத்துவ வடிவம் தந்து எழுதுகிற பின்நவீனத்துவ எழுத்தாளர்களுக்கும் இது பொருந்தும்)

ஒரு தீவிர ரசிகன், பாடலாசிரியரிடம் பேசுவது போல் வாசகனிடம் பேசுகிறது. இந்நூல். பாமரனுக்கே உரித்தான சிறப்பம்சம் இது. வெகுஜனப் பத்திரிகைகளில் அரசியல், கலை விமர்சனக் கடிதங்கள் எழுதிய பாமரன் - நம்மிடம் இந்நூலைத் தந்திருக்கிறார். இறுதியில் இப்படி முடிக்கிறார்:

*"எவனடா எழுதச் சொன்னான்*
*உங்களை*

*சமைஞ்சதையும் குனிஞ்சதையும்*
*குறிப்பிட்டேயாக வேண்டும்*
*என்று*
*எந்தத் தமிழனடா*
*உங்கள் வீட்டு வாசலில்*
*உண்ணாவிரதம் இருந்தான்.*
*சுற்றி வளைக்காமல்*
*சுருக்கமாகச் சொல்கிறோம்*

*காலிகளுக்கு எதற்கடா*
*கவிஞர் பட்டம்*
*த்தூ...!"*

இது, ரசனையைத் தூண்டுகிற புத்தகம் அல்ல, செயல்பட வைக்கிற நூல். காற்றுவழியே சேறு வாரி அடிக்கிற கயமைக்கு எதிராகப் புறப்பட வைக்கிற புத்தகம். இவரது வார்த்தைகளில் சொல்வதெனில், நம் கலாச்சார எதிரிகளோடு கலந்துரையாடிக் கொண்டிருக்காமல் - காலில் இருப்பதை கழற்றச் சொல்கிற நூல் இது.

- ரா. குருநாதன்




■ நூல் : **சித்ரவதை**
- ஒரு முழுமையான பார்வை -
தொகுப்பு : சேது
வெளியீடு :
மக்கள் கண்காணிப்பகம்
7, பி.டி. ராசன் சாலை
2ஆவது சாலை
மதுரை - 625 002
பக்கம் : 280
விலை : 75




■ நூல் : **உயிரிழை**
ஆசிரியர் :
விழி.ப . இதயவேந்தன்
வெளியீடு :
காவ்யா, 16, 17ஆவது
'ஈ' குறுக்குத் தெரு, இந்திரா
நகர் II ஸ்டேஜ்
பெங்களூர் - 560 038
பக்கம் : 192
விலை : 30

■ நூல் : **உரிமைப் போராளி ரெட்டமலை சீனிவாசனார்**
ஆசிரியர் :
ஏபி. வள்ளிநாயகம்
வெளியீடு :
ஜீவசகாப்தன் பதிப்பகம்
அலமேலு நகர்
ஆலங்குளம்
மதுரை - 625 017
பக்கம் : 128
விலை : 60



## தலித் எழுத்தாளர்களுக்கு...

தலித் மக்களின் கலை, இலக்கியம், வரலாறு மற்றும் பண்பாடு அண்மைக் காலங்களாக - பல நிலைகளில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, தலித் மக்களின் வாழ்வை பிரதிபலிக்கும் வகையில் 'தலித் சிறுகதைகள்' எனும் தொகுப்பு - 'காவ்யா' பதிப்பக வெளியீடாக விரைவில் வெளிவர இருக்கிறது.

எனவே, தங்களின் சிறந்த படைப்புகளில் இரண்டு சிறுகதைகளுடன் எழுத்தாளர் பற்றிய குறிப்பினை முழு முகவரியுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும். மேலும், இத்தொகுப்பிற்கான தங்களின் ஆலோசனைகளையும், சிறுகதைகளையும் 31.8.2001க்குள் அனுப்பிட விழைகின்றேன். முகவரி : பா. அண்ணாத்துரய், 18, ஆபிதாத் தோட்டம், சாலாமேடு, கண்டமானடி அஞ்சல், விழுப்புரம்.

- விழி.பா. இதயவேந்தன்



■ நூல் : **ஒற்றை வைக்கோல் புரட்சி**
ஆசிரியர் :
மசாபு புகோகா
வெளியீடு :
பூவுலகின் நண்பர்கள்
306/6, பெல்லி ஏரியா
அண்ணா நகர்
சென்னை-40
பக்கம் : 142
விலை : 60

www.padippakam.com



கண்டதேவி தேர்

# 'நாடு' கட்டமைப்பும் சாதியாதிக்கமும்

■ விடியல்

வழிபாட்டில் சம உரிமை கேட்பது தேவர்களாகிய எங்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய மனைவியைக் கேட்பதற்கு ஒப்பாகும். நாங்கள் அவ களை அனுமதிக்கப் போவதில்லை. அவர்கள் முயற்சி செய்து இப்போது நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டார்கள்... பறையர்கள் எங்களுக்குக் கீழ்ப்படிந்து போகும்போது, இந்தப் பள்ளருக்கு மட்டும் கொம்பு முளைத்து விட்டது. உஞ்சனை நாடு எங்களுடைய பூர்வீகச் சொத்து. எந்தப் பள்ளர்களும் அதனை எங்களிடமிருந்து பிரித்துவிட முடியாது'' என்று இன்றைய த.மா.கா. எம்.எல்.ஏ. ராமசாமி சொன்னதாக, 22.7.1983 நாளிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி வெளி யிட்டிருந்தது.

இந்த ராமசாமி என்பவர், உஞ்சனைப் படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முதல் எதிரி. ரத்தம் படிந்த கரங்களுக்குச் சொந்தக்காரரான இவர், 'நாங்கள் மீண்டும் மீண்டும் அவர்களுக்குப் பாடம் புகட்டுவோம் என்றார். அது இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

1979 சூன் 28 அன்று, உஞ்சனைப் படுகொலை நடந்தது. நாட்டு அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கினார்கள் என்பதால் தலித் மக்கள் 5 பேர் கொல்லப்பட்டனர்; 29 பேர் காயமடைந்தனர். 1500 பேர் கொண்ட ஆதிக்க சாதிக் கும்பல் இந்தத் தாக்குதலைக் கட்டமைத்தது.

இன்று உஞ்சனை நாடு, செம்பொன்மாரி நாடு, இரவுசேரி நாடு, தென்னிலை நாடு ஆகிய நான்கு நாடுகளுக்குச் சொந்தமான கண்டதேவி கோயிலில் தலித் மக்கள் உரிமை கேட்பது, தமிழகத்தின் பெரும் பிரச்சனைகளில் ஒன்றாக இருக்கிறது.

இன்றளவும் நாடுகளின் செல்வாக்கு சரிந்ததாக இல்லை. அவை இன்றும் துடிப்புடன் செயல்படுவதை 'கண்டதேவி' காட்டுகிறது. தமிழக சாதிக்கட்டமைப்பில், இந்தப் பகுதிக்கான சிறப்பு வடிவமாக நாடு கட்டமைப்பு இருக்கிறது. மிகப்பழமையானதும் தலித் மக்கள் மீதான ஒடுக்குமுறையை நிறுவனப் படுத்துவதுமான நாடு கட்டமைப்பு - எப்படி இந்த 'இன்டர்நெட்' காலத்திலும் நீடிக்க முடிகிறது?

நாடு கட்டமைப்பு எவ்வாறு உருவானது என்பது பற்றி பல வகை விளக்கங்கள் உள்ளன. ஆனால், இது மன்னர் காலத்தில் கிராமப்புறங்களை நிர்வாகம் செய்வதற்கென உருவானக் கட்டமைப்பு என்பதில் அனைவரும் ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கின்றனர்.

'நாடுமுறை மிகவும் கொடூரமானது' என்கிறார் சி.பி.அய். - எம்.எல். கட்சியின் சிவகங்கை மாவட்டச் செயலாளர் த. பாண்டியன். ''இந்த நாடு கட்டமைப்பில் ஒரு நாட்டுப் பள்ளர் ஒருவரை மற்ற நாட்டுக்காரர் தாக்கிவிட்டால், என் நாட்டுப் பள்ளனை நீ எப்படிடா அடிக்கலாம்? என தகராறு மூண்டுவிடும். எப்படி ஒருவன் மாட்டை அடிக்க மற்றவனுக்கு உரிமையில்லையோ - அதேபோல ஒரு நாட்டுப் பள்ளனை அடிக்கவும் மற்ற நாட்டவருக்கு உரிமையில்லை. இங்கே தலித் மக்கள் அடிமைகளைப் போலவே நடத்தப்படுகிறார்கள்'' என்றார்.

இன்று நிலைமை ரொம்பவும் மாறியிருக்கிறது. நாடுகள் சில தங்கள் பழைய கட்டமைப்பை இழந்திருக்கின்றன. சில சமயங்களில் செயல்படாமல் இருந்த நாடு இன்று மீண்டும் உறுதியாகச் செயல்பட முனைவதையும் பார்க்க முடிகிறது. எப்படியிருந்தபோதும் நாடு என்ற கட்டமைப்பு இன்றும் நீடிக்கிறது.

நாடு என்றால் என்ன?

ஒரு கிராமத் தொகுப்பை நிர்வாக அலகாகக் கொண்டதே நாடு எனப்படுகிறது. 22½, 42½ போன்ற எண்ணிக்கையிலான கிராமங்களின் தொகுப்பை நாடு என்கிறார்கள். இந்த நாட்டுக்கென தனியான கண்மாயும் உண்டு. ஒரு அர்த்தத்தில், ஒரு கண்மாய் பாசனம் பெறும் பரப்பளவை நாடு என்று கொண்டார்கள் என்றும் சொல்லலாம். ஒரு நாட்டுக்கு 'அம்பலம்' என்று ஒரு சபை உண்டு. ஆதிக்க சாதியினரான முக்குலத்தோர், இந்த அவையில் இருப்பார்கள். வேறு பல சாதிகள் இருந்த போதும் அவர்கள் அவையில் அங்கம் வகிக்க முடியாது. அம்பலத்தின் உறுப்பினர்களை அம்பலக்காரர் என்பார்கள்.

**"வழிபாட்டில் சம உரிமை கேட்பது தேவர்களாகிய எங்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய மனைவியைக் கேட்பதற்கு ஒப்பாகும். நாங்கள் அவர்களை அனுமதிக்கப் போவதில்லை. பறையர்கள் எங்களுக்குக் கீழ்ப்படிந்து போகும்போது, இந்தப் பள்ளருக்கு மட்டும் என்ன கொம்பா முளைத்து விட்டது?"**



படிப்பகம்

**"ஒரு நாட்டுப் பள்ளரை மற்ற நாட்டுக்காரர் தாக்கிவிட்டால், என் நாட்டுப் பள்ளனை நீ எப்படிடா அடிக்கலாம்? என தகராறு மூண்டுவிடும். எப்படி ஒருவன் மாட்டை அடிக்க மற்றவனுக்கு உரிமையில்லையோ - அதேபோல ஒரு நாட்டுப் பள்ளனை அடிக்கவும் மற்ற நாட்டவருக்கு உரிமையில்லை. இங்கே தலித் மக்கள் அடிமைகளைப் போலவே நடத்தப்படுகிறார்கள்"**



த. பாண்டியன்

இந்த நாடு அமைப்பு சாதிக் கட்டமைப்பின் அடிப்படையில் இயங்குகிறது. ஒவ்வொரு சாதிக்கும் சமூகத்தில் ஒரு பாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை அந்தந்த சாதிகள் நிறைவேற்ற வேண்டும்.


உதாரணமாக, முத்துநாட்டை எடுத்துக் கொள்வோம். முத்துநாடு முத்துக் கண்மாயை மய்யப்படுத்தி அமைந்துள்ளது. இந்த நாட்டில் 42½ கிராமங்கள் உள்ளன. இந்த நாட்டு தெய்வத்தின் பெயர் முத்துநாயகி அம்மன். கோயில் திருவிழா கொண்டாடப்படும் இடம் முத்துத் திடல் என்றழைக்கப்படுகிறது. முத்து நாட்டில் கள்ளர் இனத்தைச் சேர்ந்த ஆறு பேர் அம்பலக்காரர்களாக இருக்கின்றனர். கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அம்பலக்காரர்களாக இருக்க முடியும். வாரிசு அடிப்படையில்தான் இவர்கள் அம்பலக்காரர்கள் ஆகிறார்களே தவிர, இதற்கென தேர்தல் எதுவும் கிடையாது.

இந்த அம்பலக்காரர்கள், முத்து நாட்டின் முடிசூடா மன்னர்களாக இருக்கின்றனர். எல்லா மக்களும் இந்த அம்பலக்காரர்களுக்கு அடிபணிந்து நடக்க வேண்டும். நீர்ப்பாசனத்தின் கட்டுப்பாடு இவர்கள் கையில்தான். முத்து நாட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சனை, நிலப் பிரச்சனை, திருமணப் பிரச்சனை, கிராமங்களுக்கு இடையிலான பிரச்சனை போன்ற அனைத்தையும் அம்பலக்காரர்களே கேட்டுத் தீர்த்து வைப்பார்கள். கோயில் திருவிழா மூலமும், அபராதம் மூலமும் பொது இடத்தின் மூலமும் கிடைக்கும் வருவாயை, அம்பலக்காரர்களே வைத்துக் கொண்டு பொதுக்காரியங்களுக்குச் செலவு செய்வார்கள். இதில் ஒரு கணிசமானத் தொகை அம்பலக்காரர்களைச் சேரும்.

இந்த நாட்டைச் சேர்ந்த முத்து நாயகி அம்மன் கோயில், சிறுவாச்சியில் இருக்கிறது. இந்தக் கோயிலின் திருவிழா ஆண்டுதோறும் பெரிய அளவில் கொண்டாடப்படும். இதற்காக இந்நாட்டுக்கூட்டம் நடைபெறும். நாட்டார்கள் என்று சொல்லப்படும் கள்ளர்கள், வெள்ளாளர்கள், செட்டியார்கள், முதலியார்கள், உடையார்கள், இடையர், அய்யர் என்ற சாதிகளைச் சேர்ந்தவர்கள் அம்பலக்காரர்கள் தலைமையில் கூடுவார்கள், மற்ற சாதியினரான ஆசாரியர்கள், நாடார்கள், பறையர்கள், பள்ளர்கள், அம்பட்டர்கள், வண்ணார்கள் ஆகியோர் தனித்தனியாக அவரவர் சாதி அடிப்படையில் கூடுவர்.

திருநாளுக்கான தேதியை அம்பலக்காரர்கள் குறிப்பிடுவார்கள். திருநாளுக்கான வரியும் தீர்மானிக்கப்படும். சாதியடுக்கின் மேல் நிலைமைக்கு ஏற்ப வரித்தொகையும் வேறுபடும். எடுத்துக்காட்டாக, நாட்டார்கள் 30ரூபாய் வரி செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டால், ஆசாரிகள் ரூ. 25, நாடார்கள் ரூ. 20, பள்ளர்கள் ரூ. 15, பறையர்கள் ரூ. 10, வண்ணார் மற்றும் அம்பட்டர் ரூ. 5 என வரி நிர்ணயம் செய்யப்படும்.

இந்தப் பணத்தை (கண்மாயின்) நாலு கரையைச் சேர்ந்த அம்பலக்காரர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும். இந்த நான்கு அம்பலக்காரர்கள்தான் மிகுந்த செல்வாக்கு உள்ளவர்கள். அம்பலக்காரர்கள் கணக்கர்களோடு சேர்ந்து திருவிழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள்.



சாமியை அலங்கரிப்பது, அபிஷேகம் செய்வது அய்யர்களின் வேலை; தேரையும், சாமியையும் அலங்கரித்து தூக்கிச் செல்வது கள்ளர்களின் வேலை; திருவிழாவின் நாடக அரங்குக்கான ஓலைகளை வெட்டித்தருவது, தீவட்டிப் பிடிப்பது நாடார்களின் வேலை; திருவிழா செல்லும் பாதையின் ஓரங்களைச் சுத்தம் செய்வது, கொட்டகை போடுவது, வெட்டப்பட்ட ஆடுகளின் தோலை உரித்துக் கொடுப்பது பள்ளர்களின் வேலை; பள்ளர்கள் பெருக்கி வைத்தக் குப்பையை அள்ளுவதோடு - திருவிழாக் காலத்தில் பறையடிப்பது பறையர்களின் வேலை; தீவட்டி செய்து கொடுப்பதோடு, அதற்கான எண்ணெயை வைத்துக் கொண்டு தீவட்டிக்கு ஊற்றுவது வண்ணார்களின் வேலை; திருவிழாவில் மொட்டை போடுபவர்களுக்கு மொட்டை அடிப்பது அம்பட்டர்களின் வேலை. திருவிழாவில் முதல்மரியாதையை அம்பலக்காரர்கள் மட்டுமே பெற்றுக் கொள்வர்.

நாட்டார்கள் தவிர மற்ற சாதிக்காரர்களாகிய ஆசாரிகள், நாடார்கள், பள்ளர்கள், பறையர்கள் உள்ளிட்டவர்கள் கோயிலுக்குள் நுழையவே கூடாது. நாட்டார்கள் தவிர மற்றவர்கள் திருவிழாவில் பால் குடம் எடுக்கக்கூடாது. வேறு சாதியினர் எவரும் தெய்வத்துக்கு நேர்த்திக்கடன் செய்யக் கூடாது. நாடகம் நடைபெறும் போது மற்ற சாதியினர் நாட்டார்களுக்குப் பின்புறம்தான் உட்கார வேண்டும்; நாட்டார்களோடு சேர்ந்து உட்காரக்கூடாது. திருவிழாவில் சாமி வருவது கூட நாட்டார்களுக்குத்தானே தவிர, பிற சாதியினருக்கு வருவதில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். திருவிழா வரிப்பணத்தை அம்பலக்காரர்கள்தான் செலவு செய்வார்கள்.

இப்படியாக, மநுதர்ம வகையிலான ஒரு மேல் கீழ் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தும் தேர்ந்த அமைப்பாக நாடு கட்டமைப்பு இருக்கிறது. ●

தலித் மக்களின் எழுச்சிக்கு நாட்டார்களின் நீதி மன்றத்தில் மரண தண்டனைதான் தீர்ப்பு! வெட்டிச் சாய்க்கப்பட்டோரின் எழுச்சி மிகு வரலாறுகள் அடுத்த இதழில்...


**"ஜாதி வேறுபாடு இன்றைக்குப் பெருமளவில் இல்லை. அப்படியே இருந்தாலும் அது கிராமப் புறங்களில் மட்டும்தான் உள்ளது" என்று உண்மையை மறைத்து –அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறது, ஆளும் வகுப்பும் பத்திரிகைகளும்.**

**ஆனால், நகர்ப்புறங்களில் மட்டுமல்ல, மா...நகரப் புறங்களிலும் சாதியே ஒருவரின் வாழ்வியலைத் தீர்மானிக்கின்றது என்பதற்கும் இனவெறி, இந்தியாவில் ஜாதிவெறியாக உருப் பெற்றிருப்பதற்கும் ஓர் எடுத்துக்காட்டே – இந்த மணமேடை விளம்பரங்கள். இப்படியான 'ஜாதிக் கருப்பை'களை ஏந்திவராத நாளேடுகள் ஒன்று கூட இல்லை.**

**இந்தியாவில் ஜாதி உயிர்ப்புடன் இருப்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?**

# ஜாதி தடையில்லை

## (எஸ்.சி. / எஸ்.டி. தவிர)




■ **அழகிய பெரியவன்**

*"தன் குலப் பெண்களைக் கைப்பிடித்து மணங்கொள்வதுதான் முறையான திருமணமாகும். தத்தம் வருணப் பெண்களை மணப்பதே நல்லது."*

– மநுதர்மம்

ஒவ்வொரு வாரமும் தொலைக்காட்சிகள் மூலமாகவும், செய்தித் தாள்கள் மூலமாகவும் மேடைபோட்டு ஆயிரக்கணக்கான மக்கள் – சாதியத்தையும், சாதி வெறியையும் வெளிப்படையாக எந்தவிதக் கூச்சமுமின்றி மவுனமாக வளர்த்து வருகின்றனர். அவர்கள் தருகின்ற விளம்பரங்களும், வார்த்தைகளும் தீண்டாமையின் வேகத்தோடும், வன்மத்தோடும் சாதிய விஷத்தில் தோய்த்தெடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இது குறித்து யாரும் அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை. அவை, மண மேடை விளம்பரங்கள்.

**செட்டியார் 32, 12,000 மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த அழகான மணமகள் தேவை**

இப்படி ஆயிரக்கணக்கான விளம்பரங்கள், சாதியை மார்தட்டி சொல்லிக் கொண்டு எல்லா செய்தித் தாள்களிலும் வந்து கொண்டுள்ளன. 'சன்' தொலைக் காட்சியில் 'கல்யாண மாலை' நிகழ்ச்சியில் நேரிலேயே தோன்றி நம் நடு

www.padippakam.com

# இந்தியாவில் இனவெறி இப்படித்தான்..

வீட்டில் தன் சாதியை வலியுறுத்திக் கூறுகின்றனர். சாதிகள், அதன் கிளைசாதிகள், வர்ணங்கள், ஜாதகம், தோஷம் போன்ற மூடப்பழக்கங்களும் சமூக சீர்கேடுகளின் அனைத்து விவரங்களையும் கொண்டதாக இந்த விளம்பரங்கள் இருக்கின்றன.

தாங்கள் வெளியிடும் செய்திகளைக் காட்டிலும் அழுகி நாறும் சமூகத்தின் மனநிலையை - அப்பட்டமாக இவ்விளம்பரங்கள் மூலம் வெளியிட்டு வரும் பத்திரிகைகள், தரகர்கள், திருமண உதவி மய்யங்கள், பெற்றோர்கள் ஆகியோருடன் கூட்டு சேர்ந்து இந்த 'சாதி வளர்ப்பு சேவை' லாபகரமாக நடத்தப்படுகிறது.

தகவல் தொடர்புகளற்ற பழங்காலங்களில் ஊருக்குள்ளேயே, சமூகத்துக்குள்ளேயே, உறவுகளுக்குள்ளேயே திருமணங்கள் நடைபெற்றன. 'ஏழு செருப்பு தேய பெண் தேடும் சலிப்பு' அப்போது இருந்தது. திருமணங்கள், சாதியையும் அதன் தூய்மையையும் நிலை நிறுத்திப் பாதுகாக்கும் முக்கிய காரணிகளாக இன்று பங்காற்றுகின்றன. ரத்தக் கலப்பும், இனக்கலப்பும் - கலப்புத் திருமணங்கள் வாயிலாக நேர்ந்து விடாதபடி, சாதி என்கிற வளையத்தை உறுதியாய்ப் பிணைக்கும் இத்திருமணங்களுக்கு இன்று வணிக மதிப்பு வந்திருக்கிறது.

'இந்து' நாளிதழ் ஞாயிறு சிறப்பு இணைப்புகளில் தனிப் பகுதியாக இவ்விளம்பரங்களையும், திருமணம் தொடர்பான செய்திக் கட்டுரைகளையும், திருமணப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்களின் விளம்பரங்களையும் வெளியிட்டு சாதி வளர்ப்பில் 'பெரும் சேவை' புரிகிறது. இந்த கூட்டுச் செயல்பாட்டால் சாதியம் இன்று நிறுவனமயப்படுத்தப்பட்டு, வணிகத் தன்மையும் பெற்றிருக்கிறது. இது, சாதியத்தின் 'நவீன அவதாரம்' எனலாம்.

இந்தத் திருமண விளம்பரங்களுக்கு இன்று கணினி மூலம் தொடர்பு கொள்ள தனி மின்னஞ்சல் தளங்களும் கூட இருக்கின்றன:

bride@hotmail.com / wedding@hotmail.com
chettiars@1box.com

இந்தியாவில் காலூன்றிய வேறு மதங்கள்கூட இன்று பார்ப்பனமயமாக்கப்பட்டு, சாதியத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றன என்பதற்கு மிகப் பெரும் சான்றாக இந்த மணமேடை வரிவிளம்பரங்கள் அமைந்துள்ளன.


SWARAR
AMBAKKAM,
024 4804773,
BW/3979/27

28, M.A.,
13,000/- 33, M.A.
9,000/- 33,
4,500/- மணம
மணமகள்கள்
தடையில்லை)
NAL MARRIAGE
VICE,
ISWARAR
DAMBAKKAM,
0 024 4839351,
BW/3980/27

M.B.B.S., M.S.,
15,000/- 26, BE,
22,000/- 32, M.E.,
3,000/- மணம

தெரு, பிச்சனூர், குடியாத்தம் 632 602. போன் 23413.
BW/3989/25

இந்து கிராமணி 29/165 செ.மீ. / சித்திரை சூட்டப்பட்டோர் இருந்திரியர் மாத வருவாய் ரூ. 25000/- வரனுக்கு BE, MCA, PG படித்த பெண் தேவை. ஜாதி தடையில்லை. (SC & ST நீங்கலாக) வரதட்சணை கிடையாது. விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 8870, தினமணி, சென்னை - 600 002.
BW/3991/32

வன்னியர் ... 27 / 155, MCA கல்லூரி விரிவுரையாளர், 10,000/- வருமானம் மணமகனுக்கு தகுந்த படித்த பணியில் உள்ள மணமகள் தேவை. பெட்டி எண் 8871, தினமணி, சென்னை-2.
BW/3992/22

10,000
WAKAR
38th St,
Chennai-7

SC AD, 29,
Industry,
Well Settled
தேவை.
SELECTION
MATCHING
MANNAR ST
CHENNAI-
4356828.

SC AD, 31
(Officer), 14
பெண் தேவை
வேண்டாம்.
RIAGE MAT
4/36, MA
T.NAGAR, C
: 4356828.

சி.எஸ்.அய்., ஆர்.சி., அய்.இ.எல்.சி. போன்ற எல்லா கிறித்துவ பிரிவுகளுடனும் சாதிப் பெயர்களை இணைத்துக் கொள்கின்றனர். மேலும், இசுலாமின் மரக்காயர், ராவுத்தர், லெப்பை போன்ற பிரிவுகளின் பெயரிலும் வருகின்றன.

சாதியற்ற வெளிநாடுகளில் பணி புரிந்து கொண்டு, அங்கேயே வசிக்கும் இந்தியர்களும், புலம்பெயர்ந்த தமிழர்களும் சாதி அடையாளத்துடனேயே திருமண விளம்பரங்களை வெளியிடுகின்றனர். அவர்களுக்குத் தேவையான இணைகளை சாதிச் சான்றிதழுடன் அங்கிருந்தே அடையாளம் காட்டவோ அல்லது இந்தியாவிலிருந்தும், ஈழத்திலிருந்தும் ஏற்றுமதி செய்யவோ தொடங்கியுள்ளன.

திருமணத் தரகுப் பணிகளை சாத்தியப்படுத்த, வேற்று மொழி நகரங்களில் இலக்கியச் சேவை என்ற பெயரில் பணத்துக்கு உளறிவிட்டு வரும் பட்டிமன்றப் பேச்சாளர்களைக் கொண்டு நிகழ்ச்சிகளையும் அந்த நிறுவனங்கள் ஏற்பாடு செய்கின்றன.

இவ்விளம்பரங்களை மேலோட்டமாகப் பார்த்தால், சில சலுகை அறிவிப்புகள் தென்படலாம். வரதட்சணை இல்லை, சாதி தடை இல்லை, உடல் ஊனமுற்றோர் போன்ற விளம்பரங்களுக்கு 50 சதவிகிதம் விளம்பரச் சலுகை உண்டு என்று சாதியற்ற திருமணங்களை ஊக்குவிக்கும் இவ்விளம்பரங்களில், பெரும்பாலானவை -'சாதி தடை யில்லை (எஸ்.சி./ எஸ்.டி. தவிர) என்ற ரீதியிலேயே இருக்கின்றன. தலித் மக்களை ஒதுக்கிய சாதிகளற்ற சமூகம் வேண்டிய கனவுகளுடன் இருக்கும் புரையோடிய மனங்களின் வெட்கங்கெட்ட வெளிப்பாடுகள் இவை.

உத்திரப் பிரதேசத்தில் குழந்தைத் திருமணம் ஒன்றைத் தடுத்து நிறுத்தியதற்காக பன்வாரி தேவி என்ற தலித் பெண், பார்ப்பனர்கள் சிலரால் பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுத்தப்பட்டார். இவ்வழக்கின் தீர்ப்பில் நீதிபதி, 'உயர்சாதியினர் தாழ்த்தப்பட்ட பெண்ணைக் கற்பழித்திருக்க வாய்ப்பில்லை. இது நம்பும்படி இல்லை' என்று தீர்ப்பில் கூறியிருந்தார். இந்தியா முழுக்க கருத்து இதுதான்.

ஒரு மேல்சாதிக்காரன் தனக்கு இணையான அல்லது ஒரு படிநிலை கீழானசாதிப் பெண்ணை மணமுடிக்கலாம். ஆனால், தலித் ஆணோ பெண்ணோ தனக்கு மேல்படியில் உள்ளவர்களை மணக்க முடியாது. இதுவே, மநுதர்ம விதியும் கூட. இந்தக் கருத்து நிலை தீட்டு, பாலுறுப்பு, உடல் நலிவிற்குஉள்ளிட்ட அனைத்திலும் செயல்படுகிறது. ஒவ்வொரு சாதிப் பெண்ணுக்கும் எந்தெந்த உடல் உறுப்புகள் அழகானவையாக இருக்கும் என்பதைச் சொல்லும் சொல்லாடல்களும், பழமொழிகளும் கூட இங்கே உண்டு.

◆◆

**எந்தவிதமான உறுத்தலோ, கூச்சமோ இன்றி சாதியை, சாதியை இறுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் இந்த மணமேடை விளம்பரங்களை, உடனடியாகத் தடை செய்யவும் ஒழுங்குபடுத்தவும் நாம் போராட வேண்டியது அவசியமாகிறது.**



படிப்பகம்

இந்த எல்லா வரையறைகளையும் உள்ளடக்கிய வாசகமாகவே – 'எஸ்.சி. எஸ்.டி. தவிர' என்பது அமைகிறது.

இந்த விளம்பரங்களின் பின்னணியில் இருக்கும் மனித மனங்கள், சாதி மறுப்புத் திருமணங்களுக்கு எதிரானவை என்று மிக உறுதியாக சொல்லி விடலாம். சாதி மாறி நிகழும் திருமணங்களைத் தடுக்கவும் அந்த மணமக்களைக் கொல்லவும்கூட இந்த நபர்களே துணிகிறார்கள். அவ்வப்போது நிகழும் சாதிய மோதல்களும் மற்றும் வன்கொடுமைகளும் சாதி மறுப்புத் திருமணங்கள், காதல் போன்றவற்றிலிருந்தே தொடங்குகின்றன. அரசும் சாதி சமூகங்களுடன் இணைந்தே கலப்பு மணம் புரிந்தோரை ஒதுக்குகின்றது. அரசு தரும் உதவித்தொகை மிகவும் சொற்பமானது.

சாதி நோக்கத்துடன் ஒருவர் தன் பெயரையும் இன்ன பிறவற்றையும் விளம்பரப்படுத்தும் செயலைத் தடை செய்யவும், அதை மறு சீரமைப்பு செய்யவும் ஆரோக்கியமான சமூகம் இன்று யோசிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. எந்தவிதமான உறுத்தலோ, கூச்சமோ இன்றி சாதியை, சாதியை இறுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் இந்த மணமேடை விளம்பரங்களை, உடனடியாகத் தடை செய்யவும் - ஒழுங்குபடுத்தவும் நாம் போராட வேண்டியது அவசியமாகிறது.

''அய்.நா. மாநாட்டில் சாதி வெறியை விவாதிக்கக் கோருவது விஷமத்தனம். இந்த விஷயத்தில் பாரதத்தின் பெயரைக் கெடுக்க - தலித் அமைப்புகளும், மனித உரிமை மற்றும் கிறித்துவக் கூட்டமைப்புகளும் பொய்யான தகவல்களைப் பரப்ப முயல்கின்றன. இதைத் தடை செய்ய வேண்டும்'' என்கிறார் 'இந்து முன்னணி' ராமகோபாலன்.

அவர் கூற்றுப்படி பார்த்தாலும், இல்லாத சாதியை இருக்கிறதாக சொல்லி பொய்யாக விளம்பரம் செய்கிற மணமேடை விளம்பரங்களை, உடனடியாகத் தடை செய்தே ஆக வேண்டும்!

# அம்பேத்கருக்கு எதிராக அம்பேத்கர் மய்யம்!

## சென்னை பல்கலைக் கழகத்தில் தலித் மாணவர்களுக்கு அநீதி

சென்னை பல்கலைக் கழகத்தில் அய்ந்தாண்டுகளுக்கு முன்பு, 'டாக்டர் அம்பேத்கர் பொருளாதார மய்யம்' தொடங்கப்பட்டது. அண்ணலின் அரிய பொருளியல் சிந்தனைகள் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கில் துவங்கப்பட்ட இம்மய்யத்திற்கு, அம்பேத்கர் பற்றிய புரிதல் இல்லாதவர்கள் துறைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருப்பது, மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

1999 ஜுலையில் டாக்டர் அம்பேத்கர் மய்யத்தில் ஆராய்ச்சி அதிகாரி பதவிக்கு விளம்பரம் வந்தது. முனைவர் பட்டம் பெற்ற, டாக்டர் அம்பேத்கர் கருத்தியல் பற்றி ஆய்வு செய்கின்ற பல தலித் மாணவர்கள் இதற்கு விண்ணப்பித்தனர். இரண்டாண்டுகளுக்குப் பின் நேர்முகத் தேர்வு நடந்தது.



இந்நேர்முகத் தேர்விற்கு அம்பேத்கர் பவுண்டேசனிலிருந்து அம்பேத்கரின் கருத்தியலில் நிபுணத்துவம் பெற்றவர்கள் யாரும் வரவில்லை. இதில் நான்கு தலித் மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆனால், டாக்டர் அம்பேத்கருடைய பொருளாதார சிந்தனையில் ஆராய்ச்சி செய்யாத, தலித் அல்லாத ஒருவர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இத்துறையில், சிவப்பிரகாசம் என்ற முனைவர் பட்டம் பெற்ற தலித் மாணவர் ஒருவர் இருந்தார். இவர், தலித் மக்கள் பிரச்சனையில் முனைவர் பட்டம் பெற்றவர். இந்த வேலையை மலைபோல் நம்பி இருந்தார். ஆனால், சனவரியில் நடக்க இருந்த நேர்முகத் தேர்வு தள்ளிப்போனதும் தனது நண்பர்களிடம், இவ்வேலை தனக்குக் கிடைக்காது என்று கூறிவருத்தப்பட்ட அவர், அந்த அதிர்ச்சியிலேயே இறந்தும் போனார்.

இத்தகைய சூழ்நிலையில் தலித் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டு, தலித் அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. டாக்டர் அம்பேத்கர் மய்யத்தில் அம்பேத்கருக்கும் - தலித் மாணவர்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதி, பல கேள்விகளை எழுப்புகிறது.

பல்கலைக் கழகம், 'இந்தப் பதவி தலித் மாணவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது அல்ல' என்று கூறினாலும், டாக்டர் அம்பேத்கரிசத்தில் உயர் நிபுணத்துவம் பெற்றவர்களை ஏன் பணியில் நியமிக்கக் கூடாது. என்று கல்வியாளர்கள் பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

*1. டாக்டர் அம்பேத்கர் பற்றி ஆய்வு செய்கின்ற தலித் மாணவர்கள் இருக்கும் பொழுது, தலித் அல்லாத - டாக்டர் அம்பேத்கர் பற்றி ஆய்வு செய்யாத ஒருவர் நியமிக்கப்பட்டது ஏன்?*

*2. இப்பணித் தேர்வில் டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷனின் பங்கு என்ன?*

*3. டாக்டர் அம்பேத்கர் பெயரில் ஆண்டுக்கு 36 மாணவர்களுக்கு உயர் கல்வி பெற வெளிநாடுகளுக்குச் சென்று படிப்பதற்கான உதவித்தொகை நிறுத்தப்பட்டது போன்று, இப்பணிக்கு தலித் அல்லாதவர் தேர்வு செய்யப்பட்டதும் திட்டமிட்ட ஒரு சதியா?*

*சென்னை பல்கலைக் கழகம் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறது?* ●

- நம் செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com

# தலித் படைப்பாளிகள் மாநாடு



கடந்த பத்தாண்டுகளாக முனைப்பு பெற்று வரும் தலித் கலை இலக்கிய செயல்பாடுகள், தற்போது எவரும் புறக்கணிக்க முடியாத அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளன. தலித் படைப்பாளிகள், தேசிய அளவில் பல விருதுகளைப் பெற்றுள்ளனர். ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளில், தமிழ் தலித் படைப்புகள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

ஆனாலும்கூட, இப்போதும் தலித் படைப்புகளை வெளியிட பத்திரிகைகள் ஆர்வம் காட்டுவதில்லை; பதிப்பாளர்கள் முன்வருவதில்லை. பெரும்பான்மையான தலித் படைப்புகள், சுய முதலீட்டின் அடிப்படையிலேயே நூலாக்கம் பெறுகின்றன. சமூக, அரசியல் தளங்களில் தொடரும் புறக்கணிப்பே இங்கும் நிலவி வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில், தமிழில் தலித் இலக்கிய செயல்பாடுகள் பற்றி மதிப்பீடு செய்யும்போது, தலித் அல்லாதவர்கள் இதில் ஆற்றிய பங்களிப்பைக் குறிப்பிட்டாக வேண்டும். தலித் இலக்கியத்தை முன்வைத்து அவர்கள் செய்த சர்ச்சைகளால் - அதற்குப் பரவலான கவனிப்பு கிடைத்தது உண்மைதான்.

ஆனால், தலித் மக்களின் தனித்துவமான பிரச்சனைகளை அவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் போனதால் - தமது பிரச்சனைகளையே தலித் மக்களின் பிரச்சனைகளாக முன்வைக்கின்ற சூழல் ஏற்பட்டது. அது, தலித் பிரச்சனையின் ஆழத்தையும் தீவிரத்தையும் புறக்கணிப்பதில் சென்று முடிந்தது. இன்று, அந்த நிலை மாறிவிட்டது. படைப்பு மனநிலையென்பது, போராட்டத்தோடு தொடர்பு கொண்டிருக்கும் என்பதற்கு உலகில் பல எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். தமிழ் தலித் படைப்பாளிகளும் இதில் விதிவிலக்குகள் அல்ல என்பதை அவர்கள் நிரூபித்து வருகின்றனர்.

தலித் படைப்பாளிகள் மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம் 17.6.2001 அன்று நெய்வேலியில் நடைபெற்றது. தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த படைப்பாளிகள் இதில் கலந்து கொண்டனர். செப்டம்பர் முதல் வாரத்தில், சென்னையில் இரண்டு நாட்களுக்கு மாநாட்டை நடத்துவதென இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த மாநாட்டுக்காக சென்னை, வேலூர், ஆரணி, புதுவை, தஞ்சை, மதுரை உள்ளிட்ட ஊர்களில் தயாரிப்புக் கூட்டங்களை நடத்துவதெனவும், மாநாட்டையொட்டி - தலித் படைப்புகள், படைப்பாளிகள் குறித்த விவரங்கள் அடங்கிய தொகுப்பொன்றைக் கொண்டு வருவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு பதிப்பாளர்களையும் அணுகி, இந்த சந்தர்ப்பத்தையொட்டி - தலித் மக்களின் நூல்களை வெளியிடக் கேட்பதெனவும், தலித் படைப்புகளடங்கிய தொகுப்பொன்றை மாநாட்டுக் குழு சார்பில் வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள தலித் படைப்பாளிகள், இந்த மாநாட்டில் கவுரவிக்கப் படுவார்கள்.

- தன்னையொரு படைப்பாளியாக உணர்கிற எந்தவொரு தலித்தும் - இந்த மாநாட்டில் கலந்து கொள்ளலாம்.

மாநாடு குறித்த மற்ற விவரங்களைக் கீழ்க்கண்ட முகவரிகளில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**ரவிக்குமார்**
28, வீரபத்ரசாமி கோயில் தெரு
லாஸ்பேட்டை
புதுச்சேரி - 605 008
தொலைபேசி : 0413-253666

**சி. துரைக்கண்ணு**
எப்-47, நேரு தெரு
வட்டம் 25
நெய்வேலி - 607 803
தொலைபேசி : 04142-355254

**கா. அமைதி அரசு**
நேரு தெரு
மேல் சீஷமங்கலம் - 604 504
செய்யாறு வட்டம், திருவண்ணாமலை
தொலைபேசி : 04182 - 44507



படிப்பகம்

www.padippakam.com



# "தலித்துகளுக்கு எதிராக இந்திய அரசு"



**ஹென்றி டிபேன்,** கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மனித உரிமைகள் மீட்புத் தளத்தில் பணியாற்றி வருகிறார். வழக்கறிஞரான இவர், தொடர்ந்து மக்கள் பிரச்சனைகளில் அக்கறையுடன் செயலாற்றி வருகிறார். 1995ஆம் ஆண்டு மதுரையில் தொடங்கப்பட்ட 'மக்கள் கண்காணிப்பகம்- தமிழ் நாடு' அமைப்பின் இயக்குனராகவும் செயலாற்றி வருகிறார்.

கொடியங்குளம், தென் மாவட்ட சாதி மோதல்கள், கோவை மதக்கலவரம், குண்டுப்பட்டி சம்பவம் மற்றும் தாமிரபரணி படுகொலைகள் ஆகிய பிரச்சனைகளில் எழுந்த மனித உரிமை அத்துமீறல்களை - தேசிய மற்றும் உலக அளவில் வெளிக் கொணர்ந்த பெருமை, இவரையும் இவரது அமைப்பையும் சாரும். அய்.நா. அவையின் இனப்பாகுபாட்டுக்கு எதிரான குழு, தேசிய மனித உரிமை ஆணையம் ஆகிய அமைப்புகளுடன் நெருக்கமாகப் பணியாற்றி வரும் இவர், இனப்பாகுபாட்டிற்கு எதிராக நடைபெறவிருக்கும் டர்பன் மாநாடு பற்றிய முக்கிய தகவல்களை 'தலித் முரசு'டன் பகிர்ந்து கொள்கிறார்.

நேர்காணல் : **சி.மா. பிரிதிவிராஜ் 'பூவுலகின் நண்பர்கள்'**

**◇ 1969இல் இந்தியா, அய்.நா.வின் இனப்பாகுபாடு ஒழிப்பிற்கான தீர்மானத்தில் கையெழுத்திட்டது. அப்பொழுதும் தலித் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள். இருந்தன. ஆனால் இப்போதுதான் 'சாதியமும் இனப் பாகுபாடே' என்கிற முழக்கம் வலுப்பெற்று வருகிறது. இதன் பின்னணி என்ன?**

அய்.நா.வின் இனப்பாகுபாடு ஒழிப் பிற்கானத் தீர்மானத்தில் இந்தியா 1969ஆம் ஆண்டு கையெழுத்திடும்போது, அது தன்னை - பாதிக்கும் என்று நினைக்க வில்லை. தென்னாப்பிரிக்காவின் அன்றைய நிறவெறிக் கொள்கைக்கு எதிரான தீர்மானம் என்பதை மட்டுமே கருத்தில் கொண்டு கையெழுத்திட்டது.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியை சேர்ந்த 'தெற்காசிய மனித உரிமை ஆவண மய்யம்' ஒரு மாற்று அறிக் கையை சமர்ப்பித்தது. இந்த அறிக்கை, பல புதிய கேள்விகளை எழுப்பியது. அய்.நா. அவையின் இனப்பாகுபாடு ஒழிப்பிற் கானத் தீர்மானத்தில் உள்ள அதிகாரம் 1இல் குறிப்பிடப்படும் - 'பிறப்பின் அடிப் படையில்' என்னும் சொல், இந்திய சாதியப் பாகுபாட்டை குறிப்பதாக எடுத்துரைத்தது. இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்ட, பழங் குடி மக்கள் பிரச்சனையும் இத்தீர்மானத் தின் வரையறைக்கு உட்பட்டதுதான் என ஆணித்தரமாக வாதிட்டது.

1969 முதல் 1996 வரை யாரும் இப்பி ரச்சினையை இனப்பாகுபாடு ஒழிப்புத் தீர் மானத்திற்குள் பொருத்திப் பார்க்க வில்லை. ஆனால், 1996க்குப் பிறகு அய்.நா. இனப்பாகுபாடு ஒழிப்புக் குழு இப்பிரச்சினையை ஏற்றுக் கொண்டபிறகு அனைவரும் ஆர்வம் காட்டத் துவங்கினர்.

**◇ இந்திய அரசு மீண்டும் மீண்டும் - சாதி வேறு, இனப் பாகுபாடு வேறு என்று கூறி வருகிறது. இந்துத்துவ அமைப்புகளும் இதே கருத்தை முன்னிறுத்துகின்றன. இந்நிலையில், டர்பனில் மனித உரிமை அமைப்புகள் எவ்வாறு இந்திய அரசின் வாதத்தை சந்திக்கப் போகின்றன?**

டர்பன் மாநாடு நம்மை இட்டுச் செல்லும் பாதை கரடுமுரடானது. இருப்பி னும் டர்பனை நாம் அடைந்து விட்டோம். அதுதான் முக்கியமானது. மாநாடு, 2001 ஆகஸ்ட் மாதம் 31 முதல் தொடங்கவிருக் கிறது. முதன் முறையாக, 'தலித் மனித உரி மைகளுக்கான தேசியப் பிரச்சாரம்' டிசம்பர் 1998இல் இந்தியாவில் தொடங்கப்பட்டது. அய்.நா.வின் மனித உரிமைப் பிரகடனம் வெளியிடப்பட்டு 50 ஆண்டுகள் ஆனபிற கும் - தலித் மக்களின் மனித உரிமைகளை மதிக்காத போக்கைக் கண்டித்தும், தலித் மக்களின் மனித உரிமைகளை நிலை நாட்ட வும்தான் இப்பிரச்சாரம் தொடங்கப்பட்டது.

இதன் முக்கிய நோக்கம் - 'தலித் உரி மைகளும் மனித உரிமைகளே' என்னும் கருத்தை உலக அரங்கில் வலியுறுத்துவது. 'தலித் மனித உரிமைகளுக்கான தேசிய பிரச்சாரம்' மற்றும் உலக தலித் ஆதரவு அமைப்பு ஆகிய இரண்டும் 2000 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இணைந்து திட்டமிட்டு, டர்பன் மாநாட்டிற்கான தயாரிப்புப் பணிகளைச் செய்து வருகின்றன.

தலித் உரிமைகளுக்கான தேசிய பிரச் சார இயக்கமும் டர்பன் மாநாட்டில் கலந்து கொள்ளும். இன்றைக்கு, உலகம் முழு வதும் இந்தியாவில் சாதி அடிப்படையி லான பாகுபாடுகள் பற்றிய ஒரு விவாதத் தைக் கிளப்பியுள்ளோம். இதுவே நமக்கு ஒரு வெற்றிதான்.

**◇ ஒரு வேளை இந்திய அரசு இதைத் தடுத்தால்...?**

இந்தியா மட்டும் நமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தால், இவ்வளவு பேர் டர்பனுக்கு ஏன் போகப்போகிறோம்? இன்று தெருத்தெருவாக இதைப்பற்றி பேசியிருப் போமா? இந்தியா நம்மை எதிர்ப்பதால்



படிப்பகம்

www.padippakam.com

தான், இப்பிரச்சனை பற்றி பர பரப்பாகப் பேசப்படு கிறது. இன்றைக்கு 189 நாடு களின் தூதுவர்களும் 'தலித்' என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண் டுள்ளனர். சாதி ரீதியான வன்கொடுமைகளை உலக மக்கள் அறிந்து கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு.

**◇ இனவெறிக்கு எதி ரான டர்பன் மாநாட்டினால் எத்தகைய சட்ட பாதிப்புகள் ஏற்படும்?**

இப்போது இது குறித்து ஒன்றும் திட்டவட்டமாக சொல்ல முடியாது. ஏனென்றால், உலக நாடு கள் இன்றுவரை 'மாதிரி அறிக்கை' குறித்து இறுதி முடிவு எடுக்கவில்லை. முன்பே திட்டமிட்டபடி, இறுதி மாதிரி திட்ட அறிக்கை மற்றும் டர்பன் பிரகடனத்தை சூன் 1ஆம் தேதிக் குள் முடிவு செய்திருக்க வேண்டும்.

**வெளியுறவுத் துறை அமைச்சர் தலைமையில் டர்பன் மாநாட்டுக்குச் செல்லும் குழுவின் முக்கிய நோக்கம், சாதிப்பாகுபாடு பற்றி இந்த உலக மாநாட்டில் விவாதிக்க விடாமல் தடுப்பதுதான்.**

**இந்தக் குழு, குறைந்த பட்சம் இனப்பாகு பாட்டைப் பற்றிக்கூட பேசப் போவதில்லை.**

ஆனால், அனைத்து நாடுகளும் 21 முதல் சூன்1 வரை கூடிப் பேசியும் ஒரு மித்த கருத்துடைய பிரகடனத்தையும் மாநாட்டின் திட்ட அறிக்கையையும் தயாரிக்க முடியவில்லை. சூலை 30 முதல் ஆகஸ்ட் 10 வரை ஜெனிவாவில் மீண்டும் அனைத்து நாடுகளும் கூடிப் பேசப் போகின்றன. இது, உலக நாடுகளின் மூன் றாவது மாநாட்டிற்கான ஆயத்தக் கூட்டம்.

அய்ரோப்பிய நாடாளுமன்றத்தின் மனித உரிமை அறிக்கையை அந்த நாடா ளுமன்றம் ஒருமனதாக ஏற்றுக் கொண்டுள் ளது. அதில், ஒரு பத்தியில் சாதி அடிப்ப டையிலான பாகுபாட்டை எதிர்த்து குரல் கொடுக்கிறது. மேலும் அது, இந்தியாவில் உள்ள 26 கோடி தலித் மக்கள் மீதான சாதிப் பாகுபாட்டை ஒழிப்பதற்கும் - இந்தி யாவுக்கு அருகிலுள்ள நாடுகளில் நிலவும் சாதிப்பாகுபாட்டை ஒழிக்கவும் தேவையான செயல் திட்டத்தை வகுக்க, அய்ரோப்பிய நாடாளுமன்றத்தை வலியுறுத்துகிறது.

**◇ இப்பிரச்சினையில் தென்னாப் பிரிக்க அரசின் நிலைப்பாடு என்ன?**

தென்னாப்பிரிக்க அரசு, சாதிப்பாகு பாட்டிற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. வெறும் வார்த்தைகள் மட் டும் போதாது. திட்டவட்டமான செயல் வேண்டும் என்கிற நமது கோரிக்கை யையும் தென்னாப்பிரிக்க அரசும் மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**◇ சாதிப் பாகுபாடு தொடர்பாக அய்.நா.வில் இந்தியாவிற்கு எதிராக நில வும் சூழ்நிலைகள் என்ன?**

அய்.நா.வில் சாதிப் பாகுபாடுகள், தீண்டாமை என்கிற வார்த்தைகள் அடிக்கடி ஒலிப்பதில்லை. இதை இந்தியா புரிந்து கொண்டு அதற்கு எதிராக செயல்பட்டு வருகிறது. மாறாக, 'தொழில் மற்றும் பிறப்பின் அடிப்படையி லான பாகுபாடு' என்கிற வார்த்தைதான் அடிக்கடி அய்.நா.வில் ஒலிக்கிறது. இது, சாதிப் பாகுபாடுக ளையும் தீண்டாமையை யும் நேரடியாகக் குறிக் கிறது.

மேலும், சிறீலங்கா வைச் சேர்ந்த ஆர். டபிள்யூ. குணசேகரா வை தொழில் மற்றும் பிறப்பின் அடிப்படை யிலான பாகுபாடு குறித்து ஆய்வறிக்கை சமர்ப்பிக்குமாறு அய்.நா. துணைக் குழு கேட்டுக் கொண்டது. எனவே, சட்ட மற்றும் நடைமுறை பாதிப்புகள் டர்பன் மாநாட்டிற்குப் பிறகு, படிப்படியாக நமக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.

**◇ தெற்காசியா மற்றும் உலக அள வில் தொழில் மற்றும் பிறப்பின் அடிப்ப டையிலான பாகுபாடுகளுக்கு எதிரான அய்.நா. தீர்மானங்கள் மற்றும் பிரச்சாரங் கள் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும்?**

இன்று புதிய கூட்டணி உலகம் முழு வதும் உருவாகி வருகிறது. இனி நாடு கள் பலவும் இந்தியாவுடனான தனது உறவில், இந்தியாவின் சாதிப்பிரச்சனை குறித்து கேள்வி கேட்பார்கள். அய் ரோப்பிய யூனியனின் உச்சி மாநாடு இந்த ஆண்டு நவம்பர் மாதம் டெல்லி யில் நடைபெறப் போகிறது. அப்போது அய்ரோப்பிய யூனியனைச் சார்ந்தவர்கள், வெறும் வர்த்தகம் மட்டும் பேசப்போவதில்லை. அய்ரோப்பிய யூனியன் தீர்மானத்தை ஒட்டி தலித் மக்களின் மனித உரிமைப் பிரச்சனை களைப் பற்றி பேசவேண்டும்.

அய்ரோப்பிய யூனியனின் 25 சதவிகித ஏற்றுமதி இந்தியாவிற்கு வருகிறது. 28 சத விகிதம் இறக்குமதி இந்தியாவிலிருந்தும் செய்கிறது. நான் கேட்கிறேன், இந்த நிறுவ னங்களில் எல்லாம் எத்தனை தலித் மக்கள் வேலை செய்கிறார்கள். இன்று அய்ரோப்பிய யூனியன் நமது பிரச்சனைக்கு செவி சாய்க்கத் தொடங்கியுள்ளது. எனவே, அய் ரோப்பிய யூனியன் தனது வர்த்தக உறவு டன் சம்பந்தப்பட்ட இந்தியாவிலுள்ள நிறு வனங்களில் பாகுபாடற்ற முறையில், அனைத்து தரப்பினருக்கும் வேலை வாய்ப்பு வழங்க திட்டம் வைத்திருக்கிறது. இதை இந்திய அரசு முழுவதுமாக அறிந் துள்ளது.

**◇ சாதிப் பாகுபாடுகள் வேறு எந்தெந்த நாடுகளில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன?**

நமது போராட்டம் இன்று தெற்காசிய எல்லையைக் கடந்து விட்டது. இது, இந்தியா, நேபாளம், பங்களாதேசம், சிறீலங்கா, மொரீசியஸ் மற்றும் இந்தியத் தொழிலாளர் கள் காலனியாதிக்கத்தில் எங்கெல்லாம் கொண்டு செல்லப்பட்டார்களோ அந்த நாடு களில், குறிப்பாக மலேசியா, பிஜி, கரீபியன் தீவுகள் மட்டுமல்லாமல் தென் ஆப்பிரிக்கா, நைஜீரியா, செனேகல், மவுரியா, மாளவி, கினியா மற்றும் சில கிழக்கு ஆப்ரிக்க நாடு களிலும் தொழில் அல்லது பிறப்பின் அடிப் படையில் பாகுபாடுகள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, தமிழ் நாட்டில் உள்ள அருந்ததி இன மக்களைப் போன்ற தொழில் அடிப்படையில் பாகுபாட்டிற்குள் ளான மக்கள், கிழக்கு ஆப்பிரிக்க நாடுக



ளிலும் உள்ளனர். அங்கும் நம்மூர் சாதி யைப் போன்ற சமூக அமைப்பு உள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வளர்ந்த நாடுகளில் குடியேறிய இந்திய பாரம்பரியத்தைச் சார்ந்த மக்களிடம், சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் உள்ளன. தொழில் மற்றும் பிறப்பின் அடிப்படையி லான பாகுபாடுகள் இன்று உலகளாவிய பிரச்சனையாகக் கருதப்படுகிறது.

**◇ இப்பிரச்சினையில் தலித் அமைப்பு கள் மற்றும் இயக்கங்களின் அடுத்த கட்டப் போராட்டத்தளங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**



படிப்பகம்

www.padippakam.com

நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து சிந்தனையாளர்களும் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் பிரிவைச் சார்ந்த உறுப்பினர்களும் ஒரே குரலில் - இந்திய அரசு இனப்பாகுபாட்டிற்கு எதிரான தேசிய குழுவை சனவரி 2001இல் எவ்வாறு ஏற்படுத்தியது? என்று குரல் எழுப்ப வேண்டும். இனப்பாகுபாட்டிற்கு எதிரான மாநாட்டில் கலந்து கொள்ளப்போகும் தேசியக் குழுவில், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களைச் சார்ந்த ஒரு பிரதிநிதி கூட இல்லை.

நமது வெளியுறவுத் துறை அமைச்சரின் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு இனப்பாகுபாட்டைப் பற்றி பேசப் போவதில்லை. இந்தக் குழுவின் முக்கிய நோக்கம், சாதிப்பாகுபாடு பற்றி உலக மாநாட்டில் விவாதிக்க விடாமல் தடுப்பதுதான். இந்தக் குழு, குறைந்தபட்சம் இனப்பாகுபாட்டைப் பற்றிக்கூட பேசப் போவதில்லை. இந்திய அரசின் காதுகளைக் கிழிக்கும் அளவுக்கு ஜால்ரா அடிக்கப் போகிறது.

இந்தக் குழுவின் பிற உறுப்பினர்கள் யார்? முன்னாள் தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் ரங்கநாத் மிஸ்ரா, வி. பார்த்தசாரதி, சோலி சோராப்ஜி, பேரா. ஜாபர் (தலித் ஆய்வாளர் என்று கூறிக்கொண்டு தேசிய சட்டக் கல்லூரியில் இருப்பவர். இவரது முக்கிய நோக்கம், அம்பேத்கர் பெயரில் அகாடமி தொடங்கி மத்திய அரசிடம் நிதி பெற வேண்டும். இதற்காகத்தான் இவர் இந்தக் குழுவில் ஆர்வமாகக் கலந்து கொள்கிறார்).

இந்தக் குழுவிற்கு எதிராக அனைத்து தலித் எம்.பி.க்களும் குரல் எழுப்ப வேண்டும். நமது தலித் எம்.பி.க்கள் டர்பன் மாநாட்டிற்குப் போகுமுன்பே அரசு, சாதிப் பாகுபாடு அல்லது தொழில் / பிறப்பு அடிப்படையிலான பாகுபாடு குறித்து என்ன பேசப் போகின்றது என்பதை, நாடாளுமன்றத்தில் விளக்கச் சொல்லி கேட்க வேண்டும். இதை, அரசில் பங்கேற்கும் தலித் அமைச்சர்களும் கேட்கலாம்.

இரண்டாவதாக, மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் அதிலுள்ள பிரிவு 12இன் படி, அய்.நா. மற்றும் பிற சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்கள் இந்திய அரசால் பின்பற்றப்படுகிறதா? என்று கண்காணிக்க வேண்டும். இந்த அடிப்படையில், அய்.நா. இனப்பாகுபாடு ஒழிப்புத் தீர்மானம் அதிகாரம் 1இல் குறிப்பிடப்பட்டுள்ள பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடுகள் கூடாது என்பதை, இந்திய அரசு பின்பற்றுகிறதா? என்று கண்காணித்து, பின்பற்ற வலியுறுத்த வேண்டும்.

**◇ தேசிய மனித உரிமை ஆணையம், எஸ்.சி./எஸ்.டி. ஆணையம், தேசிய பெண்கள் ஆணையம் டர்பன் மாநாடு குறித்து என்ன நிலைப்பாடு எடுத்துள்ளன?**

தேசிய மனித உரிமை ஆணையம் இதுவரை எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை. 1996ஆம் ஆண்டு அய்.நா. இனப் பாகுபாடு ஒழிப்புக் குழுவின் பரிந்துரை வந்து இன்று அய்ந்தாண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும், தேசிய மனித உரிமை ஆணையம் இது குறித்த தனது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை.



**அய்ரோப்பிய யூனியன் நமது பிரச்சனைக்கு செவிசாய்க்கத் தொடங்கியுள்ளது. தனது வர்த்தக உறவுடன் சம்பந்தப்பட்ட இந்தியாவிலுள்ள நிறுவனங்களில், பாகுபாடற்ற முறையில், அனைத்துத் தரப்பினருக்கும் வேலைவாய்ப்பு வழங்க திட்டம் வைத்திருக்கிறது.**

மேலும், தலித் பெண்கள் எல்லாம் பெண்கள் இல்லையா? தேசிய பெண்கள் ஆணையம் இது குறித்த எந்த ஒரு நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. இந்த ஆணையங்கள் எல்லாம் உடனடியாக ஒரு நிலைப்பாட்டை எடுக்க, தலித் எம்.பி.க்கள் குரல் கொடுக்க வேண்டும்.

எனவே, தலித்இயக்கங்கள், எம்.பி.க்கள், தொழிற்சங்கத்தினர், மனித உரிமை ஆர்வலர்கள், தேசிய மனித உரிமை ஆணையத்தை சாதியப் பாகுபாடு குறித்து நமக்கு சாதகமான ஒரு நிலைப்பாட்டை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கடிதங்கள், மனுக்கள், தந்திகள் மூலம் வலியுறுத்த வேண்டும். ஏனென்றால், அவர்கள் நமக்கு சாதகமான முடிவைத்தான் எடுத்தாக வேண்டும்.

நான்காவதாக, டர்பன் மாநாட்டிற்கு தலித் இயக்கங்கள் மற்றும் பல்வேறு தரப்பிலிருந்து பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அரசு அழைத்துச் செல்ல வேண்டும். மாறாக, 'இந்தியாவில் தீண்டாமையே இல்லை' என்று சொல்லக்கூடிய நபர்களைத்தான் டர்பன் மாநாட்டிற்கு அழைத்துச் செல்லப் போகிறார்கள்.

ஆனால், அவர்கள் டர்பனில் இது போல் பேசினால், நிச்சயம் கடும் எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருக்கும். மேலும், இவர்கள் இது போன்ற மாநாட்டிற்கு வருவதே வெளிநாட்டுப் பொருட்கள் வாங்கத்தான். டர்பனில் இவர்கள் இறங்கும்போது, தென்னாப்பிரிக்கா பத்திரிகையாளர்கள் கண்டிப்பாக விமான நிலையத்தில் தீண்டாமை குறித்து கேட்பார்கள். அப்போது இல்லை என்று கூறினால், அவர்களின் எதிர்ப்பை இவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்தியா மற்றும் உலக பத்திரிகையாளர்கள் நமது கோரிக்கைகளை முழுமூச்சாக ஆதரித்து எழுதி வருகிறார்கள். இது, நாளாக நாளாக அதிகரித்து வருகிறது. என்னைப் பொறுத்தவரையில், டர்பன் மாநாடு, சாதிப் பாகுபாட்டிற்கு மட்டுமல்லாமல் - இது இந்திய அரசியல் தலைமைக்கு எதிரான சவாலாகும். இன்றைய இந்துத்துவ சக்திகளின் வகுப்பு வாத கொள்கைக்கு சவாலாகும்.

தமிழ் நாட்டில் தலித் இயக்கங்கள் யாருடன் கூட்டணி, வைக்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். இந்துத்துவ சக்திகளுடனான அவர்களது தற்போதைய சட்டசபை தேர்தல் கூட்டணி, இந்துத்துவ சக்திகள் இது நாள்வரை நுழையாத தென் தமிழ் நாட்டின் கிராமங்களுக்குள் நுழைந்துள்ளன.

இது, தலித் இயக்கங்களுக்கு மிகவும் ஆபத்தை தரக் கூடிய மாற்றமாகும். ஏனென்றால், எந்த சக்திகள் நம்மை தாக்குகிறார்களோ அவர்களோடு இணைவது அபாயகரமானது. ஏனென்றால், இதே இந்துத்துவ சக்திகள் தான் - தொழில் மற்றும் பிறப்பின் அடிப்படையிலான சாதியப் பாகுபாட்டிற்கு எதிரான நமது நியாயமான போராட்டத்தைத் தடுத்திட, இரவு பகல் பாராமல் அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து கடுமையான சவால்களை நமக்கு அளிக்கிறார்கள். அவர்களுடன் நாம் எவ்வாறு ஒரே அணியில் இருக்க முடியும்? ●



படிப்பகம்

www.padippakam.com



# "தலித் பெண்ணியமே பெண்ணியம்"



எனது படைப்புகளுக்கு கரு தேடி எங்கும் அலைந்ததில்லை. கடந்த கால எனது நம்பிக்கைகளும், மதிப்பீடுகளும் நொறுங்கிப்போன அந்த கோரமான பொழுதுகளைக் கடந்து போக முயற்சித்தேன். என் வாழ்க்கையையே எழுத எண்ணினேன். அப்போது உருவானதுதான் 'கருக்கு'. ஆனால் அது தன்னியல்பிலேயே ஒடுக்கப்பட்ட மக்களின் உயிரோட்டமான வாழ்க்கைப் படைப்பாகத் தன்னை ஆக்கிக் கொண்டது.''

'தமிழ்ப்படைப்பாளிகள் முன்னணி' சார்பில் கடந்த ஜூலை 14 அன்று சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் நடைபெற்ற 'பாமா படைப்புகளின் திறனாய்வு' கூட்டத்தில், தனது ஏற்புரையில் தலித் எழுத்தாளர் பாமா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாமாவின் மற்ற படைப்புகளான 'சங்கதி', 'கிசும்புக்காரன்' ஆகியவற்றைத் தனது திறனாய்வுக்கு எடுத்துக் கொண்ட எழுத்தாளர் வ.கீதா, ''தலித் பெண்கள், அவர்கள் சந்திக்கும் நெருக்கடிகள் மிகுந்த சமூகச் சூழலில், மிகக் கடுமையான உழைப்பின் மூலம் அவர்களது குடும்பத்தையே தாங்கி நிற்கின்றனர். தற்சார்பு உடையவர்களாக, துணிச்சல் மிக்கவர்களாகப் பரிணமிக்கின்றனர்.

பாமாவின் படைப்புகளில் பதிவாகியிருக்கும் தலித் பெண்ணியமே ஒரு பொதுவான பெண்ணியமாக இருக்க முடியும். அந்த வகையில் தலித் பெண்களின் அகமும் புறமும் பற்றிய விரிவான ஆய்வுக்கு, பாமாவின் படைப்புகள் நம்மை அழைத்துச் செல்கின்றன'' என்று குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய பத்திரிகையாளர் ஞானி, ''பாமாவின் படைப்புகளில் முன்வைக்கப்படும் தலித் மக்களின் வாழ்வியல் கூறுகள் வியக்க வைக்கின்றன.'' என்றார்.

தலைமை உரை நிகழ்த்திய தலித் சிந்தனையாளரும் எழுத்தாளருமான ரவிக்குமார் குறிப்பிட்டதைப்போல, 'பெரும் எழுச்சியோடு உருவாகிக் கொண்டிருக்கும் தலித் இலக்கியத்தைத்தடுத்து நிறுத்த பெரும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், விடுதலை வேட்கையோடு புறப்படும் எந்தவொரு இலக்கியமும் தடுத்து நிறுத்தப்பட்டதாக வரலாறு இல்லை. மாறாக, இன்னும் பத்தாண்டுகளில் தலித் இலக்கியம்தான் தமிழ் இலக்கியம் என்றாகக் கூடிய சூழலை, தலித் இலக்கியங்கள் உருவாக்கிக் காட்டும்'. ●

- கி.பி. கவிதா

## 'உபகதை' மீதான உபரி விமர்சனம்



'எதிர்திசையில்' கதைகூறும் மொழியைக் கொண்ட 'உபகதை' நாடகம், சென்னை கலைக்குழுவினரால் அண்மையில் நிகழ்த்திக்காட்டப்பட்டது. இந்து மதத்தின் ஜடாமுடியில் மண்டிய பேன்களைப் போல் உதித்த புராணங்களும் தொன்மங்களும் திரிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் வாயடைக்கப்பயன்பட்டதை எதிர்க்கும் பாவனையுடன் பிரளயனால் ஆக்கப்பட்டிருந்தது இந்நாடகம்.

ஏகலைவன், சம்புகன், ரேணுகாம்பாள், அனார்கலி என ஒடுக்கப்பட்டு வீழ்த்தப்பட்டவர்களின் எதிர்(க்கும்) குரலை நாடக நயம் கலந்து வெளிப்படுத்தியிருந்தனர். குறிப்பாக ஏகலைவன்தனது கட்டைவிரலை இழக்கவேயில்லை என்பதை அவனே நிரூபிக்கும் காட்சிக்காக மற்றவர்களின் கதைகளும் இழைக்கப்பட்டிருந்தன.

வெகுஜன அரங்கிற்கு வரும்போது தீவிர கலை வடிவங்கள் தங்களின் படைப்பாக்கத்தைத் தளர்த்திக் கொள்ள வேண்டியதில்லை என்றே தோன்றுகிறது. கூரையைப் பிய்த்தெறியும் ஆடிக்காற்றின் தன்மையைக் கொண்டால்தான் சாதியத்தில் ஊறிப்போன மன உணர்வை அழிக்க முடியும்.

நாடகத்தின் இறுதியில் பார்வையாளர் அனைவரும் ஒத்த உணர்வுக்குத் திரும்பியதில் அரங்கமே எழுந்து நின்று கைதட்டியது. 'உபகதை'யின் குறைபாடாகத் தோன்றியது, அதன் வெளிப்பாட்டில் தலித் பண்பாட்டின் செறிவான வாசனையும், தலித் கலைகளின் கூறுகளும் இல்லாமையே. ஏனெனில், ஒட்டுமொத்தமான ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்கு இப்பொழுது முற்றிலும் தேவை - தலித் கலை, பண்பாடு இயைந்த ஒரு நூதன போராட்ட வடிவமே. ■

- குட்டிரேவதி



படிப்பகம்

www.padippakam.com



# மால்கம் எக்ஸ்

# ஒரு போராளியின் வரலாறு

■ ரவிக்குமார்

மால்கம் எக்ஸ் ஒரு சாதாரண மனிதன்தான். அவர் செய்ததும் மிகச் சாதாரண காரியம்தான். வெள்ளையர்கள்தான் எனக்கூறுவதற்கு அவர்களுக்கென்று யாரும் தேவைப்படவில்லை. ஆனால், கறுப்பர்களின் நிலை அதுவல்ல. கறுப்பர்களும் மனிதர்கள்தான் எனச் சொல்வதற்கும், அதை நினைவில் மங்கிவிடாமல் காப்பதற்கும் ஒருத்தர் வேண்டியிருந்தது. மால்கம் எக்ஸ் அதைத்தான் நிறைவேற்றினார். கறுப்பர்களும் மனிதர்கள்தான் என்று உலகுக்கு அறிவித்த மிக சாதாரண காரியம்தான் அவர் செய்தது.

அவரது பிரவேசத்திற்குமுன் அமெரிக்காவில் கறுப்பர்கள் உரிமை பற்றி யாருமே பேசவில்லையா? பேசத்தான் செய்தார்கள். நீக்ரோக்கள் பின் வரிசையில் நிற்க, அவர்களுக்காக வெள்ளையர்கள் பேசினார்கள். அவர்களை வெள்ளையர்கள் ஆதரித்தார்கள். அவர்களது போராட்டங்களை வெள்ளையர்கள் நடத்திச் சென்றார்கள். நீக்ரோ அரசியல் அப்படித்தான் இருந்தது.

மால்கம் எக்ஸ் பெரியதாக எதையும் செய்துவிடவில்லை. ''நமது போராட்டத்தை நாமே நடத்துவோம்'' என்று சொன்னார். சுயமரியாதையை மீண்டும் வெல்வதற்கான ஒரேவழி அதுதான் என்றார். மனிதனைப்போல வாழ முடியாதவன் மனிதனைப் போல் சாகவும் முடியாது என்பதை அறிந்திருந்த மால்கம் எக்ஸ், இனவெறியால் லாபமடையாத வெள்ளையன் ஒருத்தனும் இருக்க முடியாது என்பதை கறுப்பர்களுக்கு உணர்த்தினார்.

இனவெறியை ஒரு வெள்ளையன் ஏற்றுக் கொள்ளாதிருக்கலாம்; அதைக் கடைப்பிடிக்காமலும் இருக்கலாம். ஆனால், அதனால் அவன் லாபமடையவே செய்கிறான். வெள்ளையனாக இருப்பதே ஒரு அனுகூலமான நிலையை சமூகத்தில் அவனுக்கு ஏற்படுத்தியுள்ளது என மால்கம் புரிந்து கொண்டார்.

இனவெறியை எதிர்க்காத கறுப்பர்களை அவர் மிகவும் வெறுத்தார். இனவெறியை ஏற்றுக்கொள்வதற்கான காரணங்களைக் கண்டுபிடித்துக் கொண்டும், எதார்த்தத்தின் கொடுமைகளை ஏற்றுக் கொண்டும் புன்னகையோடு நாசூக்கோடு நடந்து கொள்ளும் கறுப்பர்களைப் பார்த்து மனம் நொந்த மால்கம் எக்ஸ், ''மனித குல வரலாற்றில் கோழைத்தனத்துக்கான உதாரணங்களாக அவர்களது பெயர்கள் பதிவாகியிருக்கும்'' என்றார். அவர் செய்தது மிக சாதாரணமான காரியம்தான். பொய்களைப் பிடுங்கியெறிந்து விட்டு, அதுவரை கறுப்பர்களும், வெள்ளையர்களும் கேட்க விரும்பாத உண்மைகளை உரத்துக் கூறியதுதான் அவர் செய்தது.

மால்கம் எக்ஸைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில், அவரது தந்தையை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். மால்கமின் குடும்பப் பெயர் 'லிட்டில்' என்பதாகும். அவரது தந்தையான ஏர்ல் லிட்டில், அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணத்தில் ரெனால்ட்ஸ் பகுதியில் வசித்து வந்தார். கறுப்பின மக்கள் சுதந்திரம் பெறுவதற்காக தனது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். அதற்கான பிரச்சாரத்திற்காக பல நாடுகளுக்கும் சென்று வந்தவர். அப்படி அவர் கனடாவுக்குச் சென்றிருந்தபோது



படிப்பகம்

www.padippakam.com

தான், மான்ட்ரீல் நகரில் லூயிஸ் என்ற பெண்மணியை சந்தித்தார். அந்தப் பெண் கிரெனடா நாட்டிலிருந்து வந்தவர். இருவரும் ஒருவரையொருவர் விரும்பினர். 1919இல் திருமணம் செய்துகொண்டு பிலடெல்பியாவில் குடியேறினர்.

அது, முதலாம் உலகப் போர் நடந்த காலம். அந்தப் போரில் கறுப்பின வீரர்கள் காட்டிய வீரமும், செய்த தியாகமும் உலகெங்கும் புகழ்ந்து பேசப்பட்டன. ஆனாலும்கூட, அமெரிக்காவில் அதற்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. வெள்ளையர்களுக்குத் தரப்பட்ட உரிமைகள் கறுப்பர்களுக்கு கொடுக்கப்படவில்லை.

அமெரிக்காவின் பல பகுதிகளில் வெள்ளையர்களோடு அருகருகே குடியிருப்பதற்கு கறுப்பர்களுக்கு அனுமதியில்லை; வெள்ளை இனக் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் கறுப்பினக் குழந்தைகள் சேர்க்கப்படவில்லை; பேருந்துகளில் கூட ஒன்றாகப் பயணம் செய்ய முடியாது; பொது பூங்காக்களில் விளையாட முடியாது; வெள்ளையர்கள் தண்ணீர் குடிக்கும் குழாய்களில் கறுப்பர்கள் நீர் அருந்தக் கூட தடை இருந்தது. இது, சட்டப்பூர்வமாகவே நடைமுறையிலிருந்தது.

கறுப்பர்களுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரத்தை வெள்ளையர்கள் வைத்திருந்தனர். அதில் நீதிமன்ற நடவடிக்கைகள் எதுவும் கிடையாது. கறுப்பர் ஒருத்தர் குற்றம் செய்ததாகக் கூறப்பட்டால், வெள்ளை இனவெறியர்கள் கூடி உடனே அவர்களுக்குத் தண்டனை வழங்கிவிடுவார்கள். வெள்ளையர்களுக்கு ஆத்திரம் வரும்படி நடந்து கொண்டார்கள் என காரணம் கூறி, கறுப்பர்களை அடிப்பதையும் கொல்வதையும் வெள்ளையர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.



மனிதனைப்போல
வாழ முடியாதவன்
மனிதனைப் போல்
சாகவும் முடியாது
என்பதை
அறிந்திருந்த
மால்கம் எக்ஸ்,
இனவெறியால்
லாபமடையாத
வெள்ளையன்
ஒருத்தனும் இருக்க
முடியாது என்பதை
கறுப்பர்களுக்கு
உணர்த்தினார்.

1919இல் நடந்த ஒரு சம்பவத்தை உதாரணமாகப் பார்க்கலாம். அமெரிக்காவின் ஓமாஹா பகுதியில் வில் பிரவுன் என்ற கறுப்பர், ஒரு வெள்ளை இனப் பெண்மணியைத் தாக்கியதாகப் புகார் வந்ததன் பேரில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார். வெள்ளையர்களின் பெரும் கூட்டமொன்று சிறையை சூழ்ந்து கொண்டு வில்பிரவுனை தங்களிடம் ஒப்படைக்கும்படி கலவரம் செய்தது. ஆனால், போலிஸ் அதிகாரி மறுத்து விட்டார். நேரம் செல்லச் செல்ல அந்தக் கூட்டம் பெருகியது. சிறைக்கு தீயிடப்பட்டது. அதில் தலையிட்டு சமாதானம் செய்ய முயன்ற நகர மேயரும் சுடப்பட்டார். அந்தக் கலவரத்தில் பலர் கொல்லப்பட்டனர்.

அதன் பிறகு வில் பிரவுனை அந்த கும்பலிடம் அதிகாரிகள் ஒப்படைத்து விட்டனர். வில் பிரவுன் என்ற அந்த கறுப்பர் உடனடியாகவே சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடலை ஒரு கம்பத்தில் கட்டித் தொங்கவிட்டு சுட்டுக் கொண்டே இருந்தனர். அவரது உடல் சிதைந்து சின்னாபின்னமாகும்வரை சுட்டனர். இதுதான், மால்கம் எக்சின் பெற்றோர்கள் வாழ்ந்த காலத்தின் சூழல். இந்தப் படுகொலையை விடக் கொடுமை, அதை ஆதரித்து பத்திரிகைகளில் எழுதப்பட்ட கட்டுரைகள்தான்.

இவ்வளவு மோசமான சூழலாக இருந்தாலும்கூட, மால்கமின் தந்தையான ஏர்ல் லிட்டில், அதைக் கண்டு அஞ்சவில்லை. கறுப்பின மக்களின் விடுதலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கவே அவர் விரும்பினார். அப்போதுதான் மார்க்கஸ் கார்வி என்பவரின் உரையை அவர் கேட்க நேர்ந்தது.

மார்க்கஸ் கார்வி, 1887இல் ஜமைக்காவில் பிறந்தவர். உலகமெங்கும் கறுப்பின மக்கள் படும் அவலங்களைப் பார்த்த கார்வி, அதிலிருந்து அவர்களை விடுவிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதாரத்தில் வெள்ளையர்களைச் சார்ந்து இருந்தால், கறுப்பர்கள் விடுதலை பெற முடியாது. ''நமக்கான பள்ளிகளை நாமே துவக்குவோம். நமக்கான பொருளாதாரத்தை நாமே கட்டியமைப்போம், நமக்கான வேலைகளை நாமே உருவாக்குவோம்'' என்றார். இத்தகைய தற்சார்பு மட்டும் போதாது. ''உலகெங்கும் உள்ள கறுப்பர்கள் யாவரும் தமது தாய்நாடான ஆப்ரிக்காவுக்குத் திரும்ப வேண்டும்'' என்றார் கார்வி. இதற்காக, 'உலக நீக்ரோ முன்னேற்றக் கழகம்' (Universal Negro Improvement Association (UNIA)



படிப்பகம்

www.padippakam.com

என்ற அமைப்பை கார்வி உருவாக்கினார். 'நீக்ரோ உலகம்' என்ற பத்திரிகையையும் நடத்தி வந்தார்.

கார்வியின் கொள்கை, ஏர்ல் லிட்டிலை மிகவும் ஈர்த்தது. ஓமாஹா பகுதிக்கான தலைவராக ஏர்ல் லிட்டில், கார்வியால் நியமிக்கப்பட்டார்.

ஓமாஹாவில் ஜீவனம் பண்ணுவது கறுப்பர்களுக்குச் சிரமமாயிருந்தது. ஆண்களுக்கே சரியான வேலை கிடைக்காது. கறுப்பினப் பெண்களோ வீடு கழுவும் வேலை கிடைத்தால்கூட அதைப் பெரும் அதிர்ஷ்டமாக எண்ணும் நிலையில் இருந்தனர். அந்த நிலையிலிருந்து ஏர்ல் லிட்டிலும் தப்பிக்கவில்லை. இதற்கிடையில் தனது கொள்கைப் பிரச்சாரத்தை செய்வதற்கு ஏற்ற இடமாக தேவாலயமே அவருக்குத் தென்பட்டது. கறுப்பர்கள் வழிபடுவதற்கு அங்கே அனுமதி இருந்தது. அவர்கள் ஒன்றுதிரளவும் அதுவே வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தது.



மிகச்சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த ஏர்ல் லிட்டில், தேவாலயங்களில் பிரச்சாரம் செய்யும் போது கறுப்பின மக்களின் துயர நிலை குறித்துப் பேசினார். அது ஒரு புறம் கறுப்பின மக்களைக் கிளர்ந்தெழச் செய்தது. மறுபுறம் அதனால் ஏற்படப் போகும் பின்விளைவுகளை எண்ணி அஞ்சி நடுங்கவும் வைத்தது. ஏனென்றால், வெள்ளை நிறவெறியர்களின் ரகசிய கொலைப்படையான 'க்ளு க்ளக்ஸ் க்ளான்' அந்தப் பகுதிகளில் செயல்பட்டு வந்தது. அந்த கொலைப் படையினர் ஏர்ல் லிட்டிலுக்கு எச்சரிக்கை அனுப்பியிருந்தனர்.

ஓமாஹாவில் கறுப்பின மக்களிடையே ஏர்ல் லிட்டிலுக்கு செல்வாக்கு பெருகப் பெருக, வெள்ளை இனவெறியர்களிடமிருந்து அவருக்கு அச்சுறுத்தலும் அதிகரித்தது.

**இனவெறியை எதிர்க்காத கறுப்பர்களை அவர் மிகவும் வெறுத்தார். இன வெறியை ஏற்றுக்கொள்வதற்கான காரணங்களைக் கண்டு பிடித்துக் கொண்டும், எதார்த்தத்தின் கொடுமைகளை ஏற்றுக் கொண்டும் புன்னகையோடு நாசூக்கோடு நடந்து கொள்ளும் கறுப்பர்களைப் பார்த்து மனம் நொந்தார் மால்கம் எக்ஸ்**

இப்படியான சூழலில்தான் மால்கம் பிறந்தார். 1925ஆம் ஆண்டு மே 19ஆம் தேதி ஏர்ல் லிட்டில் தம்பதியினருக்கு நான்காவது குழந்தையாக மால்கம் பிறந்ததற்குப் பிறகு, அவரது பெற்றோர் மில்வாக்கி என்ற பகுதிக்கு குடிபெயர்ந்தனர். ஓமா ஹாவில் இருந்தால் உயிர்பிழைக்க முடியாது என்ற நிலையில்தான் மில்வாக்கிக்கு குடிபெயரவேண்டி வந்தது. இதுபற்றி மால்கம் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

''என்னை கருவில் சுமந்திருந்தபோது ஒருநாள் 'க்ளு க்ளக்ஸ் க்ளான்' படையினர் ஓமாஹாவிலிருந்த எங்களது வீட்டைச் சூழ்ந்து கொண்டார்களாம். கைகளில் துப்பாக்கிகளை உயர்த்திப் பிடித்தபடி அவர்கள் வெளியிலிருந்து கூச்சலிட்டார்களாம். எனது அப்பாவை வெளியே வரும்படி அவர்கள் அழைத்தார்களாம். என் அம்மா கதவருகில் சென்று முன்கதவைத் திறந்து கர்ப்பிணியாக இருக்கும் தனது கோலத்தை அவர்கள் காணும்படியாக நின்று கொண்டு, மூன்று சிறிய குழந்தைகளோடு தாம் மட்டுமே தனியாக இருப்பதாகவும் எனது அப்பா மில்வாக்கி என்ற இடத்துக்கு சென்றிருப்பதாகவும் சொன்னாராம்.''

''மார்க்கஸ் கார்வியின் 'ஆப்ரிக்காவுக்குத் திரும்புவோம்' என்ற கொள்கையைப் பிரச்சாரம் செய்வதை எனது தந்தை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்; ஓமாஹாவிலிருந்து உடனடியாக வெளியேறிவிட வேண்டும். 'இனி மேலும் வெள்ளை கிறித்தவர்கள் பொறுமை காக்க முடியாது' என அந்தப் படையினர் எச்சரித்து விட்டுச் சென்றார்களாம். இதை எனது அம்மா ஒருமுறை கூறினார்'' என மால்கம் தனது சுயசரிதையில் குறிப்பிடுகிறார்.

ஓமாஹாவிலிருந்து மில்வாக்கிக்கு குடிபெயர்ந்த போதிலும் தனது கொள்கையிலிருந்து ஏர்ல் லிட்டில் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. அதில் அவருக்கு மேலும் மேலும் பிடிப்பு கூடியது.

மார்க்கஸ் கார்வியின் 'ஆப்பிரிக்காவிற்குத் திரும்புவோம்' என்ற முழக்கம், கறுப்பர்கள் எல்லோரையும் கவரவில்லை, அதில் உடன்படாதவர்கள் சிலரும் இருக்கவே செய்தனர். அவர்கள் கார்வியின் செயல்பாடுகள் பற்றி அரசாங்கத்துக்குப் புகார் செய்தனர். கார்வியின் நடவடிக்கைகளை அமெரிக்க அரசின் உளவுத்துறையும் கண்காணித்து வந்தது. ''கறுப்பர்களை ஒன்றுபடுத்தும் எந்தவொரு முயற்சியும் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலைத்தான் உண்டாக்கும்'' என உளவுத்துறை அரசுக்கு அறிக்கை அளித்தது. மார்க்கஸ் கார்வியின் செயல்பாடுகளை முடக்க நேரம் பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்க அரசுக்கு அதற்கான சந்தர்ப்பமும் வந்து சேர்ந்தது.

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

திராசு சேரிக்குள் ஒரே பதட்டமும் அலறலும் 28.5.2001 அன்று பரவியது. கண்ணில் பட்ட மக்களுக்கு அடியும் உதையும் விழ விழ சேரியை விட்டு ஓட ஆரம்பித்தனர். சாதி வெறி தலைக்கேறிய கும்பல், வீடுகளை குறிவைத்துத் தாக்குதல் நடத்தியது. 25க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகின.

''பறப்பசங்களா... ஒங்க தெருவுக்குள்ள விடவா மறுக்கறீங்க. வன்னியன பகைச்சிக்கிட்டு எவனும் உயிரோட இருக்க முடியாது'' என்கிற மிரட்டலோடு அந்தக் கும்பல் வெளியேறியது. என்ன நடந்திருக்கிறது? எதற்காக இந்த சேரிமக்கள் தாக்கப்பட்டார்கள்? நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் பண்ருட்டி தொகுதிதான் மிகுந்த பதட்டம் நிறைந்த தொகுதியாய் இருந்தது.

# தீக்கிரையான திராசு சேரி



இத்தொகுதிக்குட்பட்ட திராசு சேரியில் தாழ்த்தப்பட்டோர் அதிகம். இயல்பாகவே இச்சேரி, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் கட்டுக்குள் இருந்தது. வாக்கு கேட்டு வந்த பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளரை சேரிக்குள் விட மறுத்தனர், திராசு சேரி மக்கள். இதன் பின்னணியாகத்தான் இந்தத்தாக்குதலை நடத்தியுள்ளது பாட்டாளி மக்கள் கட்சி.

தட்டாம் பாளையத்தைச் சேர்ந்த பா.ம.க.வின் முன்னணி நிர்வாகிகளான குணசேகரன், கருணாகரன், அம்பிகாபதி, கதிரவன் ஆகியோர்தான் முன்னின்று இத்தாக்குதலை நடத்தியுள்ளனர். இது குறித்து காவல் துறையில் புகார் செய்யப்பட்டது. வழக்கம்போல் காவல்துறை, புகாரைத் தூக்கி குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு, திராசு சேரி மக்கள் வெகுண்டு எழுந்து, தட்டாம் பாளையத்தை தாக்கிவிடுவார்கள் என்கிற யூகத்தின் அடிப்படையில் போலிஸ், பா.ம.க. வினருக்குப் பாதுகாப்பாக, தட்டாம் பாளையத்தில் முகாமிட்டுள்ளது.

சேரிகளை எங்காவது கொளுத்தியிருக்கிறோமா? என்று பத்திரிகை தளத்தில் கேள்வி மட்டும் கேட்கத் தெரிந்த டாக்டர் ராமதாசுக்கு, கொளுத்தும் படலத்துக்கு இன்னும் முற்றுப்புள்ளி வைக்கத் தெரியவில்லையே! •

- சுரேஷ்

மேலவளவு தீர்ப்பு

## திசைமாறும் ஒப்பாரியும் ஓலமும்

மேலவளவு. இந்த சின்னஞ்சிறிய கிராமத்தின் அழகை மலையும் காடுகளும்தான் கட்டியங்கூறின. அன்னாடம் காய்ச்சிகளாய் அப்பகுதி மக்கள் கூழோ கஞ்சியோ ஒரு வேளை கிடைத்தாலும் சாப்பிட்டுவிட்டு நிம்மதியாய் வாழ்ந்தார்கள். ஆனால், 1997ஜுன் 23ஆம் தேதியிலிருந்துதான் அந்த அழகிய மேலவளவு கிராமம் நிலைகுலைந்து போனது.

தாயாய் பிள்ளையாய் வாழ்ந்த மக்களிடையே ஊடுருவிய சாதிவெறியர்களால்தான் மேலவளவு கிராமம், கலை இழந்து - நிம்மதி இழந்து போனது. அரசியல் சட்டத்தின்படி, தனித்தொகுதியாய் மாறிப்போன மேலவளவு கிராமத்தின் தலைவராக முருகேசன் என்கிற தாழ்த்தப்பட்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைப் பொறுத்துக்கொள்ளாத சாதி வெறியர்கள், காட்டுமிராண்டித்தனமாக செயல்பட்டனர்.

விளைவு... பேருந்தில் ஊர் திரும்பிக் கொண்டிருந்த முருகேசன் உட்பட 6 பேர் கழுத்தறுக்கப்பட்டு கொல்லப்பட்டனர். ''அடப்பாவிகளா... இப்படி அநியாயமா கொன்னுட்டீங்களே நீங்க நல்லா இருப்பீங்களா'' என்கிற சேரிப்பெண்களின் ஒப்பாரி, நான்காண்டுகளாகத் தொடர்ந்தது. 1997இல் நடந்த அந்தப் படுகொலைக்கு ஜுலை 27.7.2001 அன்றுதான் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆம். 17 கள்ளர் சாதியினருக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இப்போது ஒப்பாரியும் ஓலமும் திசை மாறியிருக்கிறது. கள்ளர் வீட்டுப் பெண்களும் ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டனர். இவ்வழக்கில் உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் குழு பட்டபாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. மதுரை நீதிமன்றத்தில் வழக்கு நடந்தால், ''சாட்சி சொல்ல வரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை'' என்று சொல்லி உயர்நீதிமன்றத்தில் மனு செய்து, மதுரை நீதிமன்றத்திலிருந்து சேலம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

வழக்கு மாற்றப்பட்டதிலிருந்தே வழக்கறிஞர் குழுவுக்கு தொடர்ந்து கொலை மிரட்டல். ஆனாலும், இத்தகைய கொலை மிரட்டலுக்கு அஞ்சாமல் வழக்கை நடத்தினர். சாட்சிகளும் மிரட்டப்பட்டன. இதையெல்லாம் மீறி வழக்கு நடத்தி முடிக்கப்பட்டன. இப்போது 17 பேருக்கு ஆயுள் தண்டனை தரப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மொத்தம் 41 நபர்கள். மீதி நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அரசியல் நெருக்கடிகளால் தீர்ப்பு திசைமாறியதாகத் தெரிகிறது. எல்லா துறைகளுமே சாதிமயமாகியுள்ள சூழலில், இறுதியில் நீதிமன்றத்தைத்தான் - நீதி மறுக்கப்படும் மக்கள் நம்ப வேண்டியுள்ளது.

அரசியல் ரீதியாக பரபரப்பாகப் பேசப்பட்ட இந்த வழக்கில், குற்றமிழைத்தவர்களுக்கு ஓரளவு தண்டனை கிடைப்பதற்கே நான்கு ஆண்டுகளாகப் பெரும்போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது எனில், பிற வழக்குகளைப் பற்றி எதுவும் சொல்லத் தேவையில்லை. ■

- ஜெ.ஜெ.



படிப்பகம்

www.padippakam.com







*"திருமணம் என்பது ஆணுக்குப் பெண்*
*அடங்கி வாழும் வாழ்க்கை அல்ல.*
*மனத்தாலும், கொள்கையாலும் ஒருமனப்பட்ட*
*இருவர் கூடிவாழும் ஏற்பாடே ஆகும்"*

- தந்தை பெரியார்

# வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த அழைப்பிதழ்

நாள் : **23.08.2001, வியாழன் காலை 10 மணி**

இடம் : **மணமகன் இல்லம், வடக்கு சோட்டையன் தோப்பு**
**தூத்துக்குடி - 628 002**

மணமகன்

## ச.கா. பாலசுப்பிரமணியன்

தூத்துக்குடி மாவட்ட தலித் சேனா செயலாளர்

மணமகள்

## சு.ஜெ. ஆனந்தி

பெற்றோர் : சுந்தர்ராஜ் - ஜெகதலா
கோவிலம்மாள்புரம், களக்காடு, நெல்லை மாவட்டம்

தலைமை
**எஸ். நடராசன்**
பொதுச் செயலாளர், தமிழ் மாநில லோக் ஜனசக்தி

முன்னிலை
**ஏ.பி. வள்ளிநாயகம்**
கொள்கை - திட்டக்குழுத் தலைவர், தமிழ் மாநில லோக் ஜனசக்தி

வாழ்க்கை ஒப்பந்த நினைவு நூல் வெளியீடு
**கே.எம். சரீப் எம்.ஏ.**
மாநிலத் தலைவர், இஸ்லாமியர் - தலித் கூட்டமைப்பு

வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்புரை
**ச. வித்யாதரன்**
பொருளாளர், தமிழ் மாநில லோக் ஜனசக்தி

வரவேற்புரை
**சொ.சு. தமிழினியன்**

(வி.ம்.)

லோக் ஜனசக்தி தேசியத் தலைவர் - இந்திய அரசின் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் **மாண்புமிகு ராம்விலாஸ் பாஸ்வான்,** தமிழ் நாடு தலித்சேனா தலைவர் **அய்யா பெ. சந்திரசேகன்** ஆகியோர் நல்வாழ்த்துகளுடன் நிகழும் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றோம்.

**எஸ். கோபால்**
செயற்குழு உறுப்பினர்
தூத்துக்குடி மாவட்ட தலித் சேனா

**எஸ். அருள்குமார்**
இளைஞரணித் தலைவர்
தூத்துக்குடி மாவட்ட லோக் ஜனசக்தி

படிப்பகம்

www.padippakam.com

# அறிவுச் சுரண்டல்

## வெவ்வேறு வடிவங்களில் ...

**கலை இலக்கியத் துறைகளில் தன்னிகரற்று விளங்கும் டாக்டர் கே.ஏ. குணசேகரன் அவர்கள் எழுதிய 'பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு' நாடக நூல் அண்மையில் 'அடையாளம்' பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. சென்ற இதழ் தலித் முரசிலும் இந்நூல் அறிமுகப்படுத்தப்பட்டது. காலங்காலமாக நமது படைப்புகளையும் ஆற்றலையும் களவாடிய கூட்டம், இன்றளவும் நம் ஆக்கங்களை - வெவ்வேறு வடிவங்களில் பறிக்கத் துடிக்கிறது. ஆம், தற்பொழுது இந்நூலின் உரிமையை சொந்தம் கொண்டாட, 'எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு நிறுவனம்' என்ற பெயரில் இயங்கும் ஒரு பார்ப்பன கேந்திரம் முயற்சிக்கிறது. இதுகுறித்து 8 பக்கங்கள் 'விளக்கமளித்து' ஒரு சுற்றறிக்கையை அது வெளியிட்டுள்ளது. இதற்கு பதிலடி கொடுத்து, டாக்டர் கே.ஏ. குணசேகரன் வெளியிட்டுள்ள உண்மை அறிக்கையின் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.**

*'பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு' நாடகப் பிரதியை ஆக்கியவன் நான்தான் என்பதற்கு நாடக அரங்கேற்றத்தின்போது வெளியிடப்பட்ட பிரசுரமே சான்று. அதில் பிரதி மற்றும் நெறியாள்கை என்ற எனது பெயரே குறிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரதியை நான்தான் உருவாக்கினேன் என்பதை 'துண்டு பிரசுரகர்த்தா' எங்கும் மறுக்கவில்லை. அப்படியிருக்கும்போது, கூட்டுமுயற்சி என எனது அடையாளத்தை அழிக்க முற்படுவது ஏன்?*

**இந்த சமூகம் தலித் மக்களை முகமற்றவர்களாக, அடையாளம் அற்றவர்களாக, தனித்துவம் இல்லாதவர்களாகக் காட்டி வருகிறது. இதை எதிர்கொள்ளும் போது, தனது தனித்துவத்தை நிலை நிறுத்த வேண்டிய தேவை ஒரு தலித்துக்கு உள்ளது. நாடகத்தை கலகமாக நீட்டிக்கும் போது, அங்கே அது கூட்டுமுயற்சியாக இருக்கும். எங்கே தனித்துவத்தை நிறுவ வேண்டும், எங்கே கூட்டு அடையாளத்தை முன்வைக்க வேண்டும் என்பதை தலித் மக்கள் நன்றாக அறிவார்கள்.**

*'படைப்புலகத்தில் சனநாயகத் தன்மையோடு இயங்கும் துறை அரங்கத்துறை' எனவும் 'அதனை மேலும் சனநாயகப்படுத்தி வரும் முயற்சிகள் உலகெங்கும் நடைபெறும் சூழல் இது' எனவும் பிரசுரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. சனநாயகம் என்ற கருத்தாக்கம் சமத்துவத்தோடு தொடர்புடையது. இதை வேறு எவரைக் காட்டிலும் தலித் மக்கள் நன்கறிவார்கள். எனது நாடகங்களின் உட்கருத்தாக இந்த சமத்துவமும், சனநாயகமுமே இருக்கின்றன. தன்னை முன்னிறுத்திக் கொள்ளாமல், ஆதிக்க உணர்வு இல்லாமல் நடப்பதென்பது - தனது தனித்துவத்தை அழித்துக் கொள்வதாகாது.*

*விளிம்பு நிலை என்பதை அ. மங்கையால் உணர முடியுமா? விளிம்பு நிலை மக்களது சொற்களும் கருத்துகளும் அவருக்கு பணமும் புகழும் ஈட்டித்தரும் கச்சாப் பொருட்கள் மட்டுமே. மனிதப் பண்புகளை மலினப்படுத்தி தன்னை வளப்படுத்திக் கொள்ள விழைவோர் பெருகிவிட்ட சூழல் இது. தலித் மக்கள் இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற விதிகளை ஆதிக்க மனங்கள் உள்ளூர வகுத்து வைத்துக் கொண்டுள்ளன.*

*நன்றியோடு இருப்பதை விசுவாசமாகவும்; தன்னடக்கத்தோடு இருப்பதை அடிமைத்தனத்தின் தொடர்ச்சியாகவும் எடுத்துக்கொள்கிற ஆதிக்க மனம், தோழமையின் அர்த்தத்தை ஒப்பந்தம் என்பதாகவே எடுத்துக் கொள்ளும். இப்படி விதிகள் வகுக்கப்படுமெனில், அவை தந்திரமான தேன் தடவிய வார்த்தைகளால் முன்வைக்கப்படுமெனில், அவற்றை ஏற்றுக்கொண்டு சுகம் காணும் பிறவிகளாக இனியும் தலித்துகள் இருக்க மாட்டார்கள்.*

*'பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு' என்ற நாடகத்தையொட்டி நடக்கின்ற இந்த சர்ச்சை, தமிழின் அறிவுச் சூழலில் ஆதிக்க சாதிக் கருத்துகள் மறு உறுதி செய்யப்பட நடக்கும் எத்தனங்களின் அடையாளங்கள். இந்தப் பிரசுரத்தை திறவுகோலாகக் கொண்டு, அந்த இருண்ட பகுதிகளுக்குள் நுழைந்து பார்க்கப் போகிறவர்களே - உண்மையான சிந்தனையாளர்களாக இருக்க முடியும்.*

**- டாக்டர் கே.ஏ. குணசேகரன்**

# வீரவணக்கம்

வடாற்காடு மாவட்டம் என்று அழைக்கப்பட்ட வேலூர் மாவட்டம், தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைகளைப் பெற, 1930 களிலேயே இயக்கங்களை வேர்விட்டு வளரச் செய்த மாவட்டமாகும். இங்கு எண்ணற்ற போராளிகள் விளைந்திருக்கின்றனர். அந்தப் பட்டியலில் இணைத்து நம்மால் போற்றக்கூடியவர் டாக்டர் எஸ். பெருமாள்.



'சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், கல்வியாளர், சமூக சீர்திருத்தவாதி' என்று முன்னாள் மேதகு ஆளுநர் ஆ. பத்மநாபன் அவர்களால் பாராட்டப்பட்ட டாக்டர் எஸ். பெருமாள் அவர்கள் 9.7.2001 அன்று இயற்கை எய்தினார்.

1957இல் தொடங்கி, தன்னுடைய கல்விப்பணியை, 34 ஆண்டுகள் தமிழகத்தின் பல்வேறு கல்லூரிகளில் ஆற்றினார். மத்திய அரசுப் பணிகளுக்கான சென்னை முன் தேர்வு பயிற்சி மய்யத்தின் முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

டாக்டர் எஸ். பெருமாள் அவர்களின் சமூகப் பணிகள் எண்ணிலடங்காதவை. கல்வியின் மூலமாகவே சமூக விடுதலையை வென்றெடுக்க முடியும் என்று கருதிய அவர், கல்விச் சங்கங்கள் தொடங்கி பணியாற்றினார். 'நாட்டாண்மைக்காரர்கள் சங்கம்' நிறுவி, அதன்மூலம் கிராமங்களில் அம்பேத்கரியலை எழுச்சியுடன் பரப்பினார்.

இன்று தலித் விடுதலை ஆர்வலர்களின் ஆயுதமாக விளங்கக்கூடிய அம்பேத்கரின் நூல் தொகுதிகளை வெளியிடும் 'இந்திய அரசின் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் நூல்களின் தமிழாக்கத் திட்டத்தில்' நிர்வாக பதிப்பாசிரியராய் இருந்து - தமிழ் வழியில் அண்ணல் நூல்கள் வெளிவர அரும்பணி ஆற்றினார். அண்ணலின் 23 ஆவது தொகுதியை அண்மையில்தான் மொழி பெயர்த்தார்.

உயர்கல்வி, பதவி பெற்றதும் 'மூன்றாந்தரப் பார்ப்பனர்களாகி' விடுகின்ற தலித் மக்களிடையே அய்யா பெருமாள் போன்றவர்களின் பணிகள் நமக்கு நம்பிக்கையையும் - ஊக்கத்தையும் அளிக்கின்றன என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

டாக்டர் எஸ். பெருமாள் அவர்களுக்கு நம் வீரவணக்கம். ■

*- வாக்கி*



படிப்பகம்

www.padippakam.com



# இசைஞானி பற்றிய ஓர் இசை அலசல்

■ டாக்டர் கே.ஏ. குணசேகரன்

இசை - சூழலை உணர்த்தும் உன்னதமான ஊடகமாகத் திரையில், நாடகத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உலகெங்கிலும் திரை மற்றும் நாடகம் இவற்றிலும் 'ஓபேரா' (opera) போன்ற கலை வடிவங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நாடகங்களிலும் திரைப்படங்களிலும் இசை பலவகையான சூழல்களை விளக்கப் பயன்பட்டு வரும் விதங்களைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

• பார்வையாளரை ஆயத்த நிலைக்கு உள்ளாக்குவது • குறிப்பிட்ட சில காட்சிகளை விளக்குதல் • காட்சி மாற்றங்களைத் தெரிவித்தல் • காட்சி மாற்றங்களை மேலும் விளக்குதல் • திரையில்/மேடையில் காட்ட முடியாத காட்சிகளை விளக்குதல் • நாடகத்தை / சினிமாவை விறு விறுப்பாக்கல் • நாடகம் / சினிமாவை முடித்து வைத்தல்.

நாடகத்துக்கான இசைப்பயன்பாடு எனும் ரீதியில் இக்கூறுகள் விளக்கப்பட்டிருப்பினும், திரைப்படத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அல்லது அமைப்பதற்கு உரிய கூறுகளாகவே நாம் காண முடியும்.

**பார்வையாளரை / ரசிகர்களை ஆயத்தப்படுத்துதல் :**

'பாரதி' திரைப்படத்தைப் பார்க்க ஆயத்தப்படுத்தப்பட்டிருப்பதை உணரலாம்.

நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ

சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர் விடும் வடிவுடன்
படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
....................................

எனும் பாடல், படம் தொடங்கும் போது பாரதியின் சடலம் சுடுகாட்டுக்குத் தூக்கி வரப்படும் 'டிரம்' ஓசை சோகமாக அமைதி நடையில் வாசிக்க, வீணை பாடலை நரம்பின் அதிர்வுகளாய் இசைக்கும். படம் முழுவதும் ஆங்காங்கே இந்தப் பாடலின் இசை தொடர்ந்து அவ்வப்போது காட்சிகளில் நினைவூட்டப்பட்டு இறுதியில் பாடல் இசைமேதை இளையராஜா அவர்களால் பாடப்படும்.

**குறிப்பிட்ட சில காட்சிகளை விளக்குதல் :**

மனைவி செல்லம்மாள் கணவன் பாரதியை விட்டுப் பிள்ளைகளைக்கூட்டிக்கொண்டு தன் சகோதரர் வீடான கடையத்துக்குச் சென்றுவிடுவாள். பாசமுள்ள மனைவி, குழந்தைகள் சொல்லாமல் போய்விட்டனரே எனும் ஆழ்ந்த வருத்தத்தில் இருக்கையில் சாய்ந்து கிடப்பார். அப்போது பாரதியின் பாடலான,

நின்னைச் சரணடைந்தேன் -
கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்
பொன்னை பொருளை
புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள்
தின்னத் தகாதென்று (நின்னை)

எனும் பாடலை வருத்தமும் ஏக்கமும் பாசமும் கொண்ட உணர்வு வெளிப்படத்தக்க இசையில் தன் மகள் எண்ணிப் பாடுவதாகக் காட்சி அமைக்கப்பட்டிருப்பதை, படம் பார்த்த ரசிகர்கள் மறந்திருக்க இயலாது.

நீண்ட நாட்கள் கழிந்து விட்டதாகப் பாடல் முடிவில் தாடி மீசையுடன் பாரதி இருக்கும் போது மனைவி வீட்டுக்கு வந்து சேருவார். அப்போது, பாரதி பாடுவதாக எண்ணி இளையராஜா தன் பொருத்தமான குரலில்,

'நின்னைச் சரணடைந்தேன் - கண்ணம்மா' எனும் இரண்டுவரிகளை மட்டும் இசைத்திருப்பார். காட்சிப் பொருத்தப்பாடு, காட்சி விளக்கம், காட்சியின் சங்கிலித் தொடர்பு என பரந்த நிலையில் புரிந்து இசைத்திருக்கும் இசைமேதையை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.



பானையில் அரிசி, பருப்பு என எப்பண்டமும் இல்லை என வருந்தும் போது வறுமையை விளக்க, காட்சிப்படுத்த வீணை நரம்புகளை அழுது புலம்ப வைத்திருக்கும் இசைமேதையை என்ன சொல்லிப் பாராட்டுவது.

'மூன்றாம் பிறை' எனும் திரைப்படத்தில் சுயநினைவிழந்த பெண்ணைத்தன் அடைக்கலமாய் வைத்திருக்கும் கதாநாயகனின் உள்ளம் எத்தகையது என்பதை வார்த்தைகளால் விவரிக்க இயலாத நிலையில், இசை வழியே இளையராஜா விளக்கியிருப்பார்.

கண்ணே கலைமானே
கன்னிமயிலெனக் கண்டேன்
உனை நானே



படிப்பகம்

www.padippakam.com

அந்திப் பகல் உனை நான் பார்க்கிறேன்
ஆண்டவனை இதைத்தான் கேட்கிறேன்

ஆரிராரோ ஓ ஆரிரோ
ஆரிராரோ ஓ ஆரிரோ

என ஒரு குழந்தையைத் தாய் தாலாட்டும் உணர்வில் பாசம், நேசம், உறவினை மெச்சுகிறவர்களுக்குக் காட்டச் செய்திருப்பார் இளையராஜா.

பாவாடை சட்டை அணிந்திருக்கும் அடைக்கலப் பெண்ணுக்கு சேலை வாங்கிக் கட்டிவரச் சொல்லிக் காத்திருக்கும் போது, சேலைகட்டத் தெரியாத அவளைக் கண்டதும் பின்னர் அவளைத்தன் வாழ்க்கைத் துணையாக கனவுகாணும் நொடிப் பொழுதின் போதும் - 'கண்ணே கலைமானே' இசை எழுப்பப்படும்.

அவள் புத்தி தெளிந்து தாய் தந்தையோடு ரயிலில் பயணம் செய்து போகின்ற போதும் இப்பாடல் இசை நினைவுபடுத்தப்படும். ஒரு குறிப்பிட்ட இசை குறிப்பிட்ட சூழலுக்கு இசைக்கப்பட்டு வெவ்வேறு சூழலுக்கு வாசிக்கப்படும் போது, ரசிகர்களிடையே ஏற்கனவே இருந்த மனப்பதிவு என்பதை அழுத்தப்படுத்தி உணர்த்திக் காட்டி கதையின் அமைப்பை விளக்குவதோடு - காட்சிகளைத் தொடர்ந்து கண்டுணர்ந்து கதையோடு பின் தொடர, இசை பெரிய வழிகாட்டியாக திரை ரசிகர்களுக்குப் பெரிதும் அமைந்து விடுகிறது.

*காட்சி மாற்றங்களை விளக்கல்:*

'மூன்றாம் பிறை' திரைப் படத்தில் காட்சி மாற்றங்கள் நிறைய இடம் பெறும் போது, இசையின் பங்கு அழுத்தமாக வெளிப்பட்டிருக்கும்.

அடைக்கலமாய் வந்த பெண் காணாமல் போய்விட்டாள் எனத் தேடி அலையும் போது, சிம்பொனி இசைபோல இசைக்கருவிகளின் இசைக் கோர்வை அளவெடுத்து ஒலிக்கும். மனம் அலைபாய்வதையும், அல்லல்படுவதையும், கிடைத்து விடமாட்டாளா எனும் ஏக்க உணர்வையும் வெளிப்படுத்தத் தக்கதாக இசைக்கோர்வை மன வேகத்தையும் மனநிலையையும் பிரதிபலிக்கும்.

வில்லன் கதாநாயகியைத் தன் ஆசைக்குப் பயன்படுத்த ஏய்த்துக் கூட்டிச் செல்லும்போதும் பாழடைந்த பங்களாவிற்குள் அழைத்துச் செல்லும்போதும் ரசிகர்களிடையே மனம் பதைக்கச் செய்ய, குழல் இசை ஓசை போல விட்டு விட்டு அதிர்ந்து (vibration) தாழ்ந்த நிலையில் (Base) வாசிக்க கேட்கமுடியும்.

கதாநாயகன் அவளைக் கண்டு விளக்கம் கேட்டறியும்போது மகிழ்ச்சியும் பின்னர் ஆத்திரமுமான இசை வாசிக்கப்படும். வில்லனைத்தாக்கிடத் தேடிச் செல்லும்போது, கேரளத்து ஜண்டை தாள இசைக்கருவியின் தாளவாசிப்பு

டமர டமர டமரக்க டம்
டமர டமர டமரக்க டம்

என வாசிக்கப்படும். வில்லனுடன் சண்டை போடும் வரை ஜண்டை இசைக் கருவியின் வாசிப்பு அமையும். இப்படித் தொடர்ந்து வரும் சங்கிலித் தொடர் போன்ற காட்சிகள், வேறு வேறு உணர்வுகளைக் கொண்டவை என்பதை காட்சி தொடங்கும் முன்பாகவே ரசிகர்களுக்கு குறிப்பிட்ட உணர்வோட்டத்தை உணர்த்த வேண்டி, இசை மாற்றி மாற்றி வாசிக்கப் பட்டிருப்பதை உணரமுடியும்.



'முள்ளும் மலரும்' திரைப்படத்தில் இடம் பெறும் நாயகன், மலைப்பாதையில் மலையையும் அதன் அழகையும் ரசித்தவாறு கார் ஓட்டிக் கொண்டு வருவார்:

> **இளையராஜாவின் இசை, கேமராவின் காட்சிகளுக்கு ஏற்ப சாலை, மலை வளம், திருவிழா என காட்சி மாற்றங்களுக்கேற்ப சூழல்கள் வேறு வேறு என உணர்ந்து - ரசிகர்களை மெல்ல கைப்பிடித்துக் கூட்டிச் சென்று ரசிக்க வைக்கும் திறன் வியப்புக்குரியதாகும்.**

செந்தாழம் பூவில் வந்தாடும் தென்றல்
என்மீது மோதுதம்மா
பூவாசம் மேடை போடுதம்மா
பெண்போல ஜாடை பேசுதம்மா
அம்மம்மா ஆனந்தம்
அம்மம்மா ஆனந்தம்

என்று பாடல் பாடிக் கொண்டு கார் ஓட்டியவாறு மலை அழகை ரசித்துவருவார். இப்பாடல், அதன் இசைக் குரல் வளம், இடைநிலை இசை இவையாவும் ரசிப்பதற்கான விருந்தாக அமைக்கப்பட்டிருக்கும். பாடல் தொடங்கும் முன்பு,

ம்... ம்... ம்... ம்... ம்...
ம்... ம்... ம்... ம்... ம்...

எனும் படியான 'ஹம்மிங்' செய்யப்பட்டுப் பாடல் தொடங்கும். பாடல் பாடவுள்ள குரல் தொடங்கும் முன்பதாக புல்லாங்குழல் வாசிப்பும், தொடர்ந்து ஆர்கன் (organ) இசை ஆரம் இசைக்கப்படும். குரலிசை (ஹம்மிங்) புல்லாங்குழல் ஆர்கன் இவற்றின் இசை ஒழுங்கமைதி, பச்சைப் பசேல் என உள்ள மரங்கள், மலர்கள், நீர் வீழ்ச்சிகள், மலை முகடுகள், பனிப் புகைமேவிய மலை வளக்காட்சிகள் என கேமரா காட்சிப் படுத்துவதை ரசிகர்கள் நுகரத்தக்க வகையில் - இளையராஜாவின் பாடலிசை அப்படத்தில் அமையும்.

வளைந்து நெளியும் போகும் பாதை
மங்கை உந்தன் கூந்தலோ

பள்ளம் சிலர் உள்ளம் என ஏன்
படைத்தான் ஆண்டவன்

எனும் பாடல் அடி இடம் பெறும் போது, மகுடி இசை இசைக்கப்பட்டிருக்கும். வளைந்து நெளிந்து செல்லும் சாலை பாம்பு போலக் காட்சியளிப்பதாக இசை ஞானிக்கு சொல்லப்பட்டிருந்ததால், பாட்டில் இடம் பெறும் அக்குறிப்பிட்ட பாடல் அடி இடம் பெறும் அக்கண நேரத்தில் - மகுடி இசை இடம் பெற்று 'இசையணி' அப்பாடலில் நேர்த்தியாகச் செய்யப்பட்டிருக்கும்.

உறியடித்திருவிழாவில் உறியடித்தல் காட்சியைத் திருவிழா காணவந்த மக்கள் காணக்கிளம்பும் போது நாயனம், தவில், இசைக்கருவி என கிராமிய இசைக்கருவிகளின் இணைவிலான நய்யாண்டிமேள வாசிப்பு அமையும்.

கிராமியக் கலை நிகழ்ச்சி, கிராமியத் திருவிழா, மக்கள் பங்கேற்பு கிராமியப் பண்பாடு எனும் உணர்வுடன் காட்சிப் படுத்தியிருக்கும் அதே திரைப்படத்தில், இளையராஜாவின் இசை, கேமராவின் காட்சிகளுக்கு ஏற்ப சாலை, மலை வளம், திருவிழா என காட்சி மாற்றங்களுக் கேற்ப சூழல்கள் வேறு வேறு என உணர்ந்து - ரசிகர்களை மெல்ல கைப்பிடித்துக் கூட்டிச் சென்று ரசிக்க வைக்கும் திறன் வியப்புக்குரியதாகும். இதனை நாம் அவர் இசையமைத்த பல படங்களில் பரவலாக உணர முடியும். காட்சி மாற்றங்களை மேலும் அழுத்தப்படுத்தி விளக்கிக் காட்ட, இளையராஜாவின் இசை துணை செய்வது குறித்து இனி விளக்கலாம். ●

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com



# இனவெறியும் இனவெறிக்கெதிரான எழுச்சியும்

■ மாயா

ஆப்பிரிக்காவின் தலைசிறந்த நாயகனாய் கருதப்படும் நெல்சன் மண்டேலா, 'போராட்டமே எனது வாழ்வு' என தனது வாழ்க்கைக் குறிப்பில் எழுதியவர். ஏறத்தாழ 65 ஆண்டுகள் அரசியல் வாழ்வில் கழித்தவர். அதில் 28 ஆண்டுகள் சிறையில். இனவெறிக்கு எதிரான தென்னாப்பிரிக்காவின் நெடிய போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய மண்டேலா, சிறைச்சாலையில் இருந்தபொழுதும் அரசியல் கல்வியை ஒருங்கிணைப்பதில் ஈடுபட்டவர்.

நீண்ட சிறைவாசத்திலும் மனந்தளராத மண்டேலாவின் அரசியல் முயற்சிகளைப் போலவே, அவரது நாட்டு மக்களும் கொடிய நிறவெறி ஆட்சியில் மனந்தளராது போராடி வெற்றி கண்டனர். இனவெறியை அரசியல் ரீதியாக வெற்றி கொண்ட தென்னாப்பிரிக்க மக்களின் போராட்டத்திற்கு மண்டேலா மட்டுமே காரணம் அல்ல. மக்கள் தொகையில் வெறும் 13.2 சதவிகிதமே இருக்கும் வெள்ளையர்கள், 75.6 சதவிகிதமிருக்கும் கறுப்பின மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட இனவெறியின் கோரத் தாண்டவமே முழு முதற்காரணம்.

எல்லா அடிப்படை விஷயங்களுக்கும் - இருப்பிடம், வேலை, ஓரிடத்தினை விட்டு மற்றொரு இடத்திற்குச் செல்வதற்குக்கூட கறுப்பின மக்கள் அனுமதிக்கப்படாத அவல நிலை; ''வெள்ளையர்கள் மட்டும்'' என்ற போர்டு தொங்கிய அரசு மற்றும் தனியார் இடங்கள்; சட்டப்பூர்வமற்ற குடியிருப்புகள் என ஏழை கறுப்பர்களின் வீடுகளை இடித்தல்; பார்த்த வேலைக்கு அடிமாட்டுக் கூலி; கம்யூனிஸ்டுகள் என குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட கறுப்பின இளைஞர்கள் - சிறையில் மாயமாய் மறைந்த சோகம்; கறுப்பர்களின் விவசாய நிலங்களை அரசு பறித்து வெள்ளையர்களுக்குப் பகிர்ந்து கொடுத்த அநீதி.

கறுப்பர்கள் தொல்லை கொடுக்கிறார்கள் என்ற காரணத்தை முன்னிறுத்தி, வெள்ளை விவசாயிகள் சொந்தமாய் ஆயுதம் வைத்துப் பாதுகாத்துக் கொள்ளலாம் என அரசு அனுமதித்ததால் - கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு எனப் பெருகிய வெள்ளையர்களின் மனித உரிமை மீறல்கள், கறுப்பின மக்கள் மீது திணிக்கப்பட்ட வறுமை - விவரித்து விடுமளவு சிறிதல்ல.

ஹாலண்டிலிருந்து 1652இல் வந்த வெள்ளையர்களே தென்னாப்பிரிக்காவில் முதல் காலனிகளை உருவாக்கினார்கள். அதன்பிறகு பல்வேறு அய்ரோப்பிய நாடுகளிலிருந்து வந்த வெள்ளையர்கள் - உறவுரீதியாகக் கலந்து தங்களுக்கென்று ஒரு தனிப்பட்ட சமூகத்தையும், மொழியையும் 'ஆப்பிரிக்கன்ஸ்' என்ற பெயரில் உருவாக்கிக் கொண்டனர். இன்றும் தென்னாப்பிரிக்காவில் உள்ள வெள்ளையர்களில் 60 சதவிகிதம் பேர் ஆப்பிரிக்கன்ஸ் வழிவந்தவர்கள்தான்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் நடந்த போரின் மூலம் தென்னாப்பிரிக்கா, ஆப்பிரிக்கன்ஸ் பிடியிலிருந்து பிரிட்டிஷ் காலனி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு மாறியது. 1931ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா, பிரிட்டனின் பிடியிலிருந்த சிறுபான்மை வெள்ளையர்களின் கைகளுக்கு மாறியது. கறுப்பர்களுக்கு சொத்துரிமை மற்றும் வாக்குரிமை மறுத்தல், கறுப்பின மக்கள் தனியே வாழ வேண்டுமென்ற கட்டுப்பாடு, கறுப்பர்கள் சுதந்திரமாகப் பயணிக்கத் தடை, பொதுமக்களுக்கான வசதிகளில் வெள்ளையர்கள், வெள்ளையர்கள் அல்லாதவர்கள் என்ற பாகுபாடு போன்றவற்றினை வெள்ளையர்களின் அரசு சட்டமியற்றி நடைமுறைப்படுத்தியது.

மற்ற எல்லா இனவெறிகளின் போக்குகளையும் போலவே, தென்னாப்பிரிக்காவில் கோலோச்சிய இனவெறியும் பொருளாதார மற்றும் சமூக மேன்மையை அடைவதற்காகவே உருவாக்கப்பட்டிருந்தது.

1867இல் வைரமும் 1885இல் தங்கச் சுரங்கங்களும் தென்னாப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் மூலம் பெரும் லாபம் ஈட்ட நினைத்த வெள்ளையர்களுக்குச் சுரங்கங்களில் வேலை செய்ய பல்லாயிரக்கணக்கான ஆட்கள் தேவைப்பட்டனர். கறுப்பின மக்களின் விவசாய நிலங்களைக் கையகப் படுத்தியதன் மூலம், அவர்களை சுரங்கங்களில் வேலை செய்ய வெள்ளை முதலாளிகள் நிர்பந்தப்படுத்தினர்.

இந்த பெரும் தொழிலாளர் குழுமம், குறைந்த கூலியை எதிர்த்துப் பேசாதவாறு அரசே சட்டமியற்றியது. தொழிலாளர்கள் தப்பித்துவிடக் கூடாது என்பதற்காக, அவர்களது பயணங்களை ஒழுங்குபடுத்த சட்டம், தனியே குடியிருக்க

**என்பது ஆண்டுகளாக நிலவிய இனவெறியை எதிர்த்துப் போராடிய தென்னாப்பிரிக்க மக்களின் மாபெரும் எழுச்சி, உலகமெங்கும் பல்வேறு பெயர்களில் நிலவும் இனவெறியை எதிர்க்கவும் பாதிக்கப்பட்டவர்கள் திரண்டெழவும் உத்வேகமூட்டியது.**



படிப்பகம்

www.padippakam.com

# விடிந்தும் வெளிச்சமில்லை!

நடைமுறைகளில் எந்த மாற்றமும் இல்லை. அதிகாரிகள் வந்தார்கள், அவர்களுக்குப் பின்னால் காவல் துறையினர். இந்த இடத்தில் இருப்ப தெல்லாம் சட்டப்பூர்வமற்ற குடியிருப் புகள் என முடிவெடுக்கப்பட்டு - கறுப் பர்களின் வீடுகள் இடித்துத் தள்ளப்படு கின்றன. வெள்ளையர்களின் இனவெறி அரசு ஆட்சியில் இருந்தபோது நடை பெற்ற இது போன்ற நிகழ்வுகள், இன்னும் தென்னாப்பிரிக்காவில் தொடர்கின்ற ன.

இனவெறி காலகட்டத்திற்குப் பிறகு பதவியேற்ற அரசாங்கம் கொடுத்த பல வாக்குறுதிகள், இன்னும் நிறை வேற்றப்படவில்லை. தென்னாப்பிரிக் காவில் உள்ள 70 லட்சம் மக்கள் சரி யான குடியிருப்பு வசதியின்றி இருக்கி றார்கள் என 'அசோசியேட் பிரஸ்' தகவல் குறிப்பு தெரிவிக்கிறது.

தென்னாப்பிரிக்காவில் உள்ள நிலங்களில், எண்பது சதவிகித நிலங் களை வெள்ளையர்களே சொந்தம் கொண்டாடி வந்திருந்தார்கள். இன வெறிக்கெதிராய் போராடிய 'ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ்' அரசியல் அதிகாரத் தைக் கையிலெடுத்து ஏழு ஆண்டு களுக்கு மேலாகியும், நாட்டின் 72 சத விகித நிலங்கள் - மக்கள் தொகையில் 13.2 சதவிகிதமே இருக்கும் வெள்ளை யர்களிடமே உள்ளது.

பல்கலைக் கழகங்கள், பள்ளிகள் கறுப்பின மாணவர்களுக்குத் திறந்து விடப்பட்டாலும் - நாட்டில் படிப்பறிவு இல்லாதவர்களின் எண்ணிக்கை அதி களவில் உள்ளது. விவசாய வளர்ச்சி, சென்ற ஆண்டு ஆறு சதவிகிதம் குறைந்து விட்டது. இருபத்தி அய்ந்து சதவிகித மக்கள் வேலையிழந்து விட்டனர். கொலை, கொள்ளை, கற் பழிப்புக் குற்றங்கள் அதிகரித்து வரு கின்றன.

இந்நிலையில், ஆப்பிரிக்க கண் டத்திலுள்ள பெரும்பாலான நாடுகள் இணைந்து 'ஆப்பிரிக்க யூனியன்' ஒன்றை பொருளாதார மற்றும் சமூக ஒற்றுமைக்காக நிறுவியுள்ளனர், சர்வ தேச தளத்தில், இனவெறியும், இன வெறிக்கெதிரான போராட்டங்களும் வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ▪



வேண்டுமென்ற கட்டுப்பாடு என பிரிட் டிஷ் காலத்திலிருந்தே - தென்னாப்பிரிக்க அரசாங்கம் வெள்ளையர்கள் பணம் சம்பா திக்க உதவிக் கொண்டிருந்தது.

தென்னாப்பிரிக்காவில் வெள்ளை யர்களின் போக்கை எதிர்த்து, 'கறுப்பின ஆசிய மக்கள் தொழிற்சங்கம், மற்றும் கம்யூனிச இயக்கம் மூலம் தங்களது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கினர். 1912இல் தொடங்கப்பட்ட 'ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ்' (ANC) தென்னாப்பிரிக்க வரலாற்றை மாற்றியமைக்கும் வலுவோடு 1930, 40களில் வளரத் தொடங்கியது. நெல்சன் மண்டேலா, வால்டர், சிசிலு, ஒலியர் குடம்போ போன்றவர்களால் வழிநடத்தப்பட்ட - ஆப்ரிக்க தேசிய காங்கிரசின் இளைஞர் லீக், ஆப்பிரிக்க தேசிய வாதத்தை முன்னிறுத்தி ஆயுதப் போராட்டத்திற்காக மக்களை ஒருங் கிணைப்பதில் வெற்றிகரமாய் செயல் பட்டது.

சார்ப்வில்லே நகரில் 1960இல் நிகழ்ந்த ஓர் அமைதியான எதிர்ப்புப் போராட்டத்தினை நடத்தியவர்கள் மீது காவல் துறையினர் சுட்டதையடுத்து நூற்றுக்கணக்கானோர் இறந்தனர். இந் நிகழ்விற்குப் பிறகு தென்னாப்பிரிக்கா முழுவதும் - வெள்ளையர்களுக்கு எதி ரான போராட்டம் வெடித்தது.

இதனைத் தொடர்ந்து 'ஆப்ரிக்க தேசிய காங்கிரஸ்' உட்பட அனைத்து கறுப்பின அரசியல் இயக்கங்களும் தடை செய்யப் பட்டன. இதனால் இந்த இயக்கங்கள் அண்டை நாடுகளிலிருந்து செயல்படத் தொடங்கின. ஆயுதப் போராட்டம் வலுப் பெறத் தொடங்கியவுடன், அரசாங்கத்தின் அதிகாரப் பிடி மேலும் இறுகியது. நெல்சன் மண்டேலா உட்பட பல முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். தேசிய 'எமர்ஜென்சி' நடைமுறைப்படுத் தப்பட்டது.

1970களில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, மாணவர்களையும் பெண்களை யும் போராட்டத்தில் குதிக்கச் செய்தது. 'கறுப்பின அறிதல்' என்ற பெயரில் கறுப் பின அரசியல் செயற்பாடுகள் மக்களை ஒரு திரளாய் ஒன்றிணைத்தது. 1961இல் 'காமன் வெல்த்' நாடுகள் மற்றும் 1963இல் அய்.நா. அவை, தென்னாப் பிரிக்க அரசின் இனவெறிப் போக்கைக் கண்டித்துத் தடை விதித்தன. சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் தென் னாப்பிரிக்கா பங்கேற்கத் தடை விதிக்கப் பட்டது.

1978லிருந்து 1989வரை பிரதமராக இருந்த பீட்டர் வில்லியம் போத்தா, தனது பதவிக் காலத்தின் இறுதியில், சர்வதேச நிராகரிப்பு மற்றும் உள்நாட்டு யுத்தம் காரணமாக அரசாங்கப் பிடிகளை சற்றுத் தளர்த்தினார். அவருக்குப் பிறகு பதவியேற்ற டி கிளார்க், எல்லா இன மக் களும் பங்கேற்கும் அரசாங்கத்தினை உருவாக்கிட சட்டங்களை மாற்றத் தொடங் கினார். 'எமர்ஜென்சி' நிலை திரும்பப் பெறப்பட்டது. கறுப்பின மக்களின் அரசியல் இயக்கங்கள் மீதான தடையும் அகற்றப்பட்டது.

1994இல் அனைத்து இன மக்களும் பங்கேற்ற முதல் தேர்தலில், ஆப்ரிக்க தேசிய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட மண்டேலா பெரும் வெற்றியைப் பெற்று அதிபரானார். எண்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட தென்னாப்பிரிக்காவின் இன வெறிக்கெதிரான போராட்டம், அரசியல் ரீதியாக முடிவுக்கு வந்துவிட்டது. புத்து யிர் பெற்ற தென்னாப்பிரிக்காவிற்கு - மண்டேலா அய்ந்து ஆண்டுகள் பதவி வகித்து ஓய்வும் பெற்றுவிட்டார்.

உலகமெங்கும் உள்ள இனவெறிக்கு எதிராக டர்பனில் நடைபெறும் மாநாடு, தென்னாப்பிரிக்கப் போராட்டத்தின் மற்றொரு நீட்சியாகத்தான். ●



படிப்பகம்

இ ர ங் க ல்

# தமிழ் சினிமாவின் முகம்

தன் ஆரம்பம் முதல் இன்று வரை தமிழ் மக்களின் வாழ்வை சீரழித்து - சூறையாடி, அவர்களின் நடை, உடை, பாவனை, ரசனைகளைத் தீர்மானிக்கிற தீய சக்தியாக விளங்கும் தமிழ் சினிமாவால் ஒரு சதவிகிதம் கூட இந்த மக்களுக்குப் பயன் இருந்ததில்லை என்பது உலகறிந்த செய்தி.

இருந்தும், 'தகுதியும் திறமையும் - பிறப்பின் அடிப்படையிலேயே' என்ற அழுகலைத் தன் பூர்வீகமாகக் கொண்ட இந்த தேசத்தில், தன்னையறியாமலேயே ஒரு பதிலை தந்திருக்கிறது தமிழ் சினிமா.

ஆம், எம்.ஆர். ராதா, டி.எஸ்.பாலையா, ரங்கா ராவ், மனோரமா என்று இந்திய அளவில் மிகப்பெரிய திறமை சாலிகளையும்,

'இந்த உலகில் எங்கே இருக்கிறானடா, எங்களைவிட திறமைசாலி' என்று சிவாஜியையும், இளையராஜாவையும் உலகளாவிய எடுத்துக்காட்டுகளாக நிறுத்தியிருக்கிறது தமிழ் சினிமா.

பிறப்பிற்கும் - திறமைக்கும்
படிப்பிற்கும் - திறமைக்கும்

இருந்த பிரம்மாண்டமான முடிச்சைத் தன்னையறியாமலேயே அவிழ்த்தெறிந்தார்கள் இந்தக் கலைஞர்கள். பார்ப்பனர்களைப் பார்த்து தந்தை பெரியார் கேட்ட கேள்விக்கு விளக்க உரையே இவர்கள்.

"சிவாஜி நடிப்பு மிகைப்படுத்தப் பட்ட நடிப்பாகவே (Over Acting) இருக்கிறது" என்று 'கலை இலக்கியம் யாவும் அவாளுக்கே' என்ற கொள்கையைக் கொண்ட அசோகமித்ரன் போன்ற இலக்கிய மேதைகள், தங்களின் ரசனை மூலமாக அவர்களின் தகுதி, திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆம், தமிழர்கள் இயல்பாகவே அதிகம் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். சிவாஜியின் நடிப்பும் அப்படியே.

தமிழர்கள் உரக்க கத்திப் பேசும் பழக்கமுடையவர்கள். சிவாஜியின் உச்சரிப்பும் அப்படியே.

வீரபாண்டிய கட்டபொம்மனில், 'வானம் பொழிகிறது...' என்று உணர்ச்சிகளின் கொந்தளிப்பாய் எழுதப்பட்ட வசனத்தை, தளர்ந்த நிலையில் நின்று - வாடிய முகத்துடன் வார்த்தைகளுக்குள் இடைவெளிவிட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து கலைப்பட (Art Film) பாணியிலா பேச முடியும்?

அந்த வசனத்தை சிவாஜி பேசிய முறையைத் தவிர, வேறு எந்த பாணியில் பேசியிருந்தாலும் எடுபட்டு இருக்காது.

இயக்குனரும், கதாசிரியரும் அந்த கதாபாத்திரத்தை எப்படி உருவாக்கி இருக்கிறார்களோ, அதைத்தான் ஒரு நடிகனால் செய்ய முடியும். அதை மிகச் சிறப்பாக அழகியலோடு செய்து முடித்தவர் சிவாஜி ஒருவரே. (பாடல் காட்சிகள் அதிகம் கொண்ட தமிழ் சினிமாவில் தமிழ்ப்பட இயக்குனர்களின் இயக்கத்தில் - புகழ் பெற்ற 'ஹாலிவுட்' நடிகர் மார்லன் பிராண்டோ நடித்திருந்தால், அவரின் திறமையைப் பற்றியும் கேள்விகள் எழுந்திருக்கும்)

இவர்களின் 'மிகைப்படுத்தப்பட்ட நடிப்பு' என்ற குற்றச் சாட்டிற்கு சிவாஜி தன் பல படங்களில் பதில் தந்திருக்கிறார்.

'பாசமலர்' படத்தில், 'மலர்ந்தும் மலராத...' என்று மென்மையாக தென்றலோடு தென்றலாக மிதந்து வரும் அந்தப் பாடலில், சோகம் நிரம்பிய சிவாஜியின் முகம் அந்தக் காட்சியின் அத்தனை சோகங்களையும் அழுத்திச் சொல்லும்.



ஒரு சிறந்த நடிகன், Action-னைவிடவும் Reaction-னிலேயே கெட்டிக்காரனாக இருக்க வேண்டும். தான் வசனம் பேசி நடிப்பதில் மட்டும் திறமையாக இருந்தால் போதாது. தன் எதிர் கதாபாத்திரம் பேசுகிற வசனத்திற்குத் தன் உணர்வுகளைப் பெடருத்தமாக? சிறப்பாக வெளிப்படுத்துபவனே சிறந்த நடிகன்.

இது, சிவாஜிக்கு கை வந்த கலை, முகம் வந்த கலை. 'தில்லானா மோகனாம்மாள்' படத்தில் காதலின் ஊடலை வெளிப்படுத்துவது போல் ஒரு பாடல்,

*'மறைந்திருந்து பார்க்கும்*
*மர்மம் என்ன'*

-என்று பத்மினி பாடிக் கொண்டு ஆடுவது போல் உள்ள அந்தப் பாடலில், காதல், வெட்கம் பெருமிதம் என்று பரவசமான நிலையில் உணர்வுகளை வெளிப்படுத்தும் சிவாஜியின் முகபாவங்களை ஆயிரம் முறை பார்த்தாலும் அலுக்காது. அந்தப் பாடலில் அவர் காட்டுகிற Reaction னே அவர் ஒரு உலக மகா கலைஞர் என்பதை மீண்டும் உலகிற்கு அறிவித்தது.

> **சிவாஜி என்கிற கலைஞனைக் கழித்து விட்டு தமிழ் சினிமாவை நினைத்துப் பாருங்கள்... சிவாஜியின் திறமை என்னவென்று தெளிவாகத் தெரியும்.**

சிவாஜி என்கிற கலைஞனைக் கழித்து விட்டு தமிழ் சினிமாவை நினைத்துப் பாருங்கள்... சிவாஜியின் திறமை என்ன வென்று தெளிவாகத் தெரியும்.

தந்தை பெரியாரால் 'சிவாஜி' என்று அழைக்கப்பட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் கடைசி ஆசை, தந்தை பெரியாராக நடிக்க வேண்டும் என்பதே.

அவரின் அந்தக் குரல், பெரியார் திடலுக்குக் கேட்கவில்லை போலும்!

**- வே. மதிமாறன்**



படிப்பகம்

www.padippakam.com



# "அரசாணை 44அய் உடனே நடைமுறைப்படுத்துக"

## தலித் சேனா பொதுக்குழு தீர்மானம்

**தூத்துக்குடியில் 14.7.2001இல் நடைபெற்ற பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:**

**தீர்மானம் 1**

மூத்த தமிழ் அறிஞரும், நான்குமுறை தமிழ் நாட்டின் முதல்வராகப் பதவி வகித்தவருமான, 78வயதை அடைந்த கலைஞரை, அ.தி.மு.க. அரசின் காவல் துறையினர் கைது செய்த போது நடந்த நிகழ்வுகளை மாநிலப் பொதுக்குழு வன்மை யாகக் கண்டிக்கிறது. அதே நேரத்தில் மய்ய அமைச்சர்கள் மாண்புமிகு மாறன் மற்றும் மாண்புமிகு டி.ஆர்.பாலு அவர்களை அவமதித்த செயல்களையும் கண்டிக்கிறது.

**தீர்மானம் 2**

மய்ய அமைச்சர்களை கொச்சைப் படுத்திய நிகழ்ச்சியை சுட்டிக்காட்டி, இதேபோல் பீகார் மாநிலத்திலும் மய்ய அமைச்சர்களான மாண்புமிகு ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் மற்றும் மாண்புமிகு நிதிஷ்குமார் போன்றோரை நடத்து வோம் எனக்கூறிய முன்னாள் பீகார் மாநில முதல்வர் லாலு பிரசாத் யாதவை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர் மீது மய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருகிறது.

**தீர்மானம் 3**

தமிழக அரசு, உச்சநீதி மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் 20.5.1998 அன்று ஓர் அரசாணை (ஆணை எண்: 44) பிறப்பித்தது. இதன்படி, தாழ்த் தப்பட்ட, பழங்குடியினருக்கு அரசுத் துறைகளிலும் பொதுத் துறைகளிலும் தலித் மக்களை நேரடியாக நியமனம் செய்ய வேண்டும். ஆனால், தி.மு.க. அரசு திடீரென இந்த ஆணையை ரத்து செய்து விட்டது. தற்பொழுதுள்ள அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தவுடன் இந்த ஆணையை நடைமுறைப் படுத்துவோம் என்று உறுதியளித் திருந்தது. ஆனால், இன்னும் அது நிறைவேற்றப் படவில்லை. எனவே, அரசாணை எண். 44அய் தமிழக அரசு உடனே நடைமுறைப் படுத்தும்படி இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 4**

அரசு அலுவலகங்களில் பணியாற்றும் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் சமூகத்தைச் சார்ந்த அலுவலர்கள் மீது பாகுபாடு குறித்து (பதவி உயர்வு அளிக்காமை மற்றும் அடிக்கடி இடம் மாற்றுவது) தேசிய எஸ்.சி./எஸ்.டி. ஆணையத்திற்கு எண்ணற்ற புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இது, தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மீது இழைக்கப்படும் கொடுமையாகும். எனவே, இந்தியா 'சுதந்திரம்' பெற்று 53ஆண்டுகள் கழிந்த பின்பும் இதே நிலை இனியும் நீடிக்கும் என்றால், சமூக நீதி பெற தலித் சேனா போராட்டங்களில் ஈடுபடும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 5**

பெரும்பான்மையான மாநில அரசுகள், தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்காக ஒதுக்கப்படும் நிதியை வேறு துறைகளுக்காக செலவிட்டு வருகின்றனர். அல்லது செலவிடாமலேயே அந்தப்பணம் திருப்பி அனுப்பப்படுகிறது. இதனால் தலித் மக்களுக்குரிய நலத்திட்டங்கள் சென்றடையாமல் தடுக்கப்படுகிறது. எனவே, மாநில அரசுகள் தங்களின் நிதி நிலையை வெளிப்படையாகத் தெரிவித்து இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படுவதையும் செலவிடப்படாமல் விடப்படும் நிதியையும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**தீர்மானம் 6**

இதுவரை பல போராட்டங்கள் நடத்தியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சேர வேண்டிய பஞ்சமி நிலங்களை இதுவரை தமிழக அரசு மீட்டெடுத்துத் தரவில்லை. எனவே, தமிழக அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என தலித் சேனா வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 7**

தமிழ் நாட்டில் நிலவும் இரட்டை டம்ளர் முறை, தாழ்த் தப்பட்ட மக்களுக்கு என்று தனிச்சுடுகாடு போன்ற சாதிக் கொடுமைகளை ஒழிக்க அரசு பல முறை உறுதிய ளித்தும் இது போன்ற மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இதை முற்றிலும் ஒழிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலி யுறுத்துகிறது.



ஏ.பி. வள்ளிநாயகம், பெ. சந்திரசேகன், எஸ். நடராஜன், எஸ். நம்பியார்

**தீர்மானம் 8**

2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தாழ்த்தப்பட்ட இன மலைவாழ் மக்கள் தொகைக் கேற்ப மத்திய, மாநில அரசுப்பணிகளில் இட ஒதுக்கீட்டின் விகிதத்தை அதிகரிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 9**

செட்யூல்டு இன பழங்குடி சமுதாயத்தைச் சார்ந்த நீதிபதிகள் இன்னும் பதவி உயர்வின்றி கீழ் நீதிமன்ற நீதிபதிகளாகவே உள்ளனர். எனவே, நீதிமன்றப்பதவிகளில் இட ஒதுக்கீட்டைப் பின் பற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் படுகின்றது.

**தீர்மானம் 10**

மத்திய அரசு இந்திய அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய முனைந்திருப்பதை இந்த பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் 11**

உலக மயமாக்கல், தனியார் மயமாக்கல் மூலம் செட்யூல்டு இன பிற்படுத்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு இட ஒதுக்கீட்டு உரிமை பறிக்கப்படுகின்றது. இந்நிலை மாற தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று இந்தப் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 12**

தலித் கிறிஸ்தவர்களுக்கும் அவர்களின் சமூக நிலையை கருத்தில் கொண்டு இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று இந்தப் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 13**

அய்.அய்.டி.யில் செட்யூல்டு இன பிற்படுத் தப்பட்ட மலைவாழ் மக்களுக்குப் பேராசிரியர் நியமனங்களிலும் மாணவர் சேர்க்கையிலும் இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவது இல்லை. இந்நிலை மாறவில்லை என்றால், தலித் சேனாவின் மாபெரும் போராட்டத்தைச் சந்திக்க வேண்டி யிருக்கும் என இந்த பொதுக்குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 14**

சாதி உள்நாட்டு விவகாரம் அல்ல, 30 கோடி தலித் மக்களை ஒடுக்கும் உலகளாவிய பிரச்சனை. எனவே, அய்க்கிய நாடுகள் அவை, தென்னாப்பி ரிக்காவின் டர்பன் நகரில் நடக்கும் இனவெறிக்கு எதிரான உலக மாநாட்டில், சாதி, தீண்டாமை பற்றி விவாதிக்க மத்திய அரசு தடை போடக்கூடாது என்று பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

தமிழ் நாடு தலித் சேனாவின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும், தமிழ் நாடு லோக் ஜன சக்தி பொதுச் செயலாளருமான **ஆர்.கே.எஸ்.** என எல்லோராலும் பாசமுடன் அழைக்கப்பட்ட **ஆர்.கே. சுவாமிநாதன்** அவர்களின் திடீர் மரணம் நம்மை இந்த ஆண்டு சோகமயத்தில் ஆழ்த்தியது. அவரின் இழப்பு, நம் இயக்கத்திற்கும், அரசியல் கட்சிக்கும், தொழிலாளர் அமைப்புகளுக்கும் பேரிழப்பாகும். அவரின் இழப்பால் வாடும் அவரது மனைவி பிள்ளைகளுக்கும் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள், தோழர்களுக்கும் மாநில பொதுக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது. ●



படிப்பகம்

மடல்கள்

# மாற்ற முயற்சிப்பாயா?




◇ 'தலித் முரசு' சூலை மாத அட்டைப் படம் என்னைக் கேள்வி கேட்கிறது - 'இதையெல்லாம் மாற்ற நீ முயற்சி செய்வாயா' என்று. மீனா மயில் புகைப்படம், கவிதை அருமை. கண்டதேவி தலையங்கம் - அனைத்து கட்சிகளையும் அம்பலப்படுத்தியது. பத்திரிகையாளர்களை நோக்கி மண்ணாங்கட்டி நியாயம் கேட்டிருப்பது நியாயம்தான். சித்ரா, முடக்காத்தான் பாண்டியன் படுகொலை பற்றிய உண்மை நிலையை அறிய முடிந்தது. மால்கம் எக்ஸ் இப்போதே ஆவலைத் தூண்டுகிறது.

-பா. வேதாச்சலம், *கள்ளிச்சேரி*

■ படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் புரியும் வகையில் 'ஒரு நாடு பறிக்கப்பட்ட கதை'யில் இஸ்ரேல் - பாலஸ்தீன சண்டைக்கு என்ன காரணம் என்பதை அருமையாக, ரத்தினச் சுருக்கமாக வெளியிட்டமைக்குப் பாராட்டுகள். எப்பாடுபட்டாகிலும் சாதி, தீண்டாமை பற்றி ஒரு விவாதத்தை அய்.நா. அவையில் ஏற்படுத்தி வெற்றி பெற வேண்டும்.

- டாக்டர் கே. சுந்தரேசன், *கோவை*

■ 'இந்தியாவில் இனவெறி இப்படித்தான்' - சித்ராவிற்கு நேர்ந்திருக்கும் கொடுமை கண்களில் நீரை வரவழைத்தது. தலித் பெண் என்பதால்தானே காவல் துறை இந்தளவுக்கு அலட்சியம் காட்டுகிறது? இது, தலித் சமூகத்தையே அவமதிக்கும் செயல் அல்லவா? இது போன்ற கொடுமைகளை இனியும் அனுமதிக்க முடியாது.

- ப. தங்கவேல், *அனகாபுத்தூர்*

■ நாள்தோறும் வன்முறைக்கு ஆளாகும் மக்களுக்கு - அதை எதிர்த்துப் போராடும் வலிமையையும் உத்வேகத்தையும் அளிக்கக்கூடிய இதழாக 'தலித் முரசு' வெளிவருவது கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

- சி. சக்கரை, *அகரம் பள்ளிப்பட்டு*

■ தாமிரபரணி படுகொலைகளும் தடைசெய்யப்பட்ட படைப்பாக்க முயற்சிகளும் கட்டுரை, தலித் கலைஞர்கள் மீது ஆதிக்க வெறிபிடித்த அதிகார வர்க்கத்தின் மிருகத் தனத்தையே காட்டுகிறது. இந்தப் போக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள பேச்சு மற்றும் சிந்தனை வெளிப்பாட்டு உரிமையை மீறுவதாகும்.

- துர்கை அம்மன், *உக்கடம்*

■ தலித் முரசு சூலை இதழ் மிக அருமை. நெஞ்சைத் தொடும் கட்டுரைகள் மிக அதிகம்.

-தமிழ்ப்பித்தன், *நீடாமங்கலம்*

■ ஈராயிரம் ஆண்டு ஒடுக்குமுறைக்கு எதிராக, இலக்கிய ரீதியில் உரிமைக் குரல் கொடுத்து வருவதில் இன்று தமிழகத்தில் 'தலித் முரசு' முன்னோடி. சூலை மாத இதழில் வெளியான ''அடிமை முறை கொடியது; தீண்டாமை அதனினும் கொடியது'' - புரட்சியாளர் அம்பேத்கருடைய அந்தக் கட்டுரை மிக அருமை. அதனை மொழிபெயர்த்த சோபகன், நேர்த்தியான பணியினைச் செய்திருக்கிறார். வாழ்த்துகள்.

-எஸ். குரூஸ்துரை, *தாராபுரம்*

■ ரவிக்குமார் எழுதும் 'போராளி மால்கம் எக்ஸ்' ஆரம்பமே வேகம். மால்கம் எக்ஸ் யார்? - தெரிந்துகொள்ள மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறேன்.

-ரகசியன், *குடியேற்றம்*

## சரியான பார்வையல்ல...

◇ நர்மதையில் வாழ்வு இழந்தவர்களும் - இழக்கப் போகுபவர்களும், சுற்றுச்சூழல் பிரச்சினைகளால் நாடு முழுவதும் அவதிக்குள்ளாவதும் தலித் மக்கள்தான். தமிழகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள்தான் குடிக்க நீரின்றித் தவிக்கிறார்கள். நீரைத் தேடி நாள்தோறும் மைல் கணக்கில் நடக்கிறார்கள். சாதி இந்துக்களுக்கு 'மினரல் வாட்டர்' பஞ்சமில்லை. அ.மார்க்ஸ், மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி - சூழலியல் பிரச்சினைகளைப் பின்னுக்குத் தள்ளுகிறார். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமையில் சுற்றுச் சூழல் பெரும் பங்கு வகிக்கிறது.

''ஒடுக்கப்பட்ட மக்களின் சுற்றுச் சூழல் உரிமைகளும் மனித உரிமைகளே.'' தலித் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் திரும்பிப் பார்த்தால், குடிநீர் உரிமைகளுக்கான அவர்களின் போராட்டம் - கோயில் நுழைவுப் போராட்டத்தைக் காட்டிலும் முக்கியமானதாகக் கருதப்பட்டு வந்தது புரியும். மனித உரிமைகளும் சூழலியலும் ஒன்றுக் கொன்று இணையானதே. எனவே, இதைப் பிரித்துப் பார்ப்பது சரியான பார்வையாகாது. ■

- சி.மா. பிரிதிவிராஜ், *கோவை*

■ இருபதாண்டுகளுக்கு முன் பகுகுணா, தெஹ்ரி அணைப் போராட்டத்தைத் தொடங்கிய போது - இந்துத்துவ சக்திகளின் ஆசியையோ ஆதரவையோ பெறவில்லை. சமவெளிகளிலுள்ள லட்சக்கணக்கான கீழ்சாதி விவசாயிகளும் பாதிக்கப்படுவர். 'தலித்துகள் உள்ளிட்ட ஏழை மக்களின் இருப்புக்கே உலை வைக்கப்படும்' என்ற பிரச்சனையை சரியாக அடை யாளம் காட்டியவர் அவர்தான்.

அவர் பார்ப்பனராகவும் இந் துத்துவத்துடன் கைகோர்த்துச் செல்பவராகவும் இருந்தாலும் - அப்பிரச்சனையில் உடனடி முக் கியத்துவம் சற்றும் குறைவ தில்லை. இப்பிரச்சனையை பகு குணாக்களிடம் விட்டு விடக் கூடாது. தலித் தலைவர்களும் இடது சாரிகளும் கையிலெடுத் துக்கொள்ள வேண்டும் என்பது தான் என் வாதுரை.

இது, பார்ப்பனீயத்துக்கு பார்ப்பனருக்கும் வக்காலத்து வாங்குவதாக - 'அறிவுரை வழ குவதாக' கூறுகிறார் அ.மார்க்ஸ் பின் நவீனத்துவவாதிகளை பொறுத்தவரை, 'ஒரே ஒரு உண்மை என்பது ஏதும் இல்லை. பல உண் மைகள் உள்ளன.' அ. மார்க்ஸ் தனது 'உண்மையை' தாமே போற்றி வளர்க்கட்டும்.

முன்னுரிமை என்பது எ றும் மாறாத நிலையான ஒ றல்ல. கொடியங்குளம் எரிய போது அதற்குத்தான் முன் ரிமை. கூடங்குளம் எரிக்கு போது அதற்கும் முன்னுரிமை

-எஸ்.வி. ராஜதுரை, *சென்*



படிப்பகம்

www.padippakam.com



# சட்டத்தால் சாதியை ஒழிக்க முடியுமா?

இந்த நாட்டில் இன்று இரண்டே சாதிகள் தாம் சாஸ்திரத்தில் - சட்டத்தில் இருந்து வருகின்றன. அவை, 'பிராமண சாதி', 'சூத்திர சாதி' அதாவது, மேல்சாதி, கீழ்சாதி. எனவே, இன்று ஒழிக்கப்பட வேண்டிய சாதிகள் - மேற்கண்ட 'பிராமணன்', 'சூத்திரன்' எனப்பட்ட சாதிகளே யாகும்.

'பிராமணன்' எல்லாத் துறைகளிலும் மேன்மையும் சுகமும் அனுபவிப்பதோடு, உடலுழைப்பும் இல்லாமல் ஊரார் உழைப்பில் சுக வாழ்வு, உயர்வாழ்வு வாழ நல்வாய்ப்பு உள்ளது. இந்தப் படியான சமூகக் குறையையும் வாழ்க்கை முறையையும் சரி நிலை, சரி பங்கு அடைய முடியாத தடைகளையும் ஒழிப்பதன் மூலமே - சாதிக் கேட்டை பெருமளவு ஒழிக்க முடியும்.

இதற்கு அரசாங்க அரசியல் கிளர்ச்சி என்பதன் மூலம் செய்யப்பட வேண்டிய காரியம் ஏதாவது இருக்கிறதா என்றால், ஒரே ஒரு காரியம்தான் உண்டு. அதாவது, இரண்டு சாதி மக்களுக்கும் சரி சமத்துவ விகிதத்தில் எல்லாப் படிப்பும் கிடைக்கும்படிச் செய்தல்; இரண்டு சாதி மக்களுக்கும் உத்தியோகம், பதவி, ஆட்சித் தலைமை ஆகியவைகளில் மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதப்படி, சாதிவாரி உரிமையளித்து அந்தப்படி அந்தந்தச் சாதியை அமர்த்துதல்.

இந்த இரண்டு காரியமும் செய்வதற்கு மக்கள் சட்டசபைக்கோ, நாடாளுமன்றத்திற்கோ போவதால் சாதிக்க முடியாது. இதற்காக அங்கு போய்ச் செய்யவேண்டியகாரியம் இன்று சாத்தியமானதல்ல. சட்டசபையும், நாடாளுமன்றமும் இந்தக் காரியம் செய்ய முடியாத நிபந்தனைக்கு, கட்டுப்பாட்டுக்கு அடிமைப்பட்ட இடங்களாகும்.

ஆனால், ஆட்சியை இந்த இரண்டு காரியங்களையும் செய்யக்கூடாது என்று அரசியல் சட்டம் தடுப்பதில்லை; செய் என்று நிர்ப்பந்தப்படுத்தக் கூடாதபடிதான் அவை அமைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எதுபோல் என்றால், ஒரு பார்ப்பானை அவனது சாதி அந்தஸ்தைக் காட்டும் உச்சிக் குடுமியையும், பூணூலையும் எடுக்கும்படி சொல்ல நமக்கு அதிகாரம் இல்லை. ஆனால், அவன் தானாக உச்சிக் குடுமியைக் கத்திரித்துக் கொள்வதையும் பூணூலை அறுத்து எறிந்துவிடுவதையும் செய்வதில் அவனுக்கு ஒரு தடையும் இல்லை.

இதற்கு நாம் என்ன செய்யமுடியும்? நாம் உச்சிக் குடுமியும், பூணூலும் போட்டுக் கொண்டால் அவைகளுக்கு மரியாதை கிடைத்துவிடுகிறது. ஆகவே, நாம் செய்யக்கூடியதெல்லாம் அவைகளுக்கு மதிப்பில்லாமல், அவைகளைக் கண்டால் மக்கள் வெறுக்கும்படி செய்தால் - அவைகளை, அவர்களே - பார்ப்பனர்களே எடுத்துவிடுவார்கள்; அல்லது மறைத்துக்கொள்ளுவார்கள்.



எல்லா சாதியானுக்கும் சர்க்கார் உத்தியோகம், பதவி ஆகியவைகளில் எண்ணிக்கை விகிதம் முன்பின் பாராமல் கிடைக்க முயற்சிக்க வேண்டும். இதையும் பார்ப்பானைத் தவிர வேறு எவனும் தடுக்க வரமாட்டான். இதற்கு இக்காரியங்கள் செய்யப்படுவதற்குக் கிளர்ச்சிதான் வேண்டுமே தவிர சட்டசபை, நாடாளுமன்றம் தேவை இல்லை.

உண்மையான பொதுத் தொண்டு ஆர்வமுள்ள மனிதன் - தனது முயற்சி, உழைப்பு, செல்வம், தியாகம் ஆகியவைகளை இதற்காகச் செலவழிப்பதுதான் நாணயமும் ஒழுக்கமும் யோக்கியமும் ஆன காரியமாகும்.

'இந்தக் காரியங்களில் சாதி ஒழிந்துவிடுமோ?' என்று தங்களை 'அறிவாளிகள்' என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் கேட்கலாம். அப்படிப்பட்டவர்களை நான் கேட்பதாவது: தம்பி! நீ சாதி ஒழிக்கப்பட வேண்டியது முக்கியமும் முதலாவதுமான காரியம் என்று நினைக்கிறாயா?' என்பதுதான். 'ஆம் நினைக்கிறேன்' என்றால், 'அதற்காக இதுவரை நீ செய்தது என்ன? அதற்கு ஆதாரம் என்ன? அதனால் ஏற்பட்ட பலன் என்ன?' என்பதே எனது தாழ்மையான அடுத்த கேள்வியாகும்.

அதற்காக நான் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து, பாடுபட்டு சட்டசபைக்குப் போனேன்; நாடாளுமன்றத்துக்குப் போனேன்' என்று சொல்லக்கூடும். 'சரி, நீ போனாய்; அங்கு போய் சாதியை ஒழிக்க நீ என்ன செய்தாய்? கேள்வி கேட்டாயா? மசோதா கொண்டு போனாயா?

'கேள்வி கேட்டேன்; மசோதா கொண்டு போகவில்லை' என்று நீ சொல்லக்கூடும். என்றாலும் இரண்டும் உன்னால் ஆகக்கூடிய காரியமல்ல. ஏனென்றால், சட்டசபையில் சாதிப் பேச்சுக்கே இடமில்லை; ஆதலால் அங்கு கேட்டிருக்க முடியாது; கேட்டாலும் பயன் இல்லை. ◇

- *'விடுதலை'* - 13.12.1960

> "நாடாளுமன்றத்தில் மசோதா கொண்டு போயிருக்கலாம். அங்கு காங்கிரஸ் தவிர பல கட்சிகள் உண்டு. அதற்கு வேண்டிய தகுதி, திறமை, வசதி, வாய்ப்பு உனக்கில்லாவிட்டாலும், உள்ளவர்கள் கொண்டு போயிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்குக் கிடைத்த பயன் (பதில்) என்ன தெரியுமா உனக்கு? அதுதான், 'சட்டத்தால் சாதியை ஒழிக்க முடியாது' என்பது தான். அத்தோடு தீர்ந்துவிட்டது அந்தப் பேச்சு."

படிப்பகம்

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN / CPMG-151 / 2001 Posted at Patrika Channel Egmore RMS / 1 Periodicals
Registered with the Registrar of Newspapers for India Under No. 71325 / 97 Licensed to Post without Prepayment Licence No. 47

# இந்தியாவில்

ஒவ்வொரு மணி நேரமும்
இரண்டு தலித் மக்கள்
**தாக்கப்படுகின்றனர்**

ஒவ்வொரு நாளும்
மூன்று தலித் பெண்கள்
**பாலியல் வல்லுறவுக்கு**
**ஆட்படுகின்றனர்**

ஒவ்வொரு நாளும்
இரண்டு தலித் மக்கள்
**படுகொலை**
**செய்யப்படுகின்றனர்**

ஒவ்வொரு நாளும்
இரண்டு தலித்
மக்களின் வீடுகள்
**தீக்கிரையாக்கப்படுகின்றன**



## இதற்குப் பிறகுமா
## தென்னாப்பிரிக்காவில்
## ஜாதி, தீண்டாமை பற்றி
## விவாதிக்கத் தடை?

Owned and Published by P. Chandragesan from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 ar
printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesa